28°c
32°c
26°c
தெளிவான காலநிலை காணப்படும்

# உதயன்

பக்கம் 24

UTHAYAN - A Lively National Tamil Daily

விலை: யாழ். – 20/= வன்னி – 20/= கொழும்பு – 30/=

சுடர்: 29 கதிர்: 186 வள்ளுவர் ஆண்டு: 2045

வைகாசி 17, சனி 31.05.2014

# தமிழ் - முஸ்லிம் உறவை வலுவாக்க விரைவில் பேச்சு

## கூட்டமைப்பும், முஸ்லிம் காங்கிரஸும் நேற்று சந்தித்து நடத்திய கலந்துரையாடலில் முடிவு

யாழ்ப்பாணம், மே 31
கிழக்கு மாகாணத்தில் தமிழ் - முஸ்லிம் உறவு என்ற வரையறையுடன் நில்லாது, அந்த உறவு தேசிய அளவுக்கு நகர்த்தப்பட வேண்டும் என்பதை ஏற்றுக்கொண்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியும், அதற்கான பேச்சை எதிர்காலத்தில் முன்னெடுப்பது என்று தீர்மானித்துள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்கும் இடையிலான உயர்மட்டச் சந்திப்பு நேற்று மாலை கல்முனை மாநகர சபையில் நடைபெற்றது. அந்தச் சந்திப்பின்போதே இரு தரப்புகளும், மேற்படி தீர்மானத்தை எடுத்துள்ளன.

அந்தச் சந்திப்பின்போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பாக நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை. சேனாதிராசா, எம்.ஏ.சுமந்திரன், ப.அரியநேந்திரன், பொன். செல்வராஜா மற்றும் சீ.யோகேஸ்வரன் ஆகியோரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் சார்பாக அந்தக் கட்சியின் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீமும் கலந்துகொண்டனர்.

இந்தச்சந்திப்பின்பிரதான இலக்கு கல்முனை நகரசபையில்



21ஆம் பக்கம் பார்க்க

## பெண் எம்.பிக்கள் அமெரிக்காவுக்கு

கொழும்பு, மே 31
இலங்கை விவகாரம் தொடர்பாக, இலங்கையைச் சேர்ந்த பெண் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன், தெற்கு மத்திய ஆசியப் பிராந்தியத்துக்கான அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலர் நிஷா பிஸ்வால் பேச்சு நடத்தியுள்ளார்.

இலங்கையின் ஆளும்கட்சி மற்றும் எதிர்க்கட்சியைச் சேர்ந்த பத்து பெண் நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழு அமெரிக்காவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது.

அமைச்சர்கள் சுமேதா ஜெயசேன, பவித்ரா வன்னியாராச்சி, மற்றும் சுதர்சினி பெர்னாண்டோபுள்ளே, கமலா ரணதுங்க, சிறியானி விஜேவிக்கிரம, உபேக்சா சுவர்ணமாலி ஆகிய ஆளும்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும்,

21ஆம் பக்கம் பார்க்க

## தீர்வுத் திட்டமொன்றை முன்வைக்க வேண்டும்

### இலங்கையிடம் கோருகிறது பிரிட்டன்

கொழும்பு, மே 31
இலங்கையில் வட பகுதியில் பெருமளவு உட்கட்டுமான வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ள போதிலும், மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு காத்திரமான நடவடிக்கை எவையும் மேற்கொள்ளப்படவில்லை என்று தெரிவித்துள்ள பிரிட்டன், இலங்கை அரசு அரசியல் தீர்வுத் திட்டம் ஒன்றை முன்வைக்க வேண்டும்என்றும்வலியுறுத்தியுள்ளது.

"இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள பிரிட்டன் தூதரக அரசியல்துறைப் பொறுப்பாளர் டானியல் பெயின்ரர், "மனித உரிமை மேம்பாடு,

21ஆம் பக்கம் பார்க்க

## காணாமற்போனோர் அறிக்கை ஜூன் மாத இறுதியில் வெளியீடு

கொழும்பு, மே 31
காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை நடத்தும் ஜனாதிபதி ஆணைக்குழு தனது இடைக்கால விசாரணை அறிக்கையை அடுத்த மாத இறுதியில் வெளியிடவுள்ளது.

இந்தத் தகவலை குறித்த ஆணைக் குழுவின் தலைவர் மெக்ஸ்வெல் பரணகம நேற்று உறுதிப்படுத்தினார்.

இதற்கான பணிகளை முன்னெடுப்பதற்கென அதிகாரிகள் மட்டத்திலான குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது என்றும், மேற்படி குழு தமது பூர்வாங்கப் பணிகளை ஆரம்பித்துள்ளது என்றும் அறியமுடிகின்றது.

அதேவேளை, காணாமற்போனோர் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துவரும்

21ஆம் பக்கம் பார்க்க

## இந்திய பாதுகாப்பு ஆலோசகராக டோவல்

புதுடில்லி, மே 31
நரேந்திர மோடி தலைமையிலான புதிய இந்திய அரசின் தேசியப் பாதுகாப்பு ஆலோசகராக அஜித்குமார் டோவல் நியமனம் செய்யப்பட்டிருக்கின்றார். இது தொடர்பான உத்தியோகபூர்வ அறிக்கையை புதிய இந்திய அரசு நேற்று விடுத்துள்ளது.

டோவல் முன்னர் இந்திய உளவுத் துறையான ஐ.பியின் தலைவராக 2004 - 2005 ஆம் ஆண்டுகளில் பணியாற்றி

21ஆம் பக்கம் பார்க்க

## அச்சுறுத்தல் சுவரொட்டிகளை பல்கலையில் ஒட்டியது யார்?

### அடுத்தவாரமே பதிலளிப்பாராம் பொலிஸ் அதிகாரி

யாழ்ப்பாணம், மே 31
புலி ஆதரவு துண்டுபிரசுரங்கள் ஒட்டியவர்கள் என்று கூறப்படுபவர்கள், உடனடியாக கைது செய்யப்படும் நிலையில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இருமுறை துண்டுப் பிரசுரங்கள் ஒட்டப்பட்டமை தொடர்பில் யாராவது இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனரா? - என்று எழுப்பட்ட கேள்விக்கு, அது தொடர்பில் அடுத்தவாரமே பதிலளிக்க முடியும் என்று கூறியுள்ளார்

21ஆம் பக்கம் பார்க்க

## செய்தியாளர்களைக்கூட உள்ளேவிட வசதியற்ற முதலமைச்சர் அலுவலக வாடகை ரூ. 3 லட்சம்



முதலமைச்சரின் அலுவலகம்

### எந்த மாகாணத்திலும் இல்லாத சலுகை என்றுவேறு கூறுகிறது சபை நிர்வாகம்

யாழ்ப்பாணம், மே. 31
செய்தியாளர்களைக்கூட உள்ளே அழைத்துப் பேசுமளவிற்கு இடவசதியற்ற, வடமாகாண முதலமைச்சர் அலுவலகத்திற்கு மாதாந்தம் மூன்று லட்சம் ரூபாய் வாடகையாகச் செலுத்தப்படுகின்றது என்று சபை நிர்வாகம் தெரிவிக்கின்றது.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் இருந்து வடக்கு தனியே பிரிக்கப்பட்ட பின்னர், அதற்கான தனியான கட்டமைப்பு வசதிகள் கடந்த காலங்களில் ஏற்படுத்தப்படவில்லை. மாங்குளத்தில் அது அமைவதே

21ஆம் பக்கம் பார்க்க

## நாடு கடந்த குற்றங்களை தடுக்க ஒப்பந்தம்

கொழும்பு, மே 31
இலங்கையும் ரஷ்யாவும் நாடு கடந்த குற்றங்களைத் தடுக்கும் ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடவுள்ளன என்று ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

21ஆம் பக்கம் பார்க்க

## மோடி - ஜெயலலிதா ஜூன் 3 இல் சந்திப்பு

பக்கம் 14

## அச்சுவேலி முக்கொலை; விளக்கமறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம், மே 31
அச்சுவேலி, கதிரிப்பாயில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பேர் வாளால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள தனஞ்செயனுக்கு எதிர்வரும் 13 ஆம் திகதி வரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

மல்லாகம் நீதிமன்றில் மேலதிக

21ஆம் பக்கம் பார்க்க

## பன்முகப்படுத்தப்பட்ட நிதியை அதிகரிக்க வடக்கு மாகாண அமைச்சரவை ஒப்புதல்

யாழ்ப்பாணம், மே 31
வடக்கு மாகாண சபை உறுப்பினர்களுக்கான பன்முகப் படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டை அதிகரிப்பதற்கு வடக்கு மாகாண அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது என்று கூறப்படுகின்றது.

வடக்கு மாகாணசபையின் இந்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் கடந்த ஆண்டு வடக்கு மாகாண பேரவைச் செயலகத்தில் நிறைவேற்றப்பட்டது. அதில் வடக்கு மாகாண முதலமைச்சருக்கு 6 மில்லியன் ரூபாவும், அமைச்சர்கள் 4 பேருக்கும் 5 மில்லியன்

21ஆம் பக்கம் பார்க்க

உங்கள் குடும்ப முன்னேற்றத்திற்கான ஜூன் மாத சஞ்சிகை

இம்மாத இதழுடன் தரம் 5 மாணவர்களுக்கான விசேட எதிர்பார்க்கை வினாத்தாள் (பகுதி I + II) இலவச இணைப்பாக வெளிவருகின்றது

பல சுவாரஸ்யமான விடயங்களுடன் இதோ நாளை வெளிவருகிறது!

தமிழ்ச் சஞ்சிகை வரலாற்றில் தன்னிகரில்லாத முன்னணிச் சஞ்சிகை

உங்கள் பிரதிகளுக்கு முகவர்களை உடன் நாடவும்

OLIARAZI
மாத சஞ்சிகை
ஒளிஅரசி
இல்லத்தரசிகளின் தோழி
ஒளி - 01 இதழ் - 07
ஜூன் 2014
பக்கங்கள்:68

அன்பு + அறிவு + அழகு + திறன் + போட்டி + வாழ்த்து + பொழுதுபோக்கு

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# ரணிலால் நாட்டை கட்டியெழுப்ப முடியும்

## கரு ஜெயசூரிய கூறுகின்றார்



கொழும்பு, மே 31

நாட்டை மீண்டும் கட்டியெழுப்பி தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் இலங்கைக்கு நற்பெயரை ஏற்படுத்திக் கொடுக்கும் தெளிவான நோக்கு, ஆசியாவின் அனுபவமிக்க அரசியல்வாதியான ரணில் விக்கிரமசிங்காவிற்கே இருக்கின் றது என்று தெரிவித்துள்ளார் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவச் சபை தலைவர் கரு ஜயசூரிய.

கொழும்புக் கிளப்பில் நடைபெற்ற தலைமைத்துவச் சபையின் கூட்டம் ஒன்றின்போது தனக்கு நெருக்கமான ஒருவரிடம் கரு ஜயசூரிய இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

2001 ஆம் ஆண்டு வீழ்ச்சியான நிலைமையில் இருந்த இலங்கையின் பொருளாதாரத்தை 2004 ஆம் ஆண்டில் 8.5 வீதம் என்ற உயர்ந்த நிலைக்கு ரணில் கொண்டு வந்தார் எனவும் அதன்போது கரு ஜயசூரிய சுட்டிக்காட்டியுள்ளார்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை இரத்துச்செய்து சுயாதீன ஆணைக் குழுக்களை ஏற்படுத் தும் அரசியல் அமைப்பு திருத் தம் ஒன்று அவசியம் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார் என்று கூறப்படுகின்றது. (ற)

# மோடிக்கு என்ன பதில்?

## சபையில் கேட்பாராம் ரணில்

கொழும்பு, மே 31

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு இந்தியப் பிரதமர் மோடி வலியுறுத்தியுள்ளமை தொடர்பில் இலங்கை அரசின் உத்தியோகபூர்வ நிலைப்பாடு என்னவென்பதை பகிரங்கப்படுத்துமாறு எதிர்வரும் 3ஆம் திகதி நாடாளுமன்றில் விசேட கூற்றொன்றை விடுத்து எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கேள்விக் கணைகளைத் தொடுக்கவுள்ளார்.

நாடாளுமன்றம் எதிர்வரும் 3 ஆம் திகதி கூடவுள்ளது. இதன்போது, நிலையியற் கட்டளைச் சட்டத்தின் 23/2ஆம் பிரிவின் கீழ் விசேட அறிக்கையொன்றை விடுத்தே, 13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் ரணில் விக்கிரமசிங்க சில முக்கிய கேள்விகளை எழுப்பவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசில் அங்கம் வகிக்கும் ஜாதிக ஹெல உறுமய, தேசிய சுதந்திர முன்னணி ஆகிய பங்காளிக்கட்சிகள் 13 ஆவ்து திருத்தச்சட்டம் நீக்கப்படவேண்டும் என வலியுறுத்தி வருகின்றன. குறிப் பாக, தேசிய சுதந்திர முன்னணி ஜனாதிபதியிடம் முன்வைத்துள்ள 12 கோரிக்கைகளுள் 13ஆவது திருத்தச்சட்டம் இல்லாதொழிக்கப்படவேண்டும் என்ற கோரிக்கையே முதலாவது கோரிக்கையாக முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், 13ஆவது திருத்தச்சட்டம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவேண்டும் என்று இலங்கை அரசிடம் மோடி வலியுறுத்தியுள்ளார். அரசிலுள்ள மேலும் சிலர் 13 பிளஸ் எனக் கூறிவருகின்றனர். எனவே, பங்காளிக் கட்சிகளின் கோரிக்கையை ஏற்று 13 ஆவது திருத்தச்சட்டத்தை அரசமைப்பிலிருந்து நீக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா? அல்லது அதில் திருத்தங்களை மேற்கொள்ளுமா? இல்லையேல், மோடியின் கோரிக்கை நிறைவேற்றப்படுமா? இது விடயத்தில் அரசின் உத்தியோகபூர்வ நிலைப்பாடு என்ன? என்றே எதிர்க்கட்சித் தலைவர் கேள்விகளை எழுப்பவுள்ளார் என்று ஐ.தே.க. வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது. (ற)



கடலாமைக் குஞ்சுகளை கடலுக்கு விடும் நிகழ்வில், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கலந்துகொண்டார். பெந்தோட்டை பிரதேசத்துக்குச் சென்ற ஜனாதிபதிக்கு கிடைத்த அழைப்பின் பேரிலேயே இந்த நிகழ்வில் அவர் கலந்துகொண்டார்

# இரணைதீவில் மக்களை மீள்குடிமர்த்த வேண்டும்

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கோரிக்கை

கிளிநொச்சி, மே 31

கிளிநொச்சி இரணைதீவு மக்கள், தமது சொந்த இடங்களுக்குச் சென்று தொழில் செய்வதற்கும், அங்கு வாழ்வதற்கும் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைப் பெற்றுத் தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. நேற்று நடைபெற்ற கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின்போதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நேற்று வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோரின் இணைத்தலைமையில் நடைபெற்றது.

அதில் கடந்த ஏப்ரல் மாதம் 22 ஆம் திகதி நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்ட விடயங்களில் ஒன்றான போரால் இடம்பெயர்ந்தவர்கள் இதுவரை தமது சொந்த இடங்களில் மீள்குடியமர்த்தப்படவில்லை. அந்த வகையில் இரணைதீவு மக்கள் அவர்களது சொந்த இடத்தில் மீள்குடியேற்றப்படாது. அந்தப் பகுதியை இராணுவம் ஆக்கிரமித்து வைத்துள்ளது என்ற விடயம் வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, சுரேஷ் பிரேமச்சந்திரன் மற்றும் சி.சிறீதரன் ஆகியோரால் பிரஸ்தாபிக்கப்பட்டது.

அது தொடர்பில் நேற்றைய கூட்டத்தில் அறிக்கை சமர்ப்பித்த பூநகரிப் பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன்,

இரணைதீவு மக்கள் 1992 ஆம் ஆண்டு அங்கிருந்து வெளியேறினர். அப்போது 183 குடும்பங்கள் அங்கு இருந்தன. அவர்கள் இரணைமாதா நகர் எனும் பகுதியில் குடியேற்றப்பட்டு வாழ்கின்றனர். தற்போது 314 குடும்பங்கள் உள்ளன. கடந்த மாதம் நடைபெற்ற கூட்டத்தை அடுத்து அந்தப் பகுதி மக்களைச் சந்தித்துத்துக் கலந்துரையாடினேன். அவர்கள் சொந்த இடத்தில் மீள்குடியமர்வதற்கும், தொழில் செய்வதற்குமான அனுமதியைப் பாதுகாப்பு அமைச்சிடம் பெற்றுத் தருமாறு கோரினர். அவர்களது கோரிக்கை தொடர்பாக மாவட்ட அரச அதிபருக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளேன் - என்று அவர்தெரிவித்துள்ளார்.(ற-18-55)

# ஜப்பானில் இலங்கையர் உட்பட மூன்றுபேர் கைது

டோக்கியோ, மே 31

ஜப்பானில் வெளிநாட்டு மாணவர்கள் மீது முட்டை மற்றும் கல்வீச்சுத் தாக்குதல் நடத்திய சம்பவம் தொடர்பில் இலங்கை உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த இளைஞர்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

18, 19 வயதான இந்த இளைஞர்கள் இலங்கை, வியட் நாம் மற்றும் நேபாளம் நாடுகளைச் சேர்ந்தவர்களாவர்.

குறித்த இளைஞர்கள் பல முறை காரில் இருந்தவாறு வெளிநாட்டு மாணவர்கள் மீது முட்டைகளை வீசியுள்ளனர்.

கடந்த 20 ஆம் திகதி இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் இரண்டு சந்தேக நபர்கள் குற்றத்தை ஒப்புக் கொண்டுள்ளனர். எனினும் மூன்றாவது நபர் தனக்கு குறிப்பிட்ட சம்பவம் குறித்து எது வும் தெரியாது என்று பொலிஸாரிடம் கூறியுள்ளார்.

இதுகுறித்துப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற)

# ரூ. 50 லட்சத்துக்கு மேல் மோசடி எனில் கொழும்பு சென்றே முறையிட வேண்டும்

## யாழ்.உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 31

ரூபா 50 லட்சத்துக்கு அதிகமான தொகை மோசடி செய்யப்பட்டிருப்பின் அதுகுறித்த முறைப்பாடுகளை இங்குள்ள பொலிஸ் நிலையங்களில் ஏற்க முடியாது. கொழும்பில் உள்ள குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸாரிடமே முறையிட முடியும். அந்த வகையிலேயே வெளிநாட்டுக்கு அனுப்பி வைப்பதாகத் தெரிவித்து ஒரு கோடியே 58 லட்சம் ரூபா மோசடி செய்ததாகக் கூறப்படும் கஸ்தூரியார் வீதியைச் சேர்ந்த பெண்ணிடம் பணத்தைக் கொடுத்தவர்களிடம் கொழும்பு சென்று முறையிடுமாறு கூறப்பட்டது - இவ்வாறு தெரிவித்துள்ளார். யாழ். உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எம்.திலகரட்ண.

வெளிநாடு அனுப்பி வைப்பதாகத் தெரிவித்து பெருந்தொகைப் பணத்தை மோசடி செய்தார் என்று கூறப்படும் கஸ்தூரியார் வீதியைச் சேர்ந்த பெண் ஒருவரின் வீட்டின் முன், பணம் கொடுத்து ஏமாந்தவர்கள் கடந்தவாரம் திரண்டு பணத்தைத் திருப்பிக் கொடுக்குமாறு பிரச்சினையில் ஈடுபட்டனர். அதையடுத்துகுறித்தபெண்ணை யாழ்.பொலிஸார் கைது செய்திருந்தனர். ஆயினும் 50 லட்சம் ரூபாவுக்கு அதிகமான தொகை மோசடி செய்யப்பட்டுள்ளதால் அதுகுறித்து தம்மால் நடவடிக்கை எடுக்க முடியாது என்று தெரிவித்து குறித்த பெண் பின்னர் பொலிஸாரால் விடுவிக்கப்பட்டுள்ளார். அவர் குற்றத்தடுப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்படவில்லை என்றும் கூறப்படுகின்றது.

இதுகுறித்து நேற்று நடைபெற்ற வாராந்த பொலிஸ் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

குறித்த பெண், வெளிநாட்டுக்கு அனுப்பி வைப்பதாகத் தெரிவித்துப் பலரிடம் பணம் பெற்றுள்ளார். அவரிடம் முதலில் சிக்கியவர் தனது பிள்ளையைவெளிநாட்டுக்கு அனுப்ப முற்பட்ட வல்வெட்டித்துறையைச் சேர்ந்த பெண் ஒருவர். அவரிடம் சாதுரியமாகப் பேசிய வெளிநாட்டுக்கு அனுப்பி வைப்பதாகக் கூறிய பெண், உங்கள் மகனை மட்டுமல்ல, வேறு யாராவது இருந்தாலும் கூட்டி வாருங்கள் அவர்களையும் அனுப்பி வைக்கிறேன் என்று கூறியுள்ளார். அதை நம்பிய வல்வெட்டித்துறைப் பெண்ணும், மேலும் 5 பேரிடம் பணத்தை வாங்கிக் கொடுத்துள்ளார்.

அதன்பின் வெளிநாடு செல்வதற்குரிய எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதன் பின்னரே குறித்த பெண்ணின் சுயரூபம் தெரிந்தது. அவரது வீட்டுக்கு வந்து பணத்தைப் பறிகொடுத்தவர்கள் பிரச்சினையில் ஈடுபட்டுள்ளனர்.(ற-4)

# கொக்குவில் வாள்வெட்டுக்கும் ஆவா குழுவுக்கும் தொடர்பா?

## தெரியாது என்கிறனர் பொலிஸார்

யாழ்ப்பாணம், மே 31

அண்மையில் கொக்குவில் பகுதியில் இடம்பெற்ற வாள் வெட்டுச் சம்பவத்தில் பாதிக்கப்பட்டுள்ளவர் தெரிவித்துள்ள முறைப்பாட்டில், வாள்வெட்டில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் விளக்கமறியலில் இருந்து நீதிமன்றினால் பிணையில் விடுவிக்கப்பட்ட ஆவா குழுவைச் சேர்ந்த இருவரும் உள்ளடங்குகின்றனர் என்று தெரிவிக்கப்படும் நிலையில், அவர்கள் இதுவரை கைதாகவில்லை என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தத் தகவலை யாழ். பொலிஸ் நிலையத்தில் நேற்று இடம்பெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எம்.திலகரட்ண தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறும்போது:

கொக்குவிலில் 6 பேர் வாள் வெட்டில் ஈடுபட்டுள்ளனர் என்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அவர்களில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். ஏனைய 5 பேரும் இதுவரை கைது செய்யப்படவில்லை. அவர்கள் அனைவரும் தற்போது தலைமறைவாகியுள்ளனர்.

அவர்களில் ஆவா குழுவைச் சேர்ந்தவர்கள் உள்ளனரா என்பது தொடர்பில் அடுத்த வாரம் சந்திப்பில் கூறமுடியும்"- என்று தெரிவித்தார்.

அதேவேளை, குறித்த சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்கள் அது தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்த பின்னர், மூன்றாவது நாளன்று ஆவா குழுவினரின் வழக்கு நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

அதன்போது வழக்கின் சந்தேகநபர்கள் அனைவரும் முன்னிலையாகியிருந்தனர். எனினும் அந்தச் சந்தர்ப்பத்தின் போது குறித்த இருவரையும் பொலிஸார் கைது செய்யவதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் கூறப்படுகின்றது. (ற-4)

# டில்லியில் நேற்று திடீர் புயல்

புதுடில்லி, மே 31

கடும் வெயில் அடித்துவந்த டில்லியில் நேற்று வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு திடீரென புயல் காற்று வீசியுள்ளது. சூறாவளிக் காற்றுடன் பலத்த மழை பெய்ததால் நகரின் பல இடங்களில் மின் கம்பங்கள் முறிந்து மின்தடை ஏற்பட்டுள்ளதுடன், மரங்கள் பல இடங்களில் சரிந்து விழுந்ததுள்ளன.

டில்லியில் மட்டுமல்லாமல் அருகே உள்ள நொய்டா, துவாரகா உள்ளிட்ட நகரங்களிலும் புயல் மழை பெய்தது. அதினால் அங்குள்ள மெட்ரோ ரயில் நிலையம் மூடப்பட்டது. திடீர் புயல் மழையால் டில்லிக்கு வந்து கொண்டிருந்த 11 விமானங்கள் திருப்பிவிடப்பட்டன. இந்த புயல் மழையால் டில்லியின் பலபகுதிகள் இருளில் மூழ்கின. நேற்றுமுன்தினம் 43.7 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை காணப்பட்டது. இதுவே டில்லியில் அடித்த உச்சபட்ச வெயில் ஆகும்.(ற)

## தனியார் பஸ் நடத்துநர் பணியிலிருந்து நிறுத்தப்பட்டார்

யாழ்ப்பாணம்.மே 31
நேரக்கணிப்பாளரைத் தாக்கிய நடத்துநரை விசாரணை முடியும் வரை கடமையில் இருந்து இடை நிறுத்தியுள்ளதாக யாழ்.பிராந்திய தனியார் பஸ் சங்கத்தின் இணையத் தலைவர் பொ.கெங்காதரன் அறிவித்துள்ளார்.

கடந்த 29 ஆம் திகதி யாழ்ப்பாணம்-தெல்லிப்பழை சேவையில் ஈடுபடும் தனியார் பஸ் ஒன்றின் நடத்துநர் குற்றப் பணம் விதித்த நடத்துநரை சுன்னாகம் பஸ் தரிப்பிடத்தில் வைத்து பயணிகள் முன்பாகத் தாக்கினார். இந்தச் சம்பவம் தொடர்பில் இணையத்துக்கு தெரியப்படுத்தியுள்ளதை அடுத்து கடமை நேரத்தில் அவ்வாறான செயலில் ஈடுபட்ட நடத்துநரை விசாரணைகள் முடியும் வரை இடைநிறுத்தப்பட்டுள்ளார்.


சம்பவம் தொடர்பாக மாவட்டச் செயலக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (வ-14)

## பிறரை அடித்த குற்றத்தில் 40பேர் கடந்தவாரம் கைது

யாழ்ப்பாணம். மே 31
பிறருக்கு அடித்துக் காயப்படுத்திய குற்றச்சாட்டில் யாழ்.குடாநாட்டில் கடந்த வாரம் 40 பேர் கைது செய்யப் பட்டுள்ளனர் என்று உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எம். திலகரட்ண தெரிவித்தார்.

யாழ்.பொலிஸ் நிலையத்தில் நேற்று இடம்பெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். இதன் போது அவர் மேலும் தெரிவிக்கையில்:

கொள்ளையடித்த குற்றச்சாட்டில் 3 பேரும், கடத்தல் தொடர்பில் ஒருவரும், மது போதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் 5 பேரும், அனுமதியின்றி மது விற்பனை செய்த குற்றச்சாட்டில் 7 பேரும், சந்தேகத்தின் பேரில் 22 பேரும், விபத்து ஏற்படுத்திய குற்றச்சாட்டில் 2 பேரும், அடித்து நட்டம் ஏற்படுத்திய குற்றச்சாட்டில் ஒருவரும், திருட்டுக் குற்றச்சாட்டில் 6 பேரும், மது போதையில் கலகம் விளைவித்த குற்றச்சாட்டில் 3 பேரும், சாரதி அனுமதிப்பத்திரமின்றி வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் 4 பேரும், பெரிய குற்றம் தொடர்பில் 7 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்-என்றார். (வ-4)



## புகைத்தல், மது ஒழிப்புத்திட்ட கொடிதினம்

திவிநெகும புகைத்தல் மற்றும் மது ஒழிப்பு வேலைத்திட்டம் மே-31-ஜூன் 15 வரையாகும். பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் முன்னெடுக்கப்படும் இவ் வேலைத் திட்டத்தில் கொடி விற்பனை மூலம் சேகரிக்கப்படும் பணத் தொகை சமூக அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக, குறிப்பிட்ட பிரதேச செயலர் பிரிவுகளில் சமூக நல நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படும். கடந்த 2013ஆம் ஆண்டில் கொடி விற்பனை மூலம் 10 லட்சத்து 125 ரூபா சேர்க்கப்பட்டது.

பாரம்பரிய சிறு கைத்தொழில் அபிவிருத்தி முயற்சி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, திவிநெகும அபிவிருத்தி திணைக்கள பணிப்பாளர் நாயகம் ஆர்.ஏ.ஏ.கே.ரணவக்க, பிராந்திய பணிப்பாளர் பந்துல திலக சிறி ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்துகொள்ளவுள்ளனர். (ஞ)

## தரமுகாமைத்துவ போட்டி முடிவுகள் விரைவில்

வடமராட்சி. மே 31
வடமாகாணத்தில் உள்ள மருத்துவமனைகள் மற்றும் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்களுக்கு இடையே வடக்கு சுகாதார அமைச்சால் நடத்தப்பட்ட தர முகாமைத்துவ விருதுக்கான போட்டி முடிவுகள் விரைவில் வெளியிடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

போட்டிகளில் பொது மருத்துவமனை மட்டத்தில் வவுனியா, முல்லைத்தீவு மாவட்ட பொது மருத்துவமனைகளும், ஆதார மருத்துவமனைகளில் பருத்தித்துறை, தெல்லிப்பழை, சாவகச்சேரி, ஊர்காவற்றுறை, மல்லாவி அரசினர் ஆதார மருத்துவமனைகளும், பிரதேச மருத்துவமனைகளில் கரவெட்டி, சங்கானை, வல்வெட்டித்துறை, புதுக்குடியிருப்பு, முருங்கன், நானாட்டான், காரைநகர், தலைமன்னார், அடம்பன், வேரவில் ஆகிய பிரதேச அரசினர் மருத்துவமனைகளும் போட்டிகளில் பங்குபற்றியுள்ளன.

பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் பணிமனைகளில் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் பணிமனைகளும், சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளில் கோப்பாய், உடுவில், பருத்தித்துறை, சாவகச்சேரி, பளை, பூநகரி, நானாட்டான், முல்லைத்தீவு, மல்லாவி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளும், ஆரம்ப சுகாதாரப் பிரிவில் யாழ்ப்பாணம், பருத்தித்துறை, கைதடி ஆரம்ப சுகாதாரப் பிரிவுகளும் போட்டிகளில் கலந்து கொண்டுள்ளன. (வ-173)

## பதின்ம வயது சிறுமிகள் மீது துஷ்பிரயோகம் 3 பேர் கைது

யாழ்ப்பாணம். மே 31
பதின்ம வயதுச் சிறுமிகளை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சிறுமி ஒருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் எதிர்வரும் 11 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பதின்ம வயதுச் சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் இருவரும் கைது செய்யப்பட்டுளனர். இருவரும் நாளை மறுதினம் மல்லாகம் நீதிமன்றில் மீள முற்படுத்தப் படவுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (வ-4)

## எமது சமுதாயத்தின் சாபக் கேடாக விளங்குவது போதைப்பொருள்கள்

### சங்கானையில் நடைபெற்ற போதைப்பொருள் தின நிகழ்வில் வலி.மேற்கு பிரதேச சபை தவிசாளர் தெரிவிப்பு



வலி.மேற்கு பிரதேச சபை தவிசாளர் உரையாற்றுகிறார்.

யாழ்ப்பாணம், மே 31
எமது சமுதாயத்தின் சாபக் கேடாக தற்போது விளங்குவது போதைப்பொருள்கள். அவற்றின் பயன்பாடு அதிகரிக்கும் வேளையில் நாம் பல சிக்கல்களை சந்திக்க நேரிடுகின்றது. போருக்குப் பிந்திய காலச் சுழலில் போதைப் பொருள் பயன்பாடு அதிகரிப்பை புள்ளி விவரங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

இவ்வாறு தெரிவித்தார் வலி. மேற்கு பிரதேச சபை தவிசாளர் திருமதி நாகரஞ்சினி ஐங்கரன்.

இந்து மகா சபையின் ஏற்பாட்டில் சர்வதேச புகைத்தல் மற்றும் போதைப்பொருள் தின நிகழ்வு சங்கானை பொதுச் சந்தைக்கு முன்பாக நேற்றுக் காலை 9 மணிக்கு நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு பேசியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இந்த நிகழ்வில் பிரதேச செயலர், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், இந்து மகாசபையினர் மற்றும் பொது மக்கள் பலரும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய தவிசாளர்,

எமது பிரதேச சபையில் நடைபெற்ற கடந்த கூட்டத்தின் போது பாடசாலைகளில் இருந்து 500 மீற்றர் தூரத்தில் சிகரெட் விற்பனை செய்ய முடியாது என்ற சட்டத்தை உருவாக்கியுள்ளோம். இதேவேளை - இன்றைய தினம் எமது பிரதேசத்தில் எங்குமே சிகரெட் விற்பனை செய்யக்கூடாது என்றும் குறிப்பிட விரும்புகின்றேன். இதற்கும் மேலாக சிகரெட் விற்பனை செய்யாத கடைகளுக்கு சிறப்பு சான்றிதழ் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

இதேவேளை - இன்றைய தினத்திலிருந்து பொது இடங்களில் மற்றும் பொதுமக்களுக்கு அசௌகரியம் ஏற்படத்தக்க வகையில் போதை மற்றும் புகைப்பொருள்களை பயன்படுத்துவது வலி. மேற்கில் முற்றாகத் தடை செய்யப்படுகின்றது.

அதனைத் தொடர்ந்து 'சீர் கெட்ட சிகரெட்' எனும் தொனிப் பொருளில் வாகனங்களுக்கு ஸ்ரிக்கர்களை ஒட்டும் பணியை தவிசாளர் ஆரம்பித்து வைத்தார். (வ)

## இந்து ஆலயங்களின் விவரம் திரட்டல்

யாழ்.மாவட்ட செயலகத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள சுற்றறிக்கைக்கு அமைய வலி.தென்மேற்கு பிரதேசத்தில் உள்ள சகல இந்து ஆலயங்களின் விவரங்களும் பிரதேச செயலகங்களினால் திரட்டப்பட்டு வருகின்றன.

இந்து சமய கலாசார திணைக்களத்தினால் கோரப்பட்டுள்ள இருபது விதமான விவரங்கள் அடங்கிய விண்ணப்பப் படிவங்கள் சகல ஆலய நிர்வாக சபைகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் 6ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பப் படிவங்களைப் பூரணப்படுத்தி அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-115)

## மாற்றலின்றி யாழ்.வலயத்திலுள்ளோர் அதிகாரிகளுக்கு வேண்டப்பட்டோரே

### மேலதிக ஆசிரியர்கள் இருப்பதற்கு இதுவே காரணம் எனக் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம். மே 31
ஏனைய மாவட்டங்களில் பணிபுரியாத 200 இற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் இடமாற்றம் எதுவுமின்றி யாழ். வலயத்திலேயே தொடர்ந்தும் பணியாற்றி வருகின்றனர். அதனாலேயே யாழ்.வலயத்தில் மேலதிக ஆசிரியர்கள் உள்ளனர் என்று கூறியுள்ள இலங்கை ஆசிரியர் சங்கத்தின் யாழ்ப்பாணப் பிரதிநிதிகள், அத்தகைய ஆசிரியர்கள் அதிகாரிகளுக்கு வேண்டப்பட்டவர்களாக உள்ளமையே அவர்கள் இடமாற்றம் செய்யப்படாமைக்கான காரணம் எனத் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

அதிகாரிகளுக்கு வேண்டிய ஆசிரியர்கள் பலர் யாழ். வலயத்திலேயே அதிகமாக வுள்ளனர். தீவக வலயத்தில் பணியாற்றிய ஆசிரியர்களை அவர்களது வசிப்பிடம் யாழ். வலயத்துக்குட்பட்டதாக உள்ள நிலையில் எதற்காக கோப்பாய் கோட்டத்துக்கு இடமாற்றம் வழங்குகிறார்கள்?

**யாழ்.வலயத்தில் மேலதிகமாக 162 ஆசிரியர்கள் உள்ளனர் என்றும், வலிகாம வலயத்தில் 72 ஆசிரியர்களுக்குப் பற்றாக் குறை உள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது.**

யாழ்.வலயத்தில் மேலதிக ஆசிரியர்கள் உள்ளனர் என்று கூறப்பட்டது. அதற்கு அதிகாரிகளின் பக்கச்சார்பான போக்கே காரணம். யாழ்.வலயத்தில் மேலதிகமாக 162 ஆசிரியர்கள் உள்ளனர் என்றும், வலிகாம வலயத்தில் 72 ஆசிரியர்களுக்குப் பற்றாக் குறை உள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது.

யாழ். வலயத்திலுள்ள மேலதிக ஆசிரியர்களை வலிகாம வலயத்துக்கு மாற்றுவதாகக் கூறப்பட்டுள்ளது. அவ்வாறு இடமாற்றம் வழங்கினாலும் கூட குறித்த இரண்டு வலயத்திலும் மேலதிக ஆசிரியர் எண்ணிக்கை காணப்படும். அவ்வாறிருக்கையில் ஏனைய மாவட்டங்களில் பல வருடங்கள் பணியாற்றி தமது சொந்த வலயங்களுக்கு வருபவர்களை அதே வலயத்தில் ஏன் நியமிக்கக்கூடாது?

பலவருடங்களாக இடமாற்றம் இன்றி யாழ்.வலயத்தில் உள்ள ஆசிரியர்களை அதிகாரிகள் தமக்குவேண்டியவர்கள் என்று பாராது இடமாற்றம் வழங்க வேண்டும்.

அவர்கள் நீதியாக நேர்மையாக இடமாற்றங்களை வழங்குவார்களேயானால் மேலதிகம் என்ற பிரச்சினையே இருக்காது. யாழ். வலயத்தில் முன்னர் இருந்த உத்தியோகத்தர்களே தற்போதும் உள்ளனர்'' என்று தெரிவிக்கப்பட்டது. (வ-4)

# மாநகர வேலைப்பகுதி பதில் தொழிலாளர்கள் நியமனம் வழங்கக்கோரி மீண்டும் கவனவீர்ப்பு

## இன்னும் காலம் தேவை என்கிறார் ஆணையாளர்

யாழ்ப்பாணம், மே 31


யாழ்.மாநகர சபையில் சுமார் 10 வருடங்களாக பதில் தொழிலாளிகளாகப் பணிபுரியும் 10 பேர் தமக்கு நியமனம் வழங்குமாறு கோரி யாழ். மாநகர சபை முன்றிலில் நேற்றுக் காலை தொடக்கம் கவன வீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

நியமனம் தருவதாகக் கூறி இன்று வரை யாழ். மாநகர ஆணையாளர் காலத்தை இழுத் தடித்து வருகிறார். அவர்கள் பக்கச்சார்பாக நடந்தே தமக்கு நியமனம் செய்ய மறுத்து வருகிறார்கள் என்று கவனவீர்ப்பில் ஈடுபட்டு வருபவர்கள் கூறுகின்றனர்.

'நாம் கோரும் நியமனம் அன்றாட உணவுக்கு; ஆடம்பர வாழ்க்கைக்கு அல்ல, 2012, 2013 காலப் பகுதியில் கடமையாற்றியவர்களுக்கும் இதுவரை மாநகர சபையில் கடமை செய்யாதவருக்கும் நியமனம் வழங்கப்பட்டது எந்த அடிப்படையில்? லஞ்சமா? அரசியல் தலையீட்டின் அடிப்படையிலா? நேர்முகத் தேர்வா?, அமைச்சரே, மூப்பு அடிப்படையில் நியமனம் வழங் காத 10 வேலைப்பகுதி தொழிலாளர்களுக்கும் நியமனம் வழங்குங்கள், நிர்க்கதியாக்கப்பட்ட தொழிலாளர்களின் குடும்பம் வாழ வேண்டுமா? அல்லது சாக வேண்டுமா? கூறுங்கள் அமைச்சரே, 2008,2009 காலப்பகுதியில் வேலைப்பகுதியில் கடமையாற்றிய 10 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்காதது ஏன்?, மூப்பு அடிப்படையில் நியமனம் வழங்கப்படும் என்று கூறிய ஆணையாளரே, முதல்வரே நீங்கள் செய்வது நியாயமா? நீதியா? நாடகமா? சொல்லுங்கள்!, நாம் கேட்பது சலுகை அல்ல, எமது உரிமையையே ஆகிய வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு அவர்கள் கவன வீர்ப்பில்ஈடுபட்டனர்.

ஜி.சீ.ஈ. சாதாரண தர பரீட்சையில் 6 பாடங்களில் சித்தியடைந்தவர்களுக்குத்தான் நியமனம் வழங்கப்படும் என்று கூறி நாம் கடந்த செப்ரெம்பர் 31 ஆம் திகதி வேலையிலிருந்து இடைநிறுத்தப்பட்டோம். அதனால் போராட்டம் நடத்தினோம். அதனையடுத்து மூப்பு அடிப்படையில் நியமனம் செய்வதாகவும் கூறியிருந்தனர். நாம் 37 பேர் உள்ளபோதும் 27 பேருக்கு மாத்திரம் கடந்த ஏப்ரல் 23 ஆம் திகதி நியமனக் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. ஆனால் எமக்கு மாத்திரம் (10 பேர்) நியமனக்கடிதம் வழங்கப்படவில்லை.

மாநகர எல்லைக்குள் இருப்பவர்களுக்குத்தான் நியமனம் என்று கூறுகிறார்கள். எம்மில் கொட்டடி, நாவாந்துறை பகுதிகளைச் சேர்ந்தவர்களும் உள்ளனர். அவர்களுக்கு நியமனம்வழங்கப்படவில்லை. ஆனால் மாநகர சபையில் இதுவரை வேலை செய்திராத பலருக்கும் நியமனம் வழங்கப்பட்டுள்ளது. அவர்களில் பலர் யாழ். மாநகரசபை எல்லைக்குள் வசிக்காதவர்களே. அவர்களுக்கு எந்த அடிப்படையில் நியமனம் வழங்கியுள்ளீர்கள்? ஏன் பக்கச் சார்பாகச் செயற்படுகிறீர்கள்? என்று அவர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.



கவனவீர்ப்பில் ஈடுபட்டோர்

இது தொடர்பில் யாழ்.மாநகர ஆணையாளர் எஸ்.பிரணவநாதனுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது அவர் தெரிவித்ததாவது:-

"குறித்த 10 பேருக்கும் நேர்முகத்தெரிவு நடத்தி அதில் அவர்கள் தெரிவாகியிருக்கவில்லை. அவர்களில் நீண்ட காலம் கடமையாற்றியவர்களும் உள்ளனர். எனவே அவர்களை நீக்க முடியாது. அதனால் அவர்களை எப்படி நிரந்த ரமாக்குவது என்பது தொடர்பில் சிந்தித்து வருகிறோம். நிய மனம் செய்ய சிறிது தாமத மாகலாமே தவிர நிச்சயம் நியமனம் வழங்கப்படும். நியமனம் செய்யப்பட்டவர்களில் புதிதாக எவரும் சேர்க்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறு சேர்க்கப்பட்டுள்ளவர்களை அடையாளங் காட்டுவார் களேயானால் அவர்களை உடனடியாக இடைநிறுத்துவோம்"- என்றார். (வ-4)

---


## மரண அறிவித்தல்

### பரசுராமன் சிவபாதசுந்தரம்

(முன்னாள் இலங்கை வங்கி உத்தியோகத்தர்)



கல்முனையைப் பிறப்பிடமாகவும் மீசாலை வடக்கை வதிவிடமாகவும் கொண்ட பரசுராமன் சிவபாதசுந்திரம் நேற்று (30.05.2014) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பரசுராமன் - சிவநேசம் தம்பதியரின் மகனும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - பொன்னம்மா தம்பதியரின் மருமகனும் இராசபூபதியின் அன்புக் கணவரும் திருமதி சிவகாமசௌந்தரி (ஓய்வுநிலை அதிபர்), காலஞ்சென்ற திருச்சச்சிதானந்தசிவம் மற்றும் சிவலோகநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற திருமதி மகேஸ்வரி மற்றும் திருமதி மனோன்மணி, திருமதி ரத்தினபூபதி, தர்மபாலன், விஜயபாலன், பத்மநாதன், திருமதி யோகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்ற ராமலிங்கம் மற்றும் நாகலிங்கம், இராசரத்தினம், திருமதி சாந்தநாயகி, திருமதி சகுந்தலாதேவி, திருமதி ஜெயலட்சுமி, சந்திரபாலன் ஆகியோரின் சகலனும் காலஞ்சென்ற விஜயரத்தினம் மற்றும் கலாநிதி சிவபாதசுந்திரம் ஆகியோரின் மைத்துனரும் ராகுலன், சகிதன், இராகினி, சாருமதி, சுமந்திரன் ஆகியோரின் அன்புப் பெயரியப்பாவும் சிவரூபன், சிவாஞ்சலி, தர்சனா, லக்சனா, லகீபன், விஜி.ஜீவி, பவித் ஆகியோரின் அன்பு மாமனும் காலஞ்சென்ற கலைச்செல்வன் மற்றும் Dr.அருட்செல்வன், தமிழ்ச்செல்வன் (பொறியியலாளர்), Dr.கதிர்ச்செல்வன், இசைச்செல்வி, மயூரன் (ஆசிரியர், மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.06.2014) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மீசாலை வடக்கு,
மீசாலை.
தொ.பே.: 021 2050424

(சி-14096)

தகவல்:
திருமதி இராசபூபதிசிவபாதசுந்தரம்


---

# மலேசியாவில் கைதானோர் புலிகள் என்றால் நிரூபிக்குக

## பினாங் பிரதி முதலமைச்சர் மலேசிய பொலிஸ் மா அதிபருக்குச் சவால்


பி.ராமசாமி

கோலாலம்பூர், மே 31

மலேசியாவில் கைது செய்யப்பட்டு இலங்கைக்கு நாடு கடத்தப்பட்ட மூன்று பேரும் விடுதலைப் புலிகள் என்பதற்கான ஆதாரத்தை காண்பிக்குமாறு பினாங் பிரதி முதலமைச்சர் பி.ராமசாமி சவால் விடுத்துள்ளார்.

மலேசியாவின் பொலிஸ் மா அதிபர் டான் ஸ்ரீ காலித் அபு பக்கருக்கு இந்த சவால் விடுக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் செயலிழந்த நிலையில் குறித்த மூவரும் ஐக்கிய நாடுகள் அகதிகள் ஆணையக அட்டைகளை கொண்டிருந்தனர்.

அவர்களுக்கு எதிராக அதிகாரிகள் இதுவரை காலமும் எந்தவித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை.

இந்த நிலையில் எவ்வாறு விடுதலைப் புலிகள் இயங்குகிறார்கள் என்று காலித் கூற முடியும் என்று ராமசாமி கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்த விடயத்தில் மலேசிய பொலிஸார் எவ்வித விசாரணையையும் மேற்கொள்ளாது. இலங்கையில் இருந்து கிடைத்த தகவலின் அடிப்படையில் குறித்த மூவரையும் கைது செய்துள்ளதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

எனவே, மலேசிய பொலிஸ் மா அதிபரை விவாதத்துக்கு வருமாறு தாம் அழைப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அடைக்கலம்தேவைப்படும்தமிழர்களை சிறையில் அடைக்க வேண்டாம் என்றும் அவர் கோரிக்கை விடுத்தார். இதே வேளை இலங்கைக்கு நாடு கடத்தப்பட்ட மூன்று பேரும் கடந்த 15 ஆம் திகதி மலேசியாவில் வைத்துக் கைது செய்யப்பட்டனர் என்பது குறிப் பிடத்தக்கது.


**தவறிவிட்டது**

ம.கிருசாலினி என்பவருடைய 897292670V இலக்க தேசிய அ.அட்டை யாழ். - சண்டிலிப்பாய் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தந்துதவவும்.
தொ.பே.: 0776146393



## மரண அறிவித்தல்

### சண்முகலிங்கம் சிவராஜன்

(ஆங்கில ஆசிரியர்)



பண்ணாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகலிங்கம் சிவராஜன் நேற்று (30.05.2014) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகலிங்கம் - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான மாதவர் - அன்னபூரணம் தம்பதியரின் மருமகனும் லோகரட்சனியின் அன்புக் கணவரும் அகிலன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர் UN-Habitat முல்லைத்தீவு) அவரின் பாசமிகு தந்தையும் சரோஜினிதேவி, உமாதேவி, கெங்காதேவி, புண்ணியமூர்த்தி, கணபதிப்பிள்ளை (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் தம்பையா, ரத்தினசிங்கம், காலஞ்சென்ற பாலசிங்கம் மற்றும் இராசலட்சுமி, சந்திரலோஜினி, பாக்கியலட்சுமி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.06.2014) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சுழிபுரம் திருவடிநிலை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, மகன்.

*பண்ணாகம், சுழிபுரம்.* (47625)



கம்புறுபிட்டியவில் என்புருக்கி நோயால் 9 வயதுச் சிறுமி பாதிக்கப்பட்டுள்ளதை அறிந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ குறிப்பிட்ட சிறுமிக்குத் தேவையான சிகிச்சைகளை உடனடியாக வழங்குமாறு பணித்ததுடன் அலரிமாளிகைக்கும் அழைத்து சிறுமியுடன் அன்பாக உரையாடினார்.

# மஹிந்த ராஜபக்ஷ பதவியேற்றதும் ஜனாதிபதிக்கான வாகனங்கள் அதிகரிப்பு

## நிதி அமைச்சின் அறிக்கையில் தகவல்

கொழும்பு.மே 31

மஹிந்த ராஜபக்ஷ பதவியேற்ற பின்னர் ஜனாதிபதிக்கான வாகனங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன என்று நிதி அமைச்சின் 2013 ஆம் ஆண்டுக்கான அறிக்கையில் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த வருட இறுதியில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின்படி ஜனாதிபதிக்கு 340 கோடி 6 லட்சம் பெறுமதியான வாகனங்கள் உள்ளமை தெரியவந்துள்ளது.

> கடந்த வருடத்தில் மாத்திரம் ஒரு கோடியே 3 லட்சத்து 54 ஆயிரம் ரூபா பெறுமதியான குண்டு துளைக்காத வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டு, நாட்டில் போர் நடைபெறாத சூழ்நிலையில், குண்டு துளைக்காத வாகனங்களை இறக்குமதி செய்யும் தேவை ஏற்படவில்லை. எனினும், கடந்த வருடத்தில் மாத்திரம் ஒரு கோடியே 3 லட்சத்து 54 ஆயிரம் ரூபா பெறுமதியான குண்டு துளைக்காத வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன என்று அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

அதனடிப்படையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதியாகப் பதவி வகித்து வரும் கடந்த 8 வருடங்களில் 341 கோடி ரூபாவுக்கும் மேல் பெறுமதியான வாகனங்களைக் கொள்வனவு செய்துள்ளார் என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## கடலில் கண்டெடுக்கப்பட்ட சில்லு விமானத்தின் பாகம் அல்ல

### விமானப்படை தெரிவிப்பு

கொழும்பு.மே 31

அளுத்கம கடல் பகுதியில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கண்டெடுக்கப்பட்ட சில்லுப் போன்ற பொருள் விமானத்தின் பாகம் அல்ல என்று இலங்கை விமானப் படையினர் தெரிவித்துள்ளனர்.

இந்த பொருள் கண்டெடுக்கப்பட்ட பின்னர் அது கடந்த மாதத்தில் காணாமற் போன மலேசிய விமானத்தினுடையதாக இருக்கலாமா? என்ற சந்தேகம் ஏற்பட்டது.

அதனையடுத்து கொழும்பில் இருந்து விமானப்படைக் குழு சம்பவ இடத்துக்குச் சென்று பரிசோதனைகளை மேற்கொண்டது.

இதன்போது குறிப்பிட்ட சில்லு வேறு ஒரு வாகனத்தின் அல்லது இயந்திரத்தின் சில்லொன்றே என்பது தெரிய வந்துள்ளது என்று விமானப் படையினர் அறிவித்துள்ளனர். (ச)

## சுற்றுலா விசாவில் செல்ல முயன்ற 20 பெண்கள் கைது

கொழும்பு.மே 31

சுற்றுலா விசாவின் மூலம் வெளிநாடுகளுக்குச் செல்ல முற்பட்ட 20 பெண்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தப் பெண்களை வெளிநாடுகளுக்கு அனுப்ப முற்பட்டவர்களை அடையாளம் காண்பதற்கான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் பிரதிப் பொதுமுகாமையாளர் மங்கல ரந்தெனிய தெரிவித்தார்.

சுற்றுலா விசாவில் மத்திய கிழக்கு நாடுகளுக்கு தொழில் நிமித்தம் செல்லவிருந்த பெண்களே விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

தொழிலுக்காக வெளிநாடு செல்கின்றவர்களிடம், தொழில் நிறுவனத்தின் ஒப்பந்தம் அல்லது தொழிலுக்கான விசா இருக்க வேண்டும் என்று பணியகத்தின் பிரதிப் பொது முகாமையாளர் சுட்டிக்காட்டினார்.

நாட்டின் சட்டத்துக்கு அமைய தொழில் நிமித்தம் வெளிநாடுகளுக்குச் செல்பவர்கள் வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்துகொள்ள வேண்டும் என்று அவர் கூறினார்.

சட்டவிரோதமாகவெளிநாடுகளுக்கு அனுப்பப்படுகின்றவர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர். அதனைக் கருத்தில்கொண்டே வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் அவதானமாகச் செயற்பட்டு வருகிறது என்று அவர் கூறினார். (ச)

## பெண் பொலிஸாருக்கு வருகிறது புதிய சீருடை

*கொழும்பு.மே 31*

*பொலிஸ் சேவையில் ஈடுபட்டுள்ள பெண்களுக்கென மற்றுமொரு சீருடையை அறிமுகப்படுத்த பொலிஸ் தலைமையகம் தீர்மானித்துள்ளது. தற்போதுள்ள சீருடைக்கு மேலதிகமாகவே இந்தப் புதிய சீருடை அறிமுகப்படுத்தப்படவுள்ளது.*

*பொலிஸ் மா அதிபரின் ஆலோசனைக்கமைய பாதுகாப்பு அமைச்சின் செயலரால் இதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்தது. இந்த புதிய சீருடையும் காக்கி நிறத்திலேயே உருவாக்கப்படவுள்ளது. பெண் பொலிஸ் கான்ஸ்டபிள்கள் மற்றும் பெண் பொலிஸ் சிப்பாய்களுக்கு முழுக் காற்சட்டையும் சேர்ட்டும் வழங்கப்படவுள்ளன. பெண் பொலிஸ் பரிசோதகர்கள் மற்றும் பெண் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்களுக்கு முழுக் காற்சட்டை, சேர்ட் மற்றும் பூட்ஸ் கோட்டும் வழங்கப்படவுள்ளன என்று பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.* *(ச-10)*

## இலங்கையின் பிரதான இறக்குமதி நாடு இந்தியா

கொழும்பு.மே 31

இலங்கையின் பிரதான இறக்குமதி நாடாக இந்தியா மாறியுள்ளது என்று முதலீட்டுத்துறை அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

ஏற்கெனவே சீனாவே இலங்கையின் முக்கிய இறக்குமதி நாடாக இருந்தது.

எனினும், தற்போது இந்தியா 18 வீதத்துடன் முதன்மை இடத்தை பெற்றுள்ள நிலையில் சீனா 16 வீதத்துடன் இரண்டாம் இடத்தையும், சிங்கப்பூர் 9 வீதத்துடன் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளன என்று அவர் கூறினார். (ச)


# பாராட்டி வாழ்த்து

எமது சங்கத்தின் நீண்ட கால பொது முகாமையாளராக மிகவும் சிறப்பாகப் பணியாற்றிய

**குழந்தைவேலு சோமசுந்தரம்**

அவர்கள் 02.05.2014 அன்று மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் மாவட்ட நீதிபதி உயர்திரு.எஸ்.சதீஸ்வரன் முன்னிலையில் சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் மேலும் பல பதவிகள் பெற்று பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்.

*வாழ்த்துவோர் :*

Best Wishes

யாழ் மாவட்ட பேக்கரி உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம்

தலைவர், செயலாளர், அங்கத்தவர்கள், ஊழியர்கள்

181, இரண்டாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

(48603)(7.6.3)






தூய ஆவியார்

# திருவிழிப்பு ஆராதனை

**07.06.2014 சனி இரவு 6.30 மணி முதல்**

**அதிகாலை வரை யாழ். புனித மடுத்தீனார் குருமட மைதானத்தில் இடம்பெறும்**

மாலை 6.30 மணிக்கு திருச்செபமாலை

இரவு 7 மணி–தூய ஆவியார் திருவிழிப்புத் திருப்பலி

தொடர்ந்து திருவிழிப்பு ஆராதனைகள்

அதிகாலை 4 மணி–தூய ஆவியார் பெருவிழாத்திருப்பலி

## ஆயத்த வழிபாடுகள்

ஜூன் 4, 5, 6 (புதன், வியாழன், வெள்ளி) ஆகிய தினங்களில் மாலை 4.30 முதல் 6 மணிவரை.

தூய ஆவியார் பெருவிழா ஆயத்த வழிபாடுகள் யாழ். இறைதியான இல்ல மண்டபத்தில் நடைபெறும்.

6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆயத்த வழிபாடுகளிலும், திருவிழிப்பு ஆராதனையிலும் கொழும்பு உயிர்த்த ஆண்டவர் சமூகத்தினர் சகோ.லலித் பெரேரா தலைமையில் இணைந்து சிறப்பிப்பார்கள்.

*தூய ஆவியாரின் அபிஷேகம் பெற அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

இறைதியானக்குழுவினர். (சி/13935)(4.3.6) ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்



# மக்கள் வங்கி அறிவித்தல்

**மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளிலும் சேவை நிலையங்களிலும் 30.04.2013 வரையும் அடகுவைத்து மீட்கப்படாத நகைகள் 17.06.2014 இலிருந்து காலை 8.30 மணிக்கு மக்கள் வங்கி, யாழ். பிராந்திய தலைமையகத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.**

| கிளைகள் | சேவை நிலையம் |
|---|---|
| யாழ். ஸ்ரான்லி வீதி | நாவலர் வீதி |
| | மானிப்பாய் |
| காங்கேசன்துறை | மல்லாகம் |
| யாழ். பிரதான வீதி | உரும்பிராய் |
| ஊர்காவற்றுறை | .... |
| நெல்லியடி | .... |
| அச்சுவேலி | புத்தூர் |
| சங்கானை | பண்டத்தரிப்பு |
| சுன்னாகம் | கோப்பாய் |
| | அளவெட்டி |
| சாவகச்சேரி | கொடிகாமம் |
| வல்வெட்டித்துறை | உடுப்பிட்டி |
| யாழ். பல்கலைக்கழகம் | திருநெல்வேலி |
| | கல்வியங்காடு |
| யாழ். கன்னாதிட்டி | இணுவில் |
| பருத்தித்துறை | புலோலி |

**அறிவித்தலின்றித் திகதியை ஒத்திப் போடுவதற்கும் ஏலம் விடப்படும் இடத்தினை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.**

பிராந்திய முகாமையாளர்,

**மக்கள் வங்கி,** (சி.13934) (4.6.3)

பிராந்திய தலைமையகம், கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

# விமான நிலைய அபிவிருத்திகளைப் பார்வையிட்டார் அமைச்சர் பிரியங்கர



மட்டக்களப்பு விமானத் தள அபிவிருத்திகளைப் பார்வையிட்ட குழுவினர்

மட்டக்களப்பு.மே 31

சி வில் விமான சேவைகள் அமைச்சர் பிரியங்கர ஜயரட்ண மட்டக்களப்பு உள்ளூர் விமானத் தளத்துக்கு நேற்று வெள்ளிக்கிழமை சென்றுள்ளார்.

மட்டக்களப்பு விமான நிலையத்தின் அபிவிருத்தி குறித்து அமைச்சர் விமான நிலைய அதிகாரிகளுடனும் விமானப்படை அதிகாரிகளுடனும் கலந்துரையாடியுள்ளார்.

ஒரு கோடி ரூபா செலவில் இடம் பெற்றுவரும் மட்டக்களப்பு விமான ஓடுபாதை அமைப்பு வேலைகளை அமைச்சர் பார்வையிட்டுள்ளார்.

விமான நிலையத்தின் முழுமையான அபிவிருத்தி வேலைகளுக்காக 1,600 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் தெரிவித்தார். (ச)

# தற்காலிக இடங்களில் தற்போதும் வாழ்க்கை

## போர் முடிந்தும் தொடர்கிறது சம்பூர் மக்களின் அவலம்

திருகோணமலை.மே 31

சம்பூர் பிரதேச மக்கள் போர் முடிவடைந்தாலும் தங்களது சொந்தக் கிராமங்களில் வாழ்விட உரிமை மறுக்கப்பட்ட நிலையில் தொடர்ந்தும் தற்காலிக இடங்களில் வாழ்ந்து வருகின்றனர் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் குமாரசாமி நாகேஸ்வரன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தப் பிரதேசம் இப்போது அரசால் பாதுகாப்பு வலயமாகவும் வர்த்தக வலயமாகவும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதோடு 500 ஏக்கர் நிலம் அனல்மின் நிலையத்தை நிறுவவென அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. இந்திய உதவியுடனான அனல் மின் நிலையத்துக்கான அடையாளமிடப்பட்ட காணியில் பொது மக்களுக்குரிய காணிகளும் உள்ளன.

அனல் மின் நிலையத்துக்கு அடையாளமிடப்பட்ட காணியில் ஏற்கெனவே வாழ்ந்த ஏழு குடும்பங்களும் தற்போது மாற்றுக் குடியிருப்பு வசதிகளைப் பெற்றுள்ளன. ஆனால் பொது மக்களுக்குரிய சுமார் 200 ஏக்கர் வயல் நிலங்கள் இழக்கப்படுகிறது -என்றார்.

இதேவேளை அனல் மின் நிலையத்துக்கு என்று காணி ஆணையாளர் நாயகத்தினால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 500 ஏக்கர் காணி, அரச வெற்றுக் காணி என்று மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலர் எம். சி. பெர்ணாண்டோ தெரிவித்தார். இந்த அனல் மின் உற்பத்தி நிலையம் அமைக்கப்படுவதன் காரணமாகப் பொது மக்களுக்கு காணி இழக்கப்படுவதாகக் கூறுவதற்கு இடமில்லை என்று அவர் குறிப்பிட்டார். (ச)

# மாகாண சபையில் தமிழர் புறக்கணிப்பு

## கூட்டமைப்பு குற்றச்சாட்டு

மட்டக்களப்பு.மே 31

கிழக்கு மாகாண சபையால் நடத்தப்படும் பரீட்சைகளில் தமிழ் மக்கள் புறக்கணிக்கப்பட்டு வருகின்றனர் என்று கிழக்கு மாகாண சபை உறுப்பினர் கி. துரைராஜசிங்கம் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போது கிழக்கு மாகாண சபை, பதவி நியமனங்கள் தொடர்பில் விநோதமான நடைமுறை ஒன்றைப் பின்பற்றுகின்றது. தேர்வு நாடிகள் பரீட்சை எழுதுகின்றனர். அவர்களது பரீட்சை முடிவுகள் வெளியிடப்பட்ட பின் கூடிய புள்ளிகள் பெறும் தமிழர்கள் புறந்தள்ளப்பட்டு அவர்களை விட குறைந்த புள்ளிகள் பெறுவோருக்கு நியமனங்கள் வழங்கப்படுகின்றன.

பரீட்சை நடத்துவதே அதிகூடிய புள்ளிகளைப் பெறும் தேர்வு நாடிகளைத் தெரிவு செய்து நிர்வாகம் அல்லது தொழில்துறையில் சேர்த்துக் கொள்வதற்காகத்தான். இதன் மூலம்தான் திறமையான அரச நிர்வாகம் ஒன்றை முன்னெடுக்க முடியும். எமது இளம் தலைமுறையினருக்கு வேலைவாய்ப்புகள் மறுக்கப்படுவதால்தான் அவர்கள் வேலைவாய்ப்புத் தேடி வெளிநாடுகளுக்கு தப்பிச் செல்கின்றனர். எங்கள் இளம் தலைமுறையினர் மீது மேற்கொள்ளப்படும் புறக்கணிப்பு நிறுத்தப்படவேண்டும்-என்றார். (ச)

# மாகாண காணி ஆணைக்குழுவை கிழக்கில் உடன் நியமிக்க வேண்டும்

## கிழக்கு மாகாண சபை உறுப்பினர் வலியுறுத்து

அம்பாறை.மே 31

கிழக்கு மாகாணத்தில் காணி விவகாரங்களைக் கையாள்வதற்கு மாகாண காணி ஆணைக்குழுவை உடனடியாக நியமிக்க வேண்டும் என்று கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஏ.எம். ஜெமீல் வலியுறுத்தியுள்ளார்.

கிழக்கு மாகாண சபையின் மாதாந்த சபை அமர்வின்போது முன்னாள் முதலமைச்சரும் தற்போதைய உறுப்பினருமான எஸ்.சந்திரகாந்தனால் சமர்ப்பிக்கப்பட்ட தனிநபர் பிரேரணை மீது உரையாற்றியபோதே அவர் இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கிழக்கு மாகாணத்தில் இன்று காணிப் பிரச்சினைகள் பூதாகரமாக மாறியுள்ளன. அரச காணிகள் மாத்திரமல்லாமல் பொது மக்களுக்குச் சொந்தமான காணிகள்கூட அரசினால் அபகரிக்கப்பட்டு வருகின்றன. இன ரீதியாகவும் காணிகள் கபளீகரம் செய்யப்படுகின்றன. அதனால் இன முரண்பாடுகள் பெருமளவில் விஸ்பரூபம் எடுக்கின்றன. பிரதேச மட்டத்திலும் மாவட்ட மட்டத்திலும் காணிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ள போதிலும் கிழக்கு மாகாண மட்டத்தில் மாத்திரம் காணிக் குழுவொன்று இன்னமும் நிறுவப்படாமல் இருப்பது ஏன் என்று தெரியவில்லை. இதனை அமைப்பதற்கு கிழக்கு மாகாண சபை உடனடி நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும் -என்றார். (ச)


முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் சோமசேகரம் விஷ்ணுவன்

தோற்றம் 23.08.2000

மறைவு 11.06.2013

ஆண்டு ஒன்று ஆனதோ ஐயா!
ஆறாத துயரில் தவிக்கின்றோம்
மங்காப் புகழுடன் வாழ்வாய்
என எண்ணினோம்
நீங்காத நினைவைத் தந்து
நீண்ட தூரம் சென்றாயோ!
வருவாய் மீண்டும் இவ்விடம் என
வழி மேல் விழிவைத்து
பார்த்திருக்கின்றோம்.
அன்புச் செல்வமே வருவாயோ
மீண்டும் இவ்விடம்



கடந்த 11.06.2013 சிவபதம் அடைந்த
எமது அன்புச் செல்வம்
அமரர் சோமசேகரம் விஷ்ணுவன் அவர்களின்
முதலாம் ஆண்டு திதி இன்று
(31.05.2014) சனிக்கிழமை
மு.ப.11.00 மணியளவில் அன்னாரின்
இல்லத்தில் நடைபெறவுள்ளது.
எனவே தாங்கள் தங்கள் குடும்பசகிதம்
வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப்
பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து
நடைபெறும் மதியபோசன
நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம்
அன்புடன் அழைக்கின்றோம்.

நீர்வேலி வடக்கு,
காளிகோயிலடி, நீர்வேலி.

குடும்பத்தினர்.
077 977 9782

(48567)(12.3.6)



28ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
12 - 02 - 1925

உதிர்வு
10 - 06 - 1986

திதி:
31.05.2014

அமரர் தம்பு கதிரவேலு
(இளைப்பாறிய அதிபர்,
யா/கம்பர்மலை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை)

விண்ணை எய்திய விடிவெள்ளியாய்
கண்ணை விட்டு நீங்கா நினைவுகளுடன்
மண்ணில் வாழும் எம் அனைவரினதும்
மனங்களில் நிறைந்துள்ளீர்கள் ஐயா!
உங்களது ஆத்மாவின் சாந்திக்காய்
எமது அன்புக் காணிக்கையைச் சமர்ப்பிக்கின்றோம்.

நிருவத்தம்பை, ஊரிக்காடு,
வல்வெட்டித்துறை.

மனைவி,மக்கள்,
மருமக்கள்,பேரப்பிள்ளைகள்.

## கூ.ச.காணி சுவீகரிப்பை நிறுத்துமாறு கோரிக்கை


அச்சுவேலி, மே 31
அச்சுவேலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைமைக் காரியாலயக் கட்டடத்தோடு கூடிய காணி சுவீகரிப்பை தடுத்து நிறுத்தி சங்கத்தின் பாவனைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சங்கத்தின் இயக்குநர் சபை உறுப்பினர் மற்றும் சங்க பணியாளர் உள்ளடங்கிய தூதுக்குழு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை நேரில் சந்தித்து கோரிக்கை விடுத்தது.

சங்கத்தின் இயக்குநர் சபைத் தலைவர் இ.சந்திரன் தலைமையிலான குழுவினர் சுவீகரிக்கப்படவுள்ள காணியின் ஆவணங்கள் மற்றும் அமைவிட வரைபடங்கள் உள்ளடங்கிய ஆவணங்களையும் அமைச்சரிடம் கையளித்து பேச்சு நடத்தியுள்ளனர்.

வலி.கிழக்கு வடபகுதி (அச்சுவேலி) பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்குச் சொந்தமான 18 பரப்புக் காணியில் பாதுகாப்பு தரப்பினரின் அச்சுவேலி முகாம் 1995 ஆம் ஆண்டில் இருந்து செயற்பட்டு வருகின்றது. சங்கத்தின் தலைமைக் காரியாலயம் ஆவரங்காலில் உள்ள களஞ்சியத்தில் தற்காலிகமாக செயற்பட்டு வருகின்றது.

சங்க நிர்வாகத்தின் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட சிறு கைத்தொழில் மற்றும் பாரம்பரிய கைத்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நாளை ஞாயிற்றுக் கிழமை குறித்த இடத்தைத் தாம் நேரில் பார் வையிட்டு சம்பந்தப்பட்ட தரப்பினரோடுதொடர்பு கொண்டு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதாக சங்க நிர்வாகிகளுக்கு கூறியுள்ளார். (வ-11)

## விளைவுசார், இலக்கு நோக்கிய திட்டமிடல் செயலமர்வு





யாழ்ப்பாணம், மே 31
விளைவுசார் மற்றும் இலக்கு நோக்கிய திட்டமிடல் தொடர்பான செயலமர்வு நேற்று முன்தினம் வியாழக்கிழமை நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. பிரதேச மட்ட, மாகாண மட்ட மற்றும் தேசிய மட்ட அபிவிருத்திகள் தொடர்பான கலந்துரையாடல்கள் இதன்போது இடம்பெற்றன. இலங்கைக்கான யூ.என்.டி.பி. அமைப்பின் ஒழுங்கிணைப்பாளர் எஸ்.கணேசராஜா.யாழ்.செயலகத் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி ஆர்.மோகனேஸ்வரன், நல்லூர் பிரதேச திட்டமிடல் பணிப்பாளர் இ.சுரேந்திரநாதன், கணக்காளர் எஸ். மோகனரூபன் உட்பட திணைக்களங்களின் தலைவர்கள் இதில் கலந்து கொண் டனர். (வ-7)

## வரணி பாடசாலைக் கட்டட திறப்பு விழா ஒத்திவைப்பு

வரணி, மே 31
கடந்த திங்கட்கிழமை இடம்பெறவிருந்த இசுறு பாடசாலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வரணி மத்திய கல்லூரியில் அமைக்கப்பட்ட இரண்டு தனித் தனி மாடிக் கட்டட வகுப் பறைத் தொகுதிகளின் திறப்பு விழா பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தனவால் இந்த வகுப்பறைத் தொகுதிகள் திறந்து வைக்கப்பட விருந்த நிலையில் தவிர்க்க முடியாத காரணங்களால் அமைச்சர் நிகழ்வுக்கு வருகை தரமுடியாது போனமையால் இந்த நிகழ்வு பிறிதொரு தினத்துக்கு பிற்போடப்பட்டுள்ளது. (வ-122)

## மாகாண மட்டத்தில் முதலிடம்



வடமாகாண பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற தமிழ் மொழித் தினப் போட்டியில் கனகராயன்குளம் மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவி பி.தரன்சிகா, பிரிவு IV இல் கட்டுரை வரைதலும் இலக்கிய நயத்தலும் என்ற போட்டியில் முதலாம் இடத்தைப்பெற்று தேசிய மட்டப் போட்டியில் கலந்துகொள்ளத் தகுதி பெற்றுள்ளார். (வ-422)

## கட்டாக்காலி நாய்களுக்கு ஜூன் 3 இல் கருத்தடை

### வருகிறது கொழும்பிலிருந்து விசேட குழு

யாழ்ப்பாணம், மே 31
யாழ்.மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட கட்டாக்காலி நாய்களுக்கு வெளிநாட்டு நிறுவனத்தின் நிதிப்பங்களிப்புடன் எதிர்வரும் 3 ஆம்திகதி தொடக்கம் கருத்தடை செய்யப்படவுள்ளது. அதற்கென கொழும்பில் இருந்து விசேட குழுவினர் வருகை தரவுள்ளனர்.

குடாநாட்டில் 2 மாதங்களுக்கு முன்பிருந்தே இந்த செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் யாழ். மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட கட்டாக் காலி நாய்களுக்கும் கருத்தடை செய்யப்படவுள்ளது.

வெளிநாட்டு நிறுவனத்தின் நிதிப் பங்களிப்புடன் இந்தத் திட்டம்முன்னெடுக்கப்படவுள்ளது. 4 ஆயிரத்து 527 நாய்களுக்குக் கருத்தடை செய்யப்படவுள்ளது. ஒவ்வொரு ஆண் நாய்க்கும் 2 ஆயிரம் ரூபாவும், பெண்நாய்க்கு 2 ஆயிரத்து 500 ரூபாவும் இதற்கெனச் செலவு செய்யப்படவுள்ளது. (வ-14-7)

## ஆண்டு விழா

கொழும்புத்துறை, மே 31
கொழும்புத்துறை எழிலூர் சனசமூக நிலையத்தின் 35 ஆவது ஆண்டு விழாவையொட்டி வீதியோட்ட நிகழ்வுகள், விளையாட்டுப் போட்டிகள், கலை நிகழ்வுகள் என்பன இடம்பெறவுள்ளன.

இன்று சனிக்கிழமை காலை 6 மணிக்கு 5 மைல் மரதன் ஓட்டப் போட்டி, 10 மைல் சைக்கிள் ஓட்டப் போட்டி என்பன இடம்பெறும்.

நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை விளையாட்டுப் போட்டிகளும், இரவு கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (க-135)

## அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான 2ஆவது வினைத் திறன்காண் மீள் பரீட்சை

யாழ்ப்பாணம், மே 31
வடக்கு மாகாண சபையில் கடமையாற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களில் கடந்த 2011 ஆம் ஆண்டில் நடைபெற்ற பரீட்சையில் சித்திபெறத் தவறிய உத்தியோகத்தர்களுக்கான இரண்டாவது வினைத் திறன்காண் மீள் பரீட்சை எதிர்வரும் 22, 23 ஆம் திகதிகளில் வடக்கு மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழுவினால் நடத்துவதற்குத் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

இந்தப் பரீட்சையில் முகாமைத்துவப் பாடத்துக்கான பாடத் திட்டமானது 2011 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 31 ஆம் திகதி வரை அமுலில் இருந்து வந்த வடக்கு மாகாண சபையின் அபிவிருத்தி உதவியாளர் சேவைப் பிரமாணக் குறிப்பிற்கமைவாகவும், ஏனைய பாடங்களாகிய அலுவலக நிர்வாகமும் தமிழ்க் கோவையும் மற்றும் நிதிப் பிரமாணங்கள் ஆகிய பாடங்கள் தற்போது வடக்கு மாகாண சபையில் அமுலில் இருந்துவரும் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைப் பிரமாணக் குறிப்பிற்கமையவும் இடம்பெறவுள்ளது.

எனவே உரிய பாடத் திட்டங்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைக் கருத்தில் கொண்டு பரீட்சார்த்திகள் பரீட்சைக்கான முன்னாயத்தங்களை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (பரீட்சை வழிகாட்டி மற்றும் உசாத்துணை நூல்கள் என்பனவற்றை உத்தியோகபூர்வ இணையத்தளமாகிய www.gsgunp.org இல் பார்வையிட முடியுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.) (வ)

## ஆவணங்கள் இன்றி வாகனம் செலுத்திய நபருக்குத் தண்டம்

தென்மராட்சி, மே 31
காப்புறுதிப் பத்திரம், வாகனவரி போன்ற ஆவணங்கள் இன்றி வாகனம் செலுத்திய தன் குற்றச்சாட்டில் நபரொருவருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 9 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

குறிப்பிட்ட நபருக்கு எதிராகப் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு புதன் கிழமைவிசாரணைக்கு எடுக்கப் பட்டது.

குறித்த நபர் குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து 9 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (ஓ-9)

உ
சிவமயம்



அருள்மிகு கௌரி இணை
திருக்கேதீச்சரநாதர் திருக்கோயில்
மஹோற்சவப் பெருவிழா

திருக்கொடியேற்றம்
திங்கட்கிழமை 02.06.2014

திருத்தேர் திருவீதியுலா
செவ்வாய்க்கிழமை
10.06.2014

தீர்த்தத் திருவிழா
புதன்கிழமை
11.06.2014

பாடல் பெற்ற திருத்தலத்திற்கு வாரீர்;
வந்து திருக்கேதீச்சரநாதரின் அருள் பெற்றிடுவீர்!
திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபை.

(C/13933)(7.6.3)



வேலணை மேற்கு
பெரியபுலம்
மகா கணபதிப்பிள்ளையார்
கோயில்
ஜயவருஷ மஹோற்சவ
விஞ்ஞாபனம் - 2014

| | | |
|---|---|---|
| 01.06.2014 | ஞாயிறு | காலை 08.00 கணபதி ஹோமம் |
| 02.06.2014 | திங்கள் | மு.ப 10.00 கொடியேற்றம் |
| 03.06.2014 | செவ்வாய் | காலை 08.00 சங்காபிஷேகம் (உற்சவ மூர்த்தி) |
| 05.06.2014 | வியாழன் | காலை08.00 சங்காபிஷேகம்(மூல மூர்த்தி) |
| 09.06.2014 | திங்கள் | பி.ப.2.00 வேட்டைத்திருவிழா |
| 10.06.2014 | செவ்வாய் | மாலை 07.00 சப்பரத்திருவிழா |
| 11.06.2014 | புதன் | காலை 09.30 தேர்த்திருவிழா |
| 12.06.2014 | வியாழன் | காலை 08.00 தீர்த்தோற்சவம் |
| 17.06.2014 | செவ்வாய் | மாலை 06.00 வைரவர் பொங்கல் |

அடியார்கள் அனைவரும் மஹோற்சவ காலங்களில் ஆலயத்திற்கு வந்து எம்பெருமானின் இஷ்டசித்திகளை பெற்றுய்க.

(48593) (12.3.6)

பரிபாலனசபையினர்
TP:021 320 7421
இணையத்தளம்: www.velanaimahakanapathi.com
வேலணை மேற்கு.

# மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரணை செய்யாது மஹிந்த அரசு

## வன்முறை காலத்தில் செய்த கொலைகளுக்குப் பாவமன்னிப்பு கோருகிறது ஜே.வி.பி

கொழும்பு.மே 31

வடக்கில் நடைபெற்ற போரில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் குறித்து முழுமையான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும்.

எனினும் அவ்வாறான விசாரணைகளை மஹிந்த ராஜபக்ஷ அரசு மேற்கொள்ளும் என்று எதிர்பார்க்க முடியாது என்று ஜே.வி.பி. தலைவர் அனுரகுமார திஸா நாயக்க தெரிவித்தார்.

1989 ஆம், 90 ஆம் ஆண்டுகளின் வன்முறை காலத்தில் ஜே.வி.பி., கட்சியால் மேற்கொள்ளப்பட்ட 6 ஆயிரத்துக்கும் அதிகமான கொலைகளுக்காக மக்களிடம் மன்னிப்பு கோருவதாவும் அவர் கூறினார்.

பிரிட்டனின் பி.பி.சி சிங்கள சேவைக்கு வழங்கிய செவ்வியின் போதே அவர் இவ்வாறு கூறினார்.



இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

> ஜே.வி.பி. கட்சியால் மேற் கொள்ளப்பட்ட 6 ஆயிரத்துக்கும் அதிகமான கொலைகளுக்காக மக்களிடம் மன்னிப்பு கோருவதாவும் அவர் கூறினார்.

1983 ஆம் ஆண்டு ஆட்சியில் இருந்து ஐக்கிய தேசியக் கட்சியின் அரசு ஜே.வி.பியை தடை செய்தன் பின்னர், ஆயுதம் ஏந்தும்வரை கொலைச் சம்பவங்கள் அதிகரித்தன.

1989 ஆம், 90 ஆம் ஆண்டுகளில் கொல்லப்பட்ட ஜே.வி.பியின் உறுப்பினர்கள் தொடர்பில் சர்வதேசம் கூட விசாரணைகளைக் கோரவில்லை.

கொலைகளுடன் சம்பந்தப்பட்டவர்களிடம் கொலை செய்தவர்களிடம் மற்றும் விசாரணைகளைக் கோரும் அளவுக்கு நாம் மூடர்கள் அல்ல.

கொலைகளுடன் யார் சம்பந்தப்பட்டுள்ளனர், யார் பொறுப்புக் கூறவேண்டும் என்பது எமக்குத் தெளிவாகத் தெரியும்.

ஐக்கிய தேசியக் கட்சியிடமோ, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிடமோ விசாரணைகளை நடத்துமாறு கோருவது அறிவீனமற்ற செயல்-என்றார்.(ச)

# 1 லட்சத்து 25,000 பேரின் விண்ணப்பங்களே எம்மிடம்

## ஆள்பதிவுத் திணைக்களம் தகவல்

எதிர்வரும் ஜி.சி.ஈ சாதாரண தரப்பரீட்சைக்குத் தோற்றவுள்ள சுமார் நான்கு லட்சம் பாடசாலை மாணவர்களில் ஒரு லட்சத்து 25 ஆயிரம் மாணவர்களின் அடையாள அட்டைக்கான விண்ணப்பங்களே இதுவரை கிடைக்கப் பெற்றுள்ளன என்று ஆள்பதிவு திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் ஜி.ஏ.ஆர். தேவப்பிரிய தெரிவித்தார்.

இந்த விண்ணப்பங்களை அனுப்ப இன்று சனிக்கிழமை வரை காலக்கெடு வழங்கப்பட்டுள்ளதால் அசௌகரியங்களைத் தவிர்க்கும் வகையில் எஞ்சியுள்ள மாணவர்களின் அடையாளஅட்டைக்கானவிண்ணப்ங்களை உடனடியாக அனுப்பி வைக்குமாறு பாடசாலை அதிபர்களை அவர் கேட்டுள்ளார்.

இதுதொடர்பில்கல்விஅமைச்சு, கல்வி திணைக்கள அதிகாரிகள், பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், பாடசாலை அதிபர்கள் உட்பட சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஏற்கெனவே கடிதம் மூலம் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன என்று அவர் சுட்டிக்காட்டினார்.

பரீட்சைக்குத் தோற்றவுள்ள பாடசாலை மாணவர்களின் தேசிய அடையாள அட்டைக்கான விண்ணப்பங்கள் கடைசி நேரத்தில் கிடைக்கப் பெறுவதினால் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்க நேரிடுகிறது. கடந்த கால அனுபவங்களை கருத்திற்கொண்டே இந்த முறை நேரகாலத்துடன் அனுப்பி வைக்குமாறு சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளோம். எனினும் இதுவரை ஒரு லட்சத்து 25 ஆயிரம் விண்ணப்பங்கள் மட்டுமே இதுவரை கிடைக்கப் பெற்றுள்ளன என்று அவர் சுட்டிக் காட்டினார். (ச)


# KINGS ELECTRONICS LED Bulbs



12W Panel Light 1450/=

12W Square 1450/=

| for PLASTiC | METAL |
|---|---|
| 3 W 150/= | 5 W 300 /= |
| 5 W 230/= | 7 W 400 /= |
| 7 W 280/= | 9 W 600 /= |
| 9 W 360/= | |
| 12 W 420/= | |

1W 12/=

Rotating Bulb 590/=

4′ LED Tube Light 16W 1300 /=

Tube 4 feet 18 W 990/=

Strip light 5m 850/=

11A, Stanley Road, Jaffna.
T.P: 021 222 3857

(48512)(10.6.3)


# ஐ.தே.கட்சி உறுப்பினர்களுக்கு கல்பிட்டியில் அமோக வரவேற்பு

கொழும்பு ,மே 31

நுரைச்சோலை அனல் மின் நிலையத்தைப் பார்வையிடச் சென்ற ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் மலர் தூவி வரவேற்கப்பட்டுள்ளனர்.

பிரதி அமைச்சர் விக்டர் அன்டனி பியன்வில பெரேரா உள்ளிட்ட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆதரவாளர்கள் ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர்களை மலர் தூவி வரவேற்றுள்ளனர்.

இந்த வரவேற்பு கல்பிட்டியில் அளிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சின் நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரத்ன உள்ளிட்ட 10 பேர் நுரைச்சோலைஅனல்மின்நிலையத்தைப் பார்வையிடச் சென்றுள்ளனர்.

மத்தல விமான நிலையம், மற்றும் மாகம்புற துறைமுகம் என்பவற்றை பார்வையிடச் சென்ற ஐ.தே.க. குழு மீது கடந்த மாதம் கல்வீச்சுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இந்த நிலையில் தெற்கைப் போன்று அல்லாது வடமேல் மாகாணத்தில் ஐ.தே.க. உறுப்பினர்களுக்குச் சிறந்த வரவேற்பு அளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)


# பிறந்தநாள் வாழ்த்து



திருமதி பாக்கியம் கணபதிப்பிள்ளை
86ஆவது பிறந்தநாள்

அம்மா நீங்கள் இன்னும் பல்லாண்டு காலம் வாழ வேண்டுமென வாழ்த்துகின்றோம்.
உங்கள் அன்பும் ஆசியும் எமக்குக் கிடைக்க வேண்டுமென எல்லாம் வல்ல அத்தியடி ஸ்ரீ சிதம்பர நடராஜா வீரகத்தி விநாயகர் அருள்வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

வாழ்த்துவோர்:
மகன், மகள்,
மருமகன் (வி.சபாரட்ணம் -அனலைதீவு)
சி.தில்லைச்சிவம் - பிரான்ஸ்)
மருமகள் (கொழும்பு)
பேரன்,பேர்த்தி (பிரான்ஸ்,யாழ்ப்பாணம்)
பூட்டப்பிள்ளைகள்.

கணபதிப்பிள்ளை ரவீந்திரநாதன்



இன்று தனது தாயாருடன் பிறந்த நாளைக் கொண்டாடும் கணபதிப்பிள்ளை ரவீந்திரநாதன் பல்லாண்டு காலம் வாழ வேண்டும் என வாழ்த்துகின்றோம்.
உங்கள் அன்பும் ஆசியும் எமக்குக் கிடைக்க வேண்டுமென எல்லாம் வல்ல அத்தியடி ஸ்ரீ சிதம்பர நடராஜ வீரகத்தி விநாயகர் அருள் வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

வாழ்த்துவோர்: தாயார், சகோதர சகோதரிகள்
மைத்துனர் (வி.சபாரட்ணம் -அனலைதீவு)
சி.தில்லைச்சிவம் - பிரான்ஸ்)


# இணையப் பாவனைக்கு தனியான 'சிம்' அட்டை

## அறிவுறுத்துகிறார் அஜித் ரோஹண

இணையப்பாவனைகளுக்குத்தனியான 'சிம்' அட்டைகளை பாவிப்பதன் மூலம் ஆபத்துக்களை தவிர்க்க முடியும். இணையத்தளங்கள் மூலமாக பல்வேறு குற்றங்கள் இடம்பெறுவதனால் இணையங்களைப் பயன்படுத்தும்பொதுமக்கள்அனைவரும் அவதானமாக இருக்க வேண்டும் என்று பொலிஸ் ஊடக பேச்சாளரும், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமானஅஜித்ரோஹன தெரிவித்தார்.

இணையம் மூலம் வங்கி, மற்றும் முக்கிய சேவைகளில் ஈடுபடுவோர் மிகவும் அவதானமாகச் செயற்பட வேண்டும்என்று அவர் கூறினார்.

இணையக் குற்றங்கள் தொடர்பாகவிரைங்களை கண்டறிய குற்ற புலனாய்வுத் துறை ஈடுபடுத்தப்பட்டுள்ளது. இவ்வாறான இணையத்தள குற்றங்கள் தொடர்பில் இதுவரை 235 முறைப்பாடுகள் எமக்கு கிடைத்துள்ளன என்று அவர் தெரிவித்தார். (ச)


**நாய் விற்பனைக்கு**

இரண்டுவயது நிரம்பிய டோபர்மன் ஆண் நாய் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 531 7520
(48573) (12.3.6)

**மலிவு விற்பனைக்கு**

மோட்டார் சைக்கிள் (சைக்கிறா)
ஸ்பிறே பெயின்ற் - கொம்போசர்
சேவிஸ்மெசின் (ஜேர்மனி)
தொடர்பு: சேவிஸ் சென்ரர் பலாலி வீதி. 077 772 7771
(சி.48597) (45.6)

**வீடு, வளவு விற்பனைக்கு**

சண்டிலிப்பாய் சீரணி நாகபூஷணியம்மன் கோயிலுக்கு அருகேயுள்ள 5 பரப்பு வளவுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு : 021 225 0641, 077 614 1277
(48491) (7.6.3)

**வீட்டுடன் காணி விற்பனைக்கு**

மட்டுவில் தெற்கு, நுணாவில், பருத்தித்துறை வீதியில் நுணாவில் சந்தியிலிருந்து 1½ கி.மீ தொலைவில் வீட்டுடன் 18 பரப்புக் காணி உடனடியாகவிற்பனைக்குண்டு. விலை பேசித் தீர்த்துக்கொள்ளலாம்.
தொடர்பு: 075 808 5867
S.பத்மநாதன், மட்டுவில் தெற்கு.
(43651) (12.3.6)

## வாக்காளராகப் பதிவு செய்ய இம்முறை இலகு நடவடிக்கை

### யாழ்.மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் தெரிவிப்பு

கொழும்பு, மே 31

வாக்காளர்களாக இதுவரை குடும்பமாகப் பதிவு செய்யத் தவறியவர்கள் மற்றும் 25 வயதுக்கு மேற்பட்டவர்கள் இந்த ஆண்டு முதல் தடவையாகப் பதிவு செய்வதற்கு இலகுவான நடவடிக்கைகள் தேர்தல்கள் திணைக்களத்தால் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் பொ.குகநாதன் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

"இந்த ஆண்டுக்கான வாக்காளர் பதிவு நடவடிக்கைகள் கடந்த 16 ஆம் திகதி முதல் நாடளாவிய ரீதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்தப் பதிவு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக கிராம சேவையாளர்கள் ஊடாக 'பி.சி' படிவம் வீடு வீடாக விநியோகிக்கப்பட்டுள்ளது.

18 வயதுக்கு மேற்பட்ட, இலங்கைப் பிரஜையான எவரும் தம்மை வாக்காளர்களாகப் பதிவு செய்ய முடியும். புதிதாக ஒருவர் 18 வயதைப் பூர்த்தி செய்திருந்தால் அவரை கிராம சேவையாளர்கள் உடனடியாக வாக்காளர் களாகப் பதிவு செய்து வந்தனர். ஆனால் 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் வாக்காளர்களாக தொடர்ச்சியாகப் பதிவு செய்யப்படாத பட்சத்தில் அவர்கள் முதன் முறையாக பதிவு செய்யும் போது பல சிரமங்களை எதிர்கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தனர்.

குடும்பமாக பதிவு செய்யத் தவறியவர்களும் முதல் தடவையாகப் பதிவு செய்யும் போது இதே நிலைமையை எதிர்கொண்டிருந்தனர்.

இந்தச் சிரமங்களைத் தவிர்க்கும் நோக்கில் குடும்பமாகப் புதிதாக பதிவு செய்பவர்கள் மற்றும் 25 வயதுக்கு மேற்பட்டவர்கள் புதிதாகப் பதிவு செய்யும்போது, கிராம சேவையாளரிடம் வழங்கப்பட்டுள்ள சத்தியக் கடதாசியில் முத்திரை ஒட்டாமல் கையொப்பம் இட்டு அதனைப் பூரணப்படுத்துவதன் மூலம் வாக்காளர்களாகப் பதிவு செய்யும் நடவடிக்கைக்குள் உள் வாங்கப்படுவர்"-என்றார். (வ-5)

## நோயாளர்களின் விவரங்கள் சுகாதாரத் திணைக்களத்துக்கு

தென்மராட்சி, மே 31

யாழ்.மாவட்ட ஆதார மருத்துவமனைகளில் தினமும் சேர்க்கப்படும் நோயாளர்களின் விவரங்களை மின்னஞ்சல் மூலம் கொழும்பு சுகாதாரத் திணைக்களத்துக்கு அனுப் பும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்தத் திட்டம் உலக வங்கியின் உதவியுடன் நாட்டில் உள்ள அனைத்து ஆதார மருத்துவமனைகளிலும் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

இவ்வாறான செயற்பாடுகளைப் பார்வையிட நேற்று முன்தினம் சுகாதார அமைச்சின் உத்தியோகத்தர்களும் உலக வங்கிப் பிரதிநிதிகளும் மருத்துவமனைகளுக்கு பயணம் செய்தனர்.

மருத்துவமனைகளில் இருந்து நாளாந்தம் இந்தத் தரவுகள் சுகாதாரத் திணைக்களத்துக்கு அனுப்பப்படுவதை உறுதி செய்யும் வகையில் கணினிகளை இயக்கி திகதி வாரியாக விவரங்களைப் பார்வையிட்டனர். (வ-9)

# வாக்காளர் பதிவை வலியுறுத்தி யாழ். நகரில் நேற்றுப் பேரணி

### யாழ்ப்பாண தேர்தல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில்



பிரசுரம் வழங்கிய போது...



நகரில் பேரணி சென்ற வேளையில்...

யாழ்ப்பாணம், மே 31

"மக்கள் பலமே ஜனநாயகத்தின் பலம்; வாக்குரிமையே உங்கள் பலம்" என்ற தொனிப்பொருளில் வாக்காளர் பதிவை வலியுறுத்தி யாழ்ப்பாண தேர்தல்கள் திணைக்களத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட பேரணி யாழ். நகரில் நேற்று இடம்பெற்றது. இதில் யாழ். மாவட்டச் செயலக உத்தியோகத்தர்களும், கிராம சேவையாளர்களும் பங் கெடுத்தனர்.

வாக்காளர் தினம் ஒவ்வொரு வருடமும் ஜூன் மாதம் முதலாம் திகதி இலங்கையில் அனுட்டிக்கப்பட்டு வருகின்றது. இதனை முன்னிட்டு இந்தப் பேரணி யாழ்.மாவட்ட தேர்தல்கள் திணைக்களத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பிரதம தபாலக முன்றிலிருந்து பேரணி ஆரம்பமானது.

வாக்காளர் பதிவை வலியுறுத்தும் வாசகங்கள் அடங்கிய பதாகையைத் தாங்கிப் பிடித்தவாறு அரச ஊழியர்கள் இதில் பங்கெடுத்திருந்தனர்.

அத்துடன் ஒலிபெருக்கி மூலமும் வாக்காளர் பதிவின் அவசியத்தை வலியுறுத்தும் வாசகங்களையும் பரப்புரைப்படுத்தினர்.

மேலும் பிரதம தபாலகத்திலிருந்து சத்திரச் சந்தியை அடைந்து அங்கிருந்து ஆஸ்பத்திரி வீதியூடாக யாழ். மத்திய பஸ் நிலையத்தை அடைந்தனர்.

மத்திய பஸ் நிலையத்தில் வைத்து பொதுமக்களுக்கு. வாக்காளர் பதிவின் அவசியத்தை வலியுறுத்திய துண்டுப் பிரசுரமும் வழங்கப்பட்டது. அதன்பின்னர் அங்கிருந்து புறப்பட்ட பேரணி ஆஸ்பத்திரி வீதியினூடாகச் சென்று மணிக்கூட்டுக் கோபுர வீதியூடாகத் திரும்பி, மீளவும் பிரதம தபாலக முன்றிலை அடைந்தது.

வீதிகளினூடாகப் பேரணி செல்லும்போது வீதியில் செல்வோருக்கும் துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன.

யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமை நாயகம் மற்றும் யாழ்.மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் பொ.குகநாதன் ஆகியோர் பேரணிக்குத் தலைமை தாங்கினர்.

(வ-5)

## ஆலயங்களில் திருட்டு

வரணி கரம்பைக்குறிச்சி திக்கில் கந்தசுவாமி கோயிலின் உட்பிரகாரத்தில் வைக்கப்பட்டிருந்த பஞ்ச மணிகளின் பாகங்கள் அண்மையில் களவு போயுள்ளதாக ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்த னர்.

அதேசமயம் சுட்டிபுரம் கண்ணகை அம்பாள் ஆலயத்துக்கு மேற்திசையில் அமைந்திருக்கும் தும்புருவில் பிள்ளையார் ஆலய பஞ்சமணிகளும் திருடர்களால் அபகரித்துச் செல்லப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டது. குறித்த திக்கில் கந்தசுவாமி கோயிலுக்கு அருகில் அமைந்துள்ள கரம்பைக்குறிச்சி ப.நோ.கூ. சங்க கிளையிலும் அத்தினத்தில் தான் களவு போனதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-122)

# எரிபொருள் மானியத்துக்குப் பதிலாக மீனவருக்கு உபகரணங்கள் இதுவரை வழங்கப்படவில்லை

### கடற்றொழில் நீரியல்வள உதவிப்பணிப்பாளர் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தெரிவிப்பு

கொழும்பு, மே 31

மீனவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த எரிபொருள் மானியத்துக்குப் பதிலாக, தொழில் உபகரணங்கள் வழங்குவதற்கான விண்ணப்பங்கள் கடற்றொழில் நீரியல் வள அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ள போதும், இது வரையில் உபகரணங்கள் எதுவும் வழங்கப்படவில்லை என்று கடற்றொழில் நீரியல்வள உதவிப்பணிப்பாளர் என்.கணேசமூர்த்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் அண்மையில் யாழ்.மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது. இதில் மீன்பிடி தொடர்பிலான அபிவிருத்தி மீளாய்வு இடம்பெற்றபோது அதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எரிபொருள் விலை அதிகரிப்பை அடுத்து மீனவர்களுக்கு எரிபொருள் மானியம் வழங்கும் செயற்றிட்டத்தை கடற்றொழில் நீரியல்வள அமைச்சு நடைமுறைப் படுத்தியது. இதற்கமைவாக 2012 ஆம் ஆண்டு யாழ். மாவட்டத்தில் 10 மாதங்கள் மானியம் வழங்கப்பட்டது. இதன்பெறுமதி 212.72 மில்லியன் ரூபாவாகும். அதே போன்று 2013 ஆம் ஆண்டில் 5 மாதங்கள் மாத்திரமே எரிபொருள் மானியம் வழங்கப்பட்டது. இதன் பெறுமதி 126.64 மில்லியன் ரூபாவாகும்.

தற்போது நாடளாவிய ரீதியில் எரிபொருள் மானியம் நிறுத்தப்பட்டு அதற்குப் பதிலாக மீன்பிடி உபகரணங்கள் வழங்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. வெளியிணைப்பு இயந்திரங்களைப் பயன்படுத்தி தொழில் செய்பவர்களுக்கு ஒரு லட்சத்து 12 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான உபகரணங்களும், ஒரு நாள் கலத்தைப் பயன்படுத்தி தொழில் செய்பவர்களுக்கு 2 லட்சத்து 30 ஆயிரத்து 400 ரூபா பெறுமதியான உபகரணங்களும், பல நாள்கள் கடலில் தங்கி நின்று தொழில் செய்பவர்களுக்கு 3 லட்சத்து 74 ஆயிரத்து 400 ரூபா பெறுமதியான உபகர ணாங்களும் வழங்கப்படவுள்ளன.

இதற்குரிய பயனாளிகளின் பெயர்ப் பட்டியல் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தால் தெரிவு செய்யப்பட்டு அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் விரைவில் அவை சம்பந்தப்பட்ட மீனவர்களுக்கு வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (வ-5)

# கவனிப்பாரற்ற நிலையில் செல்லமுத்து விளையாட்டு மைதானம்



யாழ்ப்பாணம், மே 31

யாழ்ப்பாணத்தில் உள்ள மிக முக்கியமான விளையாட்டு அரங்குகளில் ஒன்றாக மானிப்பாய் செல்லமுத்து விளையாட்டு மைதானம் திகழ்கின்றது. தற்போது அந்த மைதானம் கவனிப்பாரற்ற நிலையில் காணப்படுகின்றது.

பல முன்னணி விளையாட்டு வீரர்களும் கலைஞர்களும் உருவாகக் காரணமாக இருந்த பெருமையைக் கொண்ட குறித்த விளையாட்டு அரங்கு மானிப்பாய் பிரதேச சபையின் நிர்வாகத்துக்கு உட்பட்டதொன்று. இதனைப் புனரமைப்புச் செய்ய அதிகாரிகளால் இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

இங்கு போட்டிகளை நடத்துவதற்கு பிரதேச சபையிடம் பணம்செலுத்தி அனுமதியும் பெறவேண்டியுள்ளது. ஆனால் குறித்த விளையாட்டரங்குக்கு எதுவிதஅபிவிருத்திகளும் மேற்கொள்ளப்படவில்லை.

அத்துடன் அரங்கத்தின் கூரைகள் முற்றிலும் சேதமடைந்துள்ளதுடன் அரங்கம் ஆடு, மாடுகள் படுத்துறங்கும் இடமாக மாறியுள்ளது.

எனவே குறித்த விளையாட்டு அரங்கைத் திருத்தி உரிய வகையில் பராமரிக்க பிரதேச சபைநடவடிக்கைமேற்கொள்ள வேண்டும் என்று பிரதேச வாசிகள் அங்கலாய்க்கின்றனர்.

மானிப்பாய் பகுதியிலுள்ள பிரதானமான மைதானமாக இது திகழ்வதுடன் கிரிக்கெட் போட்டி, உதைபந்தாட்டப் போட்டி இரண்டையும் ஒரே நேரத்தில் நடத்தக்கூடிய விசாலமான மைதானமாகவும் உள்ளது.

எனவே இதனை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் எடுத்து புனரமைக்க வேண்டும் என்று மக்கள் கோரியுள்ளனர். (வ-86)

# குருவில்வான் கிராமத்தில் வசித்துவரும் தமிழர்களை வெளியேறுமாறு உத்தரவு

## பெரும்பான்மை இன மக்களை குடியேற்றுவதற்கு முயற்சி; நேரில் சென்று பார்வையிட்டது மன்னார் பிரஜைகள் குழு



கிராமத்தைப் பார்வையிட்ட பிரஜைகள் குழு



இராணுவம் தமக்கான பிரதேசமாக ஒதுக்கியுள்ள இடம்

மன்னார்,மே 31

மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட குருவில்வான் கிராமத்தில் ஆண்டாண்டு காலமாக வசித்து வந்த மக்களை முன் அறிவித்தல் எதுவுமின்றி உடனே வெளியேறுமாறு வனவள ஜீவராசிகள் திணைக்களத்தால் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இதனால் பாதிக்கப்பட்ட அக் கிராம மக்கள் இந்த விடயம் குறித்து மன்னார் பிரஜைகள் குழுவின் கவனத்துக்கு மக்கள் கொண்டு வந்ததையடுத்து, மன்னார் பிரஜைகள் குழுவின் உப தலைவர் எஸ்.சகாயம் தலைமையிலான குழு மற்றும் மன்னார் பிரதேச சபையின் தவிசாளர் மார்டீன் டயஸ் ஆகியோர் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை குறித்த பகுதிக்குச் சென்று நிலைமை தொடர்பாக ஆராய்ந்தனர்.

வனவள ஜீவராசிகள் திணைக்களத்தின் அறிவித்தலை அடுத்து குறித்த பகுதியில் வாழ்ந்து வரும் 14 குடும்பங்கள் என்ன செய்வதென்று தெரியாமல் குழம்பிப் போயுள்ளனர்.

மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பாலபெருமாள்கட்டு கிராமசேவகர் பிரிவிலுள்ள குருவில்வான் கிராமம் கட்டுக்கரை குளத்தை அண்டிய செழிப்புமிக்க பிரதேசமாகும்.1972 ஆம் ஆண்டளவில் குறித்த பகுதியில் சுமார் 150 குடும்பங்கள் வாழ்ந்து வந்துள்ளனர். அவர்கள் கட்டுகரை குளத்தில் நன்னீர் மீன் பிடியில் ஈடுபட்டதுடன் மேட்டுநில பயிர்செய்கை மூலமும் தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்தி வந்துள்ளனர்.

நாட்டில் ஏற்பட்ட கடந்த காலப் போரால் குறித்த மக்கள் இந்தியாவின் தமிழ்நாடு உட்பட இலங்கையின் பல பாகங்களுக்கும் இடம்பெயர்ந்து சென்றுள்ளனர்.

அவர்கள் தற்போது ஏற்பட்டுள்ள சுமுகமான சூழ்நிலையை அடுத்து மீண்டும் குறித்த கிராமத்தில் மீள்குடி யேறி அடிப்படை வசதிகள் இன்றி வாழந்து வருகின்றனர்.

**கிராமத்தின் பல இடங்களிலும் இது இராணுவத்துக்குச் சொந்தமான இடம் என்று எழுதப்பட்ட அறிவிப்புப் பலகைகள் நிறுவப்பட்டுள்ளன.**

வளம்மிக்க குறித்த பகுதியில் உள்ள தமிழ் மக்களை வெளியேற்றிவிட்டு அந்தப் பகுதியில் சிங்களக் குடியேற்றங்களை அமைப்பதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளப் போவதாக மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

இந்தக் கிராமத்தில் பல இடங்களில் 'இது இராணுவத்துக்கு சொந்தமான இடம்' என்று எழுதப்பட்ட வாசகங்கள் அடங்கிய அறிவிப்புப் பலகைகளை இராணுவத்தினர் நிறுவியுள்ளனர்.

எமது மூதாதையர்கள்வாழ்ந்து வந்த மண்ணிலேயே நாம் தற்போது வாழ்ந்து வருவதாக அக் கிராம வாசிகள் கூறினர். இராணுவமோ அல்லது வனவள ஜீவராசிகள் திணைக்களமோ எம்மை எமது பூர்வீகக் காணியிலிருந்து அகற்ற முடியாது. இந்தப் பகுதியை விட்டு நாம் ஒருபோதும் வேளியேறப் போவதில்லை என்று மக்கள் தெரிவித்தனர்.

மக்களின் கருத்துகளைக் கேட்டு அறிந்து கொண்ட பிரஜைகள் குழு குறித்த பகுதியைச் சுற்றி பார்வையிட்டதுடன் , மக்களின் பிரச்சினைகளைச் சட்ட ரீதியாக அணுகுவதெனவும் தீர்மானித்துள்ளது. (ச)

# பாடசாலையில் சிறுவர்களை கற்க வைத்த உறுப்பினர்கள்

## சாந்தபுரத்தில் முன்மாதிரி

கிளிநொச்சி.மே 31

கிளிநொச்சி. சாந்தபுரம் கிராமப் பகுதிகளில் பாடசாலை செல்லாத மாணவர்களை வீடு வீடாகச்சென்று அழைத்து அவர்களுக்கான அடிப்படைத் தேவைகளை நிவர்த்தி செய்யும் முயற்சியில் கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் ஈடுபட்டுள்ளனர்.

சாந்தபுரத்தில் வாழ்கின்ற கிராமச் சிறுவர்களில் பலர் பல்வேறு பிரச்சினைகளால் பாடசாலை கல்வியைத் தொடர முடியாது இடை விலகுகின்றனர். அதனால் சிறார்களின் கல்வி பாதிப்படைவதை பலரும் சுட்டிக்காட்டியதையடுத்து ஓய்வுபெற்ற அதிபர் ஒருவரின் வழிகாட்டலில் நேற்று வெள்ளிக்கிழமை வீடுவீடாகச் சென்ற கிரா அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் 15 இற்கும் மேற்பட்ட பாடசாலை செல்லாத சிறுவர்களை அழைத்து வந்துள்ளனர். அத்தோடு அவர்களின் தேவைகளை ஆராய்ந்து உடன் தீர்த்து வைத்துப் பாடசாலையில் அவர்கள் கல்வி கற்பதற்கு வழியை ஏற்படுத்திக் கொடுத்துள்ளனர். இவ்வாறு அழைத்து வந்த சிறுவர்களில் 5 பேரின் தாயார் குடும்ப வறுமையால் பணிப்பெண்களாக வெளிநாடு சென்றுள்ளனர் என்று தெரியவந்துள்ளது.

இவ்வாறு பாடசாலை செல்லாத மாணவர்களைக் கண்டறிந்து அவர்களின் தேவைகளை நிவர்த்தி செய்யும் முன் மாதிரித் திட்டத்தை இனிவரும் காலங்களிலும் தொடரப்படும் என்று கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் தெரிவித்தனர். (ச-101)

# மன்னாரில் புகையிலை எதிர்ப்புத் தின ஊர்வலம்



ஊர்வலத்தில் பங்குபற்றிய மாணவர்கள்

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் வழிகாட்டலில் முசலி சுகாதார வைத்திய அதிகாரி எம்.ஒஸ்மன் சாள்ஸ் தலைமையில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை உலக புகையிலை எதிர்ப்புத்தினம் கொண்டாடப்பட்டது.

முசலி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சிலாபத்துறை வைத்தியசாலைக்கு முன்பாக இருந்து ஆரம்பமான உலக புகையிலை எதிர்ப்புத்தின ஊர்வலம் பிரதான வீதியூடாக சென்று முசலி பிரதேசச் செயலகத்தை சென்றடைந்தது.

இந்த ஊர்வலத்தில் மாணவர்கள் கலந்துகொண்டு புகைத்தலுக்கும்,புகையிலைப் பாவனைக்கும் எதிரான பதாகைகளை ஏந்தியவாறு ஊர்வலமாகச் சென்றமை குறிப்பிடத்தக்கது. (ச-56)

# பாடசாலைகளுக்குத் தினமும் தாமதமாகச் செல்லும் ஆசிரியர்கள்

## 30 நிமிடங்கள் பஸ்ஸை நிறுத்துவதால் நெருக்கடி

துணுக்காய், மே 31

யாழ்ப்பாணத்திலிருந்து துணுக்காய் நோக்கி காலையில் பயணிக்கும் இ.போ.ச. பஸ் மாங்குளம் சந்தியில் 30 நிமிடங்களுக்கு மேலாக தரித்து நிறுத்தப்படுகிறது.

அதனால் துணுக்காய், மாந்தை கிழக்கு பாடசாலைகளுக்குச் செல்ல வேண்டிய ஆசிரியர்கள் உரிய நேரத்துக்குப் பாடசாலைக்குச் செல்ல முடியாதுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து துணுக்காய் நோக்கிப் பயணிக்கும் முதலாவது இ.போ.ச. பஸ், காலை 7.45 மணிக்கு மாங்குளத்தைச் சென்றடைகின்ற போதிலும், 8.20 மணி வரை மாங்குளம் சந்தி யில் தரித்து நின்று பயணிப் பதனால் 8 மணிக்கு பாட சாலைக்குச் செல்ல வேண் டிய ஆசிரியர்கள் 8.30 மணிக்குப் பின்பே பாட சாலைகளுக்குச் செல்ல வேண்டிய நிலைமை ஏற்படுகிறது என்று பாதிக்கப்பட்டோர் தெரி வித்தனர்.

இந்த நெருக்கடி நிலை குறித்து துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளருக்கும், முல்லைத்தீவு அரச அதிபருக்கும் அறிவித்துள்ளோம் என்று பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் தெரிவித்தனர்.

பாண்டியங்குளம் மகா வித்தியாலயம், பாலிநகர் மகா வித்தியாலயம், மல்லாவி மத்திய கல்லூரி, யோகபுரம் மகா வித்தியாலயம், துணுக்காய் அ.த.க.பாடசாலை, வன்னிவிளாங்குளம் அ.த.க. பாடசாலை உட்பட மாந்தை கிழக்கு, துணுக்காய் கோட்டப் பாடசாலைகளின் ஆசிரியர்களே இவ்வாறான நெருக்கடி நிலையை எதிர்கொள்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-18)

# செரிமானக் கோளாறை ஏற்படுத்தும் உணவுகள்

நாவின் சுவைக்காகக் கடைகளில் விற்கப்படும் உணவுப் பொருள்களை நம்மை மறந்து அவ்வப்போது வாங்கிச் சாப்பிடுகிறோம். அப்படிச் சாப்பிடும் சில உணவுகள் எளிதில் செரிமானமடையாமல், வயிற்றில் உப்புசத்தை ஏற்படுத்திவிடுகிறது. அந்த வகை உணவுகள் சிலவற்றை நோக்குவோம்.







**ஐஸ் கிறீம்**

குழந்தைகள் முதல் பெரியவர் வரை அனைவருமே ஐஸ்கீறிமை ரசித்து ருசித்து சாப்பிடுவார்கள். அத்தகைய ஐஸ் கீறிம் கூட எளிதில் செரிமானமாகாமல், வயிற்றை உப்புசத்துடன் வைத்துக் கொள்ளும்.



**காரமான உணவுகள்**

காரமான உணவுகள் நாவுக்கு மிகவும் பிடித்தவையாக இருந்தாலும், அவற்றில் உள்ள காரமானது வயிற்றுச் சுவர்களைப் பாதித்து, வயிற்றுப் பிரச்சனைகளை ஏற்படுத்திவிடும்.






**வறுத்த உணவுகள்**

எண்ணெயில் போட்டு வறுத்த உணவுகளில் கொழுப்புக்கள் அதிகம் இருப்பதால், இவற்றை உட்கொண்டாலும், அவை எளிதில் செரிமானமடையாமல், தொந்தரவை ஏற்படுத்தும்.

**பருப்பு வகைகள்**

பருப்புக்களில் ஒரு வகையான சர்க்கரையானது உள்ளது. எனவே தான் பருப்பு சிறிது சாப்பிட்டாலும் வயிறு நிறைந்திருப்பது போல் உள்ளது. மேலும் இந்த மாதிரியான உணவுப் பொருளை இரவு நேரத்தில் சாப்பிடக்கூடாது.



**பச்சை வெங்காயம்**

வெங்காயத்தைப் பச்சையாகச் சாப்பிடும் போது, உற்பத்தி செய்யப்படும் வாயுவானது வயிற்றில் உப்புசத்தை ஏற்படுத்தும்.



**மாட்டிறைச்சி**

மாட்டிறைச்சியில் புரோட்டீன் மற்றும் கொழுப்பு எண்ணற்ற அளவில் உள்ளதால், இவையும் எளிதில் செரிமானமடையாது.

**சீஸ்**

சீஸில் புரோட்டீன், கொழுப்பு மற்றும் லாக்டோஸ் அதிக அளவில் நிறைந்திருப்பதால், சீஸ் உள்ள உணவுப் பொருள்களை உட்கொண்டால், நீண்ட நேரம் வயிறு நிறைந்து காணப்படுகிறது.



**பால்**

பாலில் புரோட்டீன், கொழுப்புக்கள் மற்றும் லாக்டோஸ் அதிகம் இருப்பதால், மாலை இவற்றை உட்கொண்டாலும், அவை எளிதில் செரிமானமாகாது.



# வாழ்வில் முன்னேற அவசியமானது தன்னம்பிக்கை



வாழ்வில் முன்னேற மிக அவசியமானது தன்னம்பிக்கை தான். தன்னம்பிக்கை உள்ளவனால்தான் மிகப் பெரிய அளவில் சாதிக்க முடியும்.

தன்னம்பிக்கை உள்ளவர்களைப் பார்த்தாலே தெரியும் . தனது குறிக்கோளை அடைய எதுவெல்லாம் தேவையோ அதைத் தெளிவு படுத்திக்கொண்டு அதை மட்டுமே கருத்தில் நிறுத்தி செயல்படுவான். எதற்காகவும் குறைபட்டுகொள்ள மாட்டார்கள்.

தனது குறிக்கோளை அடையும் வரை விடா முயற்சியுடன் முயற்சித்துக்கொண்டே இருப்பான் . தன்னை நேசிப்பதைப் போலவே பிறரையும் தன்னை சுற்றி இருப்பவரையும் நேசிப்பான். மற்றவர்களின் கருத்துக்கு மதிப்பளிப்பான். மற்றவர்கள் தன்னை எப்படியெல்லாம் நடத்த வேண்டுமென்று நினைக்கிறானோ அதுபோலவே மற்றவர்களை அவன் நடத்துவான் .

வீண் பேச்சுக்களில், விவாதங்களில் பங்கெடுக்காமல் பேச்சை விட செயல் முக்கியம் என்பதில் கவனமாயிருப்பான் . சதா சர்வ காலமும் தனது இலட்சியத்தில் உள்ள ஆர்வத்தை குறைத்துக் கொள்ளாமல் ஒரே சமநிலையில் வைத்துக்கொள்வான்.

உழைக்கும் போது வெற்றியைப் பற்றி எண்ணிக்கொண்டிருக்காமல் தனது செயலில், கடமையில் கருத்தாக செயல்படுவான். மிக முக்கியமாக முன்னேற விரும்புபவன் தன்னைப் பற்றி மிக நன்றாகப் புரிந்து வைத்திருப்பான். எந்த விடயத்தையும் தள்ளிப்போடமாட்டான். மொத்தத்தில் உற்சாகமாக இருப்பான்.

இப்படியெல்லாம் இருப்பவர்களைப் பார்த்தாலே தெரியும் இவன் முன்னேற்றப்பாதையில் சென்று கொண்டிருப்பவன் என்று விளங்கிக் கொள்ளமுடியும். அப்படிப்பட்ட தன்னம்பிக்கை உடையவனாக நாமும் இருப்போம்.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## அரசியல் வாழ்க்கையை அர்த்தப்படுத்தல்

இலங்கையின் ஜனாதிபதியான மஹிந்த ராஜபக்ஷ அரசியலில் நுழைந்து கடந்த 27ஆம் திகதியுடன் 44 ஆண்டுகள் நிறைவு பெற்றுள்ளன. 1970ஆம் ஆண்டு மே மாதம் முதலாம் திகதி அவர் முதல் தடவையாக நாடாளுமன்றத்துக்குள் காலடி எடுத்து வைத்ததார். அன்று முதல் பிரகாசமாக ஆரம்பித்த அவரது அரசியல் வாழ்க்கை, இலங்கையில் முதன்முதலில் மூன்றாவது தடவையாகவும் ஜனாதிபதியானவர் என்ற பெருமையைப் பெறுவாரா என்ற எதிர்பார்ப்பு வரைக்கும் வளர்ந்து சென்றிருக்கிறது.

44 ஆண்டுகள் தொடர்ந்து முழு நேர அரசியலில் இருப்பதென்பது சாதாரண விடயமன்று. எல்லா அரசியல்வாதிகளுக்கும் கிடைத்தற்கரிய பேறு அது. அதிலும் தொடர்ச்சியாக அதிகார வளர்ச்சி கண்டு, இன்று அதி உச்சபட்ச அதிகாரத்தைக் கைப்பற்றுமளவுக்கு உயர்ந்திருக்கும் மஹிந்தவின் அரசியல் வாழ்க்கை எல்லா அரசியல்வாதிகளுக்கும் வாய்த்துவிடாது.

அரசியலுக்குள் மஹிந்த நுழைவதற்கு முன்னரே அவருக்கு அரசியல் குடும்பப் பாரம்பரியம் இருந்தது. எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து பிரிந்து சென்று சிறீலங்கா சுதந்திரக் கட்சியை உருவாக்கியபோது, அவருடன் சென்ற ஒரேயொரு நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தவின் தகப்பனாரான ராஜபக்ஷ மட்டும்தான்.

அன்று எந்த நம்பிக்கையில் பண்டாரநாயக்கவின் பின்னால் ராஜபக்ஷ சென்றார் என்பது தெரியாது. ஆனால், அதன் பின்னர் சிங்களம் மட்டுமே ஆட்சி மொழி என்று கூறி சிங்கள இனவாதத்தை மீண்டும் தூசு தட்டிக் கிளர்ந்தெழ வைத்து இலங்கையில் தமிழ் - சிங்கள இன முரண்பாட்டுக்குப் பெற்றோல் ஊற்றி எரிய வைத்த பண்டார நாயக்காவின் பின்னால் ராஜபக்ஷவும் அசைக்க முடியாத தூணாக நின்றிருந்தார் என்பது அனைவருக்கும் தெரியும்.

அதுவரையில் இன முரண்பாடாக இருந்த பிரச்சினை, வன்முறை என்ற நெருப்பாய் மூண்டெரிவதற்கு தனிச் சிங்களச் சட்டம் வழிகோலியது. சிங்கள 'சிறி' எதிர்ப்புப் போராட்டம் தமிழ் இளைஞர்களைத் தீவிரமாகச் சிந்திக்கத் தூண்டியது. இலங்கை, தமிழர்களுக்கும் சொந்தமான நாடு அல்ல என்ற எண்ணத்தை அவர்கள் மத்தியில் வலுவாக ஊன்றியது. ஆயுதப் போராட்டம் மட்டுமே மீட்சிக்கான ஒரே வழி என்றும் இலங்கையைப் பிரித்து தனி நாடு காண்பதே தமிழர்களுக்குப் பாதுகாப்பானது என்றும் தமிழ் இளைஞர்களை முடிவு செய்ய வைத்தது.

அதன் விளைவை 30 ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கை அனுபவித்திருக்கிறது. விலைமதிப்பற்ற, லட்சத்துக்கு மேற்பட்ட உயிர்கள் இழக்கப்பட்டிருக்கின்றன. எண்ணுக்கணக்கற்ற சொத்து அழிவுகள் ஏற்பட்டிருக்கின்றன. மீண்டும் சரி செய்ய முடியாத அளவுக்கு இரு இனங்களுக்கும் இடையில் பிளவுகள் ஏற்பட்டிருக்கின்றன. இவை எல்லாவற்றிலும் ராஜபக்ஷவுக்கும் பங்கிருக்கிறது. அதன் பின்னர் மஹிந்தவின் ஆட்சியில் நடந்தவைகளை இந்த உலகமே அறியும்.

ஆக, இனப் பிரச்சினையின் வேரிலிருந்து மஹிந்தவின் குடும்பம் இதில் தொடர்புபட்டிருக்கிறது. மஹிந்த மட்டுமே 44 வருடங்களாகத் தொடர்புபட்டிருக்கிறார். இதற்கு முன்னர் எப்போதும் இல்லாத வகையில் தமிழர்களுக்கு இலங்கையில் மிக மோசமான காலமாக அவரது ஆட்சிக்காலமே அமைந்தது.

எல்லாவற்றையும் தாண்டி, இப்போது போர் ஓய்ந்து விட்டது. அதிகாரத்தைப் பகிர்ந்து கொண்டு இந்த அமைதியை நிரந்தரமானதாக்கி, இனங்களுக்கு இடையிலான பகைமையை நீக்கிவிடுவதற்கு இதைவிடவும் பொருத்தமான காலமும், இதைவிடவும் பொருத்தமான அரசியல் தலைவரும் இனி வரும் காலத்தில் கிடைக்கும்; கிடைப்பார் என்று எதிர்பார்க்க முடியாது.

44 ஆண்டுகளை முழுமையான அரசியலில் கழித்த ஒருவருக்கு, இலங்கை பற்றிய தூர நோக்கு இல்லாமல் இருக்க முடியாது. அப்படி இல்லாமல் இருந்தால் இவ்வளவு நாளும் அவர் அரசியல் செய்ததற்கு அர்த்தமே இல்லாமல் போய்விடும். எனவே இந்தச் சந்தர்ப்பத்திலாவது தமிழர்களுடன் அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்வதற்கு மஹிந்த முன்வரவேண்டும். தனது அரசியல் வாழ்க்கையை அவர் அர்த்தப்படுத்திக்கொள்ள வேண்டும்.

# ராஜபக்ஷவின் பயணம்

## இனப்பிரச்சினைத் தீர்வுக்கு பின்னடைவில்லை



பத்ரிசேஷாத்ரி

ராஜபக்ஷவின் பயணத்தால் இனப்பிரச்சினை தீர்வுக்குப் பின்னடைவில்லை. நரேந்திரமோடி இந்தியப் பிரதமராகப் பதவியேற்கும் நிகழ்வுக்கு இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை அழைத்தமைக்கு எதிராக உணர்வலைகள் தமிழகத்தில் கிளர்ந்திருந்தன. அரசியல் கட்சிகளும் தலைவர்களும் காரசாரமாக அதனைக் கண்டிக்கும் நிலைமை நீடித்தது; நீடிக்கின்றது. ஆனால் சில தமிழக நாளேடுகளும் சஞ்சிகைகளும் அந்த நடவடிக்கையை வரவேற்கும் விதத்தில் கட்டுரைகள், செய்திகள், ஆசிரிய தலையங்கங்களை வெளியிட்டு வருகின்றன. அந்த வரிசையில் 'ராஜபக்ஷ வருகை: தமிழர் பிரச்சினைக்கு பின்னடைவு இல்லை' - என்ற தலைப்பில் அண்மைய தமிழக நாளிதழ் ஒன்று கட்டுரையைப் பிரசுரித்துள்ளது. எழுத்தாளர் பத்ரி சேஷாத்ரி வரைந்த இந்தக் கட்டுரையின் முழு வடிவம் அப்படியே வருமாறு:-

நாட்டின், பதினான்காவது பிரதமராக, நரேந்திரமோடி பதவி ஏற்கும் நிகழ்வு, மிகப்பெரிய கொண்டாட்டம்தான். அதில், எந்தச் சந்தேகமும்இல்லை. ஆனால், அந்தநிகழ்வுக்கு, 'சார்க்' நாடுகளின் தலைவர்களை அழைத்திருப்பது, குறிப்பாக இலங்கைஜனாதிபதி ராஜபக்ஷவை அழைத்திருப்பது, மிகப் பெரிய கொந்தளிப்பை, உலகத் தமிழர்கள் மத்தியில் ஏற்படுத்தி உள்ளது. அழைப்பதில் தவறில்லை, எடுத்த எடுப்பிலேயே இப்படியொரு எதிர்ப்பை, புதிதாகப் பதவியேற்கும் அரசு எதிர் கொள்ளத்தான் வேண்டுமா எனக் கேட்டால், கொஞ்சம் யோசித்து இந்த விடயத்தைக் கையாண்டிருக்கலாமோ என நினைக்கத் தோன்றுகிறது. அதற்காக, ராஜபக்ஷவை பதவியேற்பு விழாவுக்கு அழைத்ததால் தமிழர்கள் பிரச்சினையில் பெரும் பின்னடைவு ஏற்பட்டிருப்பதாகவும் யாரும் கருத வேண்டியதில்லை. பக்கத்து வீட்டுக்காரன், நம்மோடு பகைதான். ஆனாலும் நம் வீட்டில் ஒரு சுபகாரியம் நடக்கும்போது அவனை மரியாதை நிமித்தமாக நிகழ்வுக்கு அழைப்பதில் தவறில்லைத்தான். அந்த சுப நிகழ்வுக்கு அழைத்துவிட்டதால் ஆண்டாண்டு காலமாக நிலவிவந்த பகை ஒரே நாளில் தீர்ந்துவிடும் எனச் சொல்ல முடியாது. பக்கத்து வீட்டுக்காரனின் மனநிலையும் ஒரேநாளில் மாறிவிடும் எனஎதிர்பார்க்க வேண்டியதில்லை. அப்படியொரு சாதாரண நிகழ்வாகவே, பதவியேற்பு விழாவுக்கு அழைத்ததை, நாம் எடுத்துக் கொள்ள வேண்டும். ஆனால் பக்கத்து வீட்டுக்காரன் சுப நிகழ்ச்சிக்கு அழைக்கப்பட்டு, வருகை தரும் போது, நமக்குள்ளேயே இருக்கும் சிலர் பக்கத்து வீட்டுக்காரனை வன்மத்தோடு எதிர்கொண்டு விடக்கூடிய ஆபத்து இருக்கிறது. அப்படி எந்தவொரு எதிர் மறையான விளைவுகளும் ஏற்பட்டு விடக்கூடாது என்கிற பதற்றத்தை ஏற்படுத்தக்கூடாது என்பதுதான், நியாயமானசிந்தனை. ராஜபக்ஷ வருகையால், இங்கே ஏதும் மோசமான நிகழ்வு நடந்து விடக்கூடாது என்று நினைக்கிறோம். காரணம் இலங்கையில் நடந்த பிரச்சினைகளால், மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கு ஆளாகி இருக்கும் நபர் ராஜபக்ஷ. அதற்காக அவர் தண்டிக்கப்பட வேண்டும் என இங்கிருக்கும் தமிழ் அமைப்புகளும், உலகத்தின் பல மூலைகளிலும் இருக்கும் தமிழ் அமைப்புகளும்கோரிக்கை விடுத்து வருகின்றன.

**இலங்கைத் தமிழர் பிரச்சினை என்பது அண்டை நாட்டு பிரச்னை தான் என்பதில் மாற்றுக் கருத்தில்லை. இருந்தாலும், ஒருஇனம், மற்றொரு இனத்தால் பாதிக்கப் பட்டதை, மனிதாபிமானத்தோடு எதையும் எதிர் கொள்ளும் இந்தியா போன்ற ஜன நாயகநாடு, தட்டிக் கேட்கத்தான் வேண்டும்; தடுக்கத்தான் வேண்டும். இதைச் செய்தால்தான், காலப்போக்கில் அங்கிருக்கும் தமிழர்களுக்கு, பிரச்சினைகளில் இருந்து நல்லதீர்வு கிடைக்கும். அதை, புதிய பா.ஜ. அரசுசெய்யவேண்டும்.**

இந்தச் சூழ்நிலையில், பெரும் வெற்றியடைந்திருக்கும், பா.ஜ.க. தரப்பு, இங்கிருக்கும் தமிழ் மக்களின் உணர்வுகளுக்கும் மதிப்பு அளித்திருக்கலாம். இந்தியாவில் நடக்கும்ஒரு பதவியேற்புவிழாவுக்கு வரும், இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவிடம், இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து, யாரும் பேசப்போவதில்லை. அதுஒரே நாளில், ஒரே நேரத்தில் பேசி முடிக்கக்கூடிய பிரச்சினையும் அல்ல. அதனால், அவர் வருகைக்கு அவ்வளவு முக்கியத்துவமும் தரவேண்டியதில்லை. இங்கே இருக்கும் சின்ன சலசலப்புகளும்கூட, அவர் வந்து விட்டுப் போன பின்னால், அடங்கிவிடும். இலங்கையைப்பொறுத்த வரையில், முன்னாள் ஜனாதிபதியாக இருந்த ஜெயவர்த்தனமுதல், அனைவருமே புத்திசாலித்தனமாகவே, தமிழ் இனப்பிரச்சினையைக் கையாண்டு வருகின்றனர். தமிழர் பிரச்சினையில், அவர்கள் தங்களுக்குச் சாதகமான அம்சங்களை மட்டுமே பிரதானப்படுத்தி, அதை வைத்து இலங்கையிலும், வெளியேயும் மிகப் பெரிய இலாபத்தை சம்பாதிப்பவர்கள். அப்படிப்பட்டவர்களில், மிகுந்த சாதுர்யமான நபராகத் தன்னைக்காட்டி வருபவர்தான் ராஜபக்ஷ. அவரை, நாம் அவ்வளவு எளிதாக அணுகி, பிரச்சினையைத் தீர்த்து விடமுடியாது. புதிய அரசின் வெளியுறவுக் கொள்கை என்ன என்பதையே முழுமையாக அறியாத சூழ்நிலையில், அவரின் இந்திய வருகையால், இலங்கைப் பிரச்சினைக்குத் தீர்வு கிட்டிவிடும் என்றோ, பிரச்சினை இன்னும் மோசமான சூழ் நிலையை எட்டப்போகிறது என்றோ யாரும் சொன்னால், அதைக் கேட்கவேண்டிய அவசியமில்லை. ஏனெனில், பதவியேற்பு விழாவுக்கு வருகிறவர், அந்த நிகழ்ச்சியை முடித்ததும், திரும்பிச் செல்லப்போகிறார். ராஜபக்ஷவுக்கு, உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் கடும் அழுத்தமும், நெருக்கடியும் பல வகையிலும் இருந்து வருகிறது.

இந்தச் சூழலில், இந்தியாவோடு இணக்கமான போக்கைக் கடைபிடிப்பதுபோல காட்டிக் கொள் வது, அவருக்கு நல்லது. அதாவது, உலக நாடுகளின் அழுத்தம் குறையலாம். அதை நினைத்தே, விழாவுக்கு எப்படா கூப்பிடுவார்கள் என, காத்திருந்தது போல, பதவியேற்பு விழாவுக்கு அழைத்ததும், முதல் ஆளாக வருகை தரச் சம்மதித்திருந்தார்.

இப்போதும் ஒன்றும் கெட்டுப்போய் விடவில்லை. வீட்டுக்கு வரும் விருந்தாளியை நல்லவிதமாக மரியாதைசெய்து அனுப்பிவைத்து விட்டு, கொஞ்ச நாள்களுக்குப்பிறகு, இந்தியத் தூதரகம் மூலமாக, இலங்கைப் பிரச்சினையை, மத்திய அரசு திடமான எண்ணத்துடன் அணுகவேண்டும். நல்ல தீர்வு கிடைக்கும்.

இலங்கைத் தமிழர் பிரச்சினை என்பது அண்டை நாட்டு பிரச்சினை தான் என்பதில் மாற்றுக் கருத்தில்லை. இருந்தாலும், ஒரு இனம், மற்றொரு இனத்தால் பாதிக்கப்பட்டதை, மனிதாபிமானத்தோடு எதையும் எதிர் கொள்ளும் இந்தியா போன்ற ஜன நாயக நாடு, தட்டிக்கேட்கத்தான் வேண்டும்; தடுக்கத்தான் வேண்டும். இதைச் செய்தால்தான், காலப்போக்கில் அங்கி ருக்கும் தமிழர்களுக்கு, பிரச்சினைகளில் இருந்து நல்ல தீர்வு கிடைக்கும். அதை, புதிய பா.ஜ.க. அரசு செய்ய வேண்டும்.

ஏனென்றால், இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு நல்லதீர்வு ஏற்படுத்தப்படும் என, பா.ஜ. கவினர் தேர்தல் பரப்புரையின் போது, உறுதிகொடுத்துள்ளனர்.

அதனால், கல்யாணவீட்டுக்கு வருகை தருபவர்களை வைத்து, கலாட்டா - எதிர்ப்பு தெரிவிப்பதைக் காட்டிலும், காலம் காலமாக இருக்கும் பிரச்சினையைத் தீர்க்க உதவியாக புதிய அரசு இருக்க வேண்டும் என, இப்போதிலிருந்தே அழுத்தம் கொடுப்பது தான் சரியாக இருக்கும்.

வாசகன்

## இன்று யாழ்ப்பாண பொதுநூலகம் தீயிட்டு அழிக்கப்பட்டதன் 33 ஆவது ஆண்டு நிறைவு தினம்



# இன வெறியர்களால் சாம்பல் மேடாக்கப்பட்ட யாழ்ப்பாண பொது நூலகம்

ஈழத் தமிழர்களின் வரலாற்றிலே 1981 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆம் நாள் சாம்பலில் தோய்ந்த ஒரு கறுப்பு நாளாகவே பதிவு செய்யப்பட்டுவிட்டது. ஆம் அன்றுதான் ஈழத் தமிழர்களுக்கு மட்டுமல்லாது, ஒட்டு மொத்த தமிழர்களுக்கும் ஓர் அறிவுப் புதையலாகவும், கல்விக் கருவூலமாகவும் விளங்கிய யாழ்ப்பாணப் பொது நூலகம் இனவெறிக் கும்பல் ஒன்றினால் நள்ளிரவு வேளையில் தீயிட்டு சாம்பல் மேடாக்கப்பட்டது.

சுமார் ஒரு லட்சம் நூல்களுடன் தென் கிழக்காசியாவிலேயே மிகப்பெரிய நூலகமாகத் திகழ்ந்த யாழ்ப்பாணப் பொது நூலகம் தீயினால் அழிந்த செய்தியைக் கேட்டதும் திடீர் மாரடைப்பு ஏற்பட்டுத் தமது உயிரை நீத்தார் பேரறிஞரும், ஆராய்ச்சியாளருமாகிய தாவீது அடிகள். அவர் தமது உயிரை விடவும் இந்த நூலகத்தைப் பெரிதும் நேசித்து வந்தமை இதன் மூலமாக நிரூபணமாகிறது.

அன்று இரவு பத்து மணியளவில் நூலகத்தினுள் நுழைந்த இனவெறிக் கும்பல் அங்கிருந்த காவலாளியை முதலில் துரத்தியடித்தனர். பின்னர் தாம் முன்னேற்பாடாகக் கொண்டு வந்த உபகரணங்களின் உதவியுடன் நூலகத்தின் கதவுகளை உடைத்தவாறு உள்ளே நுழைந்தது அந்தக் கும்பல். அந்தக் கும்பலில் இருந்தவர்களின் கண்களுக்கு அங்கிருந்த நூல்கள் தமிழர்களின் உருவத்தை ஒத்ததாகக் காணப்பட்டன. கடும் சினத்துடன் அங்கு வைக்கப்பட்டிருந்த நூல்களுக்கும் தேடற்கரிய பெறுமதி வாய்ந்த ஓலைச் சுவடிகளுக்கும் பெற்றோலைத் தாராளமாகத் தெளித்த பின்னர் தீமூட்டி எரித்தழித்தனர். நூல்கள் கொளுந்து விட்டு எரிவதைக் கண்டதும் பெருங்குரலில் ஆர்ப்பரித்துத் தமது மகிழ்ச்சியை அந்தக் கும்பலைச் சேர்ந்தவர்கள் வெளியிட்டனர். நூலகம் எரிக்கப்பட்ட செய்தியைக் கேட்டதும் மறுநாள் லட்சோப லட்சம் தமிழர்கள் வெளியிடப்போகும் கண்ணீர்த் துளிகள் அப்போது கிடைத்திருந்தால் தீயை ஒருவாறு கட்டுப்படுத்தியிருக்கலாம் என்று கற்பனையாக ஆதங்கப்பட்டவர்களும் இல்லாமல் இல்லை.

இந்தப் பொதுநூலக எரிப்புச் சம்பவம் இலங்கையில் தொடரும் இனப் பிரச்சினையில் ஒரு முக்கியமான அத்தியாயமாகத் திகழ்கின்றது. மேலும் 20 ஆம் நூற்றாண்டில் இடம்பெற்ற மிக மோசமான வன்முறைச் சம்பவமாகவும் கருதப்படுகின்றது. அதிலும் அப்போதைய இலங்கையரசின் அமைச்சரவையில் முக்கிய பங்கு வகித்த அமைச்சர் ஒருவரும், பெரும்பான்மையின அரசியல் தலைவர்களும் நூலக எரிப்புச் சம்பவத்தின் சூத்திரதாரிகளாகத் திகழ்ந்ததாக இன்னமும் நம்பப்பட்டு வருகின்றது.

இலங்கையின் சிறுபான்மையினத்தவர்களில் ஒரு சாராரான தமிழர்கள் பொதுவாகவே கல்வியில் சிறந்து விளங்கினர். தமிழ் மாணவர்கள் பெருமளவில் பல்கலைக்கழக அனுமதியைப் பெற்று உயர் கல்வியைப் பெற்று வந்தனர்.

இதனை இனவாதிகளால் பொறுக்க முடியவில்லை. இதனால்தான் திறமைக்கு வேட்டு வைக்கும் தரப்படுத்தல் முறை நடைமுறைப் படுத்தப்பட்டது. இதனால் தமிழ் இளைஞர்களின் கல்விக்குச் சாவுமணி அடிக்கப்பட்டது. திறமையிருந்தும் உயர் கல்விக்கான வாய்ப்புக் கிடைக்காததால் இளைஞர்கள் மத்தியில் விரக்தியும், வேதனை யும் ஏற்படத் தொடங்கின. இளைஞர்கள் ஆயுதம் ஏந்திப் போராடுவதற்கு இதுவே வழிவகுத்தது என்று கூறலாம்.

ஆனாலும், தமிழர்கள் கல்வியில் உயர் நிலையில் இருப்பதை விரும்பாத இனவாதிகள் அதற்கு நிரந்தர முற்றுப்புள்ளி வைக்க நினைத்ததன் விளைவாகவே இந்த நூலக எரிப்புச் சம்பவம் நிகழ்ந்தது என்று துணிந்து கூறலாம். ஆனால் இன்றுவரை இந்தக் கொடிய செயலுடன் தொடர்புடைய எவரும் சட்டத்தின் முன்னால் நிறுத்தப் படவில்லை என்பது தமிழர்களின் இதயங்களை நெருடிக்கொண்டே இருக்கும்.

இது போன்ற சம்பவங்கள் இதற்கு முன்னரும் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுள்ளன. நல்லூர் நாயன்மார் கட்டில் அமைந்திருந்த யாழ்ப்பாண இராசதானியின் தேசிய நூலகமான சரஸ்வதி நூலகம் தீயிட்டுப் பொசுக்கப்பட்டது. இங்கு பல சித்த மருத்துவத்துடன் தொடர்புடைய நூல்கள் பாதுகாத்து வைக்கப்பட்டிருந்தன.

மேலும் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி நூலகமும் 1984 ஆம் ஆண்டு செப் ரெம்பர் மாதம் முதல்நாள் தீயிட்டு அழிக்கப்பட்டது.

ஆகவே தமிழர்களின் கல்விச் செல்வத்தை முற்றாக அழித்துத் துடைத்தழிப்பதை இனவாதிகள் ஓர் ஆயுதமாகப் பயன்படுத்தி வந்தமை தெளிவாகத் தெரிகின்றது.

இன்று யாழ்.பொது நூலகம் புதுப்பொலிவுடன் திகழ்ந்தாலும் அழிக்கப்பட்ட அரிய நூல்களும், ஓலைச் சுவடிகளும் திரும்பக் கிடைக்கப் போவதில்லை. கடந்த 33 ஆண்டுகளுக்கு முன்னர் தமிழர்களின் பெரும் பொக்கிஷமாகத் திகழ்ந்தநூலகம்அழிக்கப் பட்ட சோக நினைவுகள் என்றுமே தமிழர் களின் மனங்களில் இருந்து மறைந்து விடாது. தமிழரின் வரலாற்றில் இந்தச் சம்ப வம் ஒரு கரும்புள்ளியாக மாறி உறுத் திக் கொண்டே இருக்கும் என்பதில் ஐயமே இல்லை.



---

செல்வி தீபிகா செல்வநாதன்
3 ஆம் வருடம், உளவியல்
சிறப்புக்கலை.யாழ்.பல்கலைக்கழகம்.

## இன்று உலக புகையிலை மறுப்பு தினம்

# புகைத்தலும் உடல்- உளநலப் பாதிப்பும்

இன்று உலகளாவிய ரீதியில் புகைத்தல் சர்வ சாதாரணமாகி சமூகத்தில் வயது வந்தவர்களையும் கடந்து பாடசாலை செல்லும் இளைஞர்கள் மத்தியிலும் அதிகமாக புழக்கத்தில் காணப்படுவது கவலைதரும் விடயமாகும். அதே நேரம் அதுவே கலாசாரமாகவும் பருவ வயதை அடைகின்ற போது நாகரிகமாகவும், சமூகத்தின் முது கெலும்புகளான இளைஞர் சமூகத்தின் நடத்தைகளுடன் இரண்டறக் கலந்திருப்பது சமூகத்தின் உயிர்த்துடிப்பைநசுக்கும்நச்சுத்தன்மை வாய்ந்த செயலாகும்.

நாம் இலங்கையை எடுத்துப் பார்ப்போமேயானால் இலங்கை மக்க ளின் ஆரோக்கியத்திலும், சமூக, கலாசார, பண்பாட்டு விழுமியங்களிலும் புகைத்தல் பழக்கம் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி யுள்ளதை ஆய்வுகள் வெளிப்படுத்தி யுள்ளன. இது தொடர்பாக ஊடகங்களிலும் சுட்டிக் காட்டும்செய்திகள் இடம்பெறுகின்றன.

புகைத்தல், மதுபானப் பழக்கவழக்கங்கள் , நாட்டில் வறுமை மற்றும் போசாக்கின்மை அதிகரிப்பதற்கு காரணமாக அமைந்துள்ளன. இவை இரண்டின் காரணமாகவும் இலங்கையில் மாதாந்தம் 7,875 பேர் மரணமாகின்றனர். இதன்படி இலங்கையில் தினமொன்றுக்கு 54 பேர் புகைத்தல் காரண மாக இறக்கின்றனர். புகைத்தலுக்காக இலங்கை மக்கள் நாள் ஒன்றுக்கு பல மில்லியன் ரூபாவை செல விடுகின்றனர். புகைத்தலினால் ஏற்படும் நோய்களுக்கு வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறுபவர்களுக்காக பெருந்தொகை நிதி செலவிடப்படுவதாக இலங்கை சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. அதே சமயம் யாழ். மாவட்டம் புகைத்தலில் முதலாம் இடத்தில் இருப்பதாக அண்மையில் அரச சார்பற்ற நிறுவனம் ஒன்று மேற்கொண்ட ஆய்வொன்றில் தெரிய வந்துள்ளதாக தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

புகைத்தலால் உடல் ரீதியாகப் பல மோசமான விளைவுகள் ஏற்படுகின்றன.

சுவாச , வாய், தொண்டை புற்றுநோய் ஏற்படும்.



ஆண்மைக் குறைவு ஏற்படும்.

புகைத்தல் இரத்த அழுத்தத்தை அதிகரிக்கும். இதனால் உயர் இரத்த அழுத்தம் ஏற்படும்.

கண்களில் வெண்புரை நோய் வருவதற்கான வாய்ப்பு அதிகம்.

முரசு வீங்குதல், முரசு கரைதல், வாய்த்துர் நாற்றம் ஆகியவற்றைத் தோற்றுவிப்பதுடன் பற்கள் விரைவில் விழுந்து விடுவதற்கும் புகைத்தல் காரணமாக அமைகிறது.

பக்கவாதம், சிறுநீரகப் பாதிப்பு ஏற்படலாம்.

சிகரெட் புகையில் ஏறக்குறைய 4,800 வேதிப் பொருள்கள் உள்ளன. இதில் பெரும்பாலானவை இருதயத்துக்கும் இரத்தக் குழாய்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும். இவை இரத்தக் குழாய்களை குறுக்கி விடுகின்றன. இதனால் இரத்த ஓட்டம் குறைந்து மாரடைப்பு ஏற்படுகிறது.

நிகொட்டின் இரத்தக் குழாய்களை குறுக்குவதால் இதயத்தை அதிக வேலை செய்ய வைக்கிறது. இதனால் இரத்த அழுத்தம் ஏற்படுகிறது.

சிகரெட் புகையில் இருக்கிற கார்பன் மோனாக்சைட் இரத்தத்தில் இருக்கிற ஒட்சிசனை வெளியேற்றிவிடுகிறது. இதனால் தேவையான ஒட்சிசனைப் பெற இதயம் அதிகளவில் வேலை செய்ய வேண்டியிருக்கிறது.

குருதிக் குழாய்களுக்குச் செல்லும் இரத்தத்தின் அளவு குறைவடையும். எனவே தோலில் மாற்றம் ஏற்படும்.

மிருதுவான தசைகள் எல்லாம் தளர்வடைந்து தொங்குகிற மாதிரியாக மார்பு காணப்படும்.

பெண்களின் இனப்பெருக்க ஆற்றல் குறையும்.

அத்துடன்உளப்பிரச்சினைகளும்ஏற்படுகின்றன. கோபப்படுதல், பதற்றம், சகிப்புத்தன்மை குறையும், மன விரக்தி ஏற்படும்,பண விரயம், கிரகிப்புத்தன்மை குறையும், ஞாபக இழப்பு, இறந்து விடப் போகிறோமோ என்ற பயம், அதிகாரத் தன்மை காணப்படும்.

### நடத்தைப் பிரச்சினை

பிறருடன் காரணமின்றி மோதல், சண்டை பிடித்தல்,சுறுசுறுப்பானநடத்தைக் குறைவு,பிறரை துன்பப்படுத்துதல் என்பனவும் புகைத்தலின் விளைவால் ஏற்படும் பாதிப்புக்களே.

நீங்கள் புகைப்பிடிக்கும் பழக்கம் உள்ள ஒருவராயின் நான் புகைத்தலுக்கு அடிமையாகி விட்டேனே என்றோ, என்னால் இந்தத் தீய பழக்கத்தை கைவிட முடியுமா? அல்லது முடியவில்லையே என்றோ வீணாக மனதைப் போட்டுக் குழப்பிக் கொள்ளாதீர்கள். மாற்றம் குறித்த சிந்தனைகளும் அந்தச் சிந்தனையின் வழியாக உலகில் மாற்றத்தையும் கொண்டு வரக்கூடிய ஆற்றல் மனிதர்களிடம் மாத்திரமே இருக்கின்றது. எனவே நீங்கள் நினைத்தால் இந்தப் பழக்கத்தைக் கைவிட முடியும். ஒவ்வொரு முறையும் சிகரெட்டுக்கு வைக்கும் நெருப்பு உங்கள் வாழ்க்கைக்கும் சேர்த்தே வைத்துக் கொள்ளப்படுகிறது என்பதை ஒருநாளும் மறக்காதீர்கள். மன திடகாத்திரத்துடன் ஒரு முடிவுக்கு வாருங்கள். இன்றே, இப்பொழுதே இந்த நொடியிலேயே என்னால் புகைக்காமல் இருக்க முடியும் என உறுதி கொள்ளுங்கள் . உங்களால் நிச்சயமாக முடியும். நாளைய சமுதாயம் இளைஞர் கையில் உள்ளது. இதனை மறவாதீர்கள்.

*'புகைத்தலும் அதனை விற்றலும் பனியன்றோ'*

# மோடி - ஜெயலலிதா ஜூன் 3 இல் சந்திப்பு

### தமிழக மீனவர் பிரச்சினை குறித்தும் பேச்சு

சென்னை, மே 31

பிரதமர் நரேந்திர மோடியை தமிழக முதல்வர் ஜெயலலிதா வரும் ஜூன் 3ஆம் திகதி நேரில் சந்திக்கிறார். தமிழக மீனவர் பிரச்சினை குறித்து இதில் விரிவாகப் பேசப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக தமிழக அரசு நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழக முதல்வர் ஜெயலலிதா ஜூன் 3 ஆம் திகதி புதுடில்லிக்குப் பயணம் மேற்கொள்கிறார். பிரதமர் நரேந்திர மோடியை அவர் சந்தித்துப் பேசுவார்.



ஜெயலலிதா நரேந்திர மோடி

பிரதமர் அலுவலகத்தில் நடக்கும் இந்தச் சந்திப்பின்போது, தமிழக அரசின் சார்பில் மனு ஒன்றைப் பிரதமரிடம் அவர் அளிப்பார். அதில், மத்திய அரசிடம் நிலுவையில் உள்ள தமிழகத்தின் மிக முக்கிய விவகாரங்கள் அடங்கியிருக்கும்.

தமிழகத்தின் வளர்ச்சிப் பாதையைத் துரிதமாக்குவதற்கு வித்திடக் கூடியதும், மாநில நலனைக் காக்கக் கூடியதுமான மத்திய அரசு அதிவேகமாக கவனம் செலுத்தக்கூடிய விவகாரங்கள் முன்வைக்கப்படும் என்று அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பின்போது, நதிநீர்ப் பிரச்சினை, தமிழக மீனவர் பிரச்சினை உள்ளிட்ட விவகாரங்கள் குறித்து பிரதமருடன் முதல்வர் ஜெயலலிதா பேசுவார் எனத் தெரிகிறது.

முன்னதாக இலங்கை ஜனாதிபதி மஹிந்தவைப் பதவியேற்பு வைபவத்துக்கு அழைத்தமைக்காக மோடியின் பதவியேற்பு வைபவத்தில் கலந்து கொள்ளாமல் ஜெயலலிதா புறக்கணித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (த)



நரேந்திரமோடி ஜசோதா பென்

## மோடியின் மனைவிக்கு 24 மணி நேர பாதுகாப்பு

புதுடில்லி, மே 31

பிரதமர் மோடியின் மனைவி ஜசோதா பென்னுக்கு 24 மணி நேரமும் பாதுகாப்பளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

நடைபெற்ற மக்களவைத் தேர்தலின் போது நரேந்திர மோடி தாக்கல் செய்த பிரமாணப் பத்திரத்தில் தனது மனைவி பெயர் ஜசோதா பென் என முதன் முறையாகத் தெரிவித்திருந்தார்.

இதனையடுத்து, தேர்தலில் வெற்றி பெற்றபின், மோடியின் மனைவிக்கு 7 நாள்களும் 24 மணி நேரமும் பலத்த பாதுகாப்பு வழங்க முடிவு செய்யப்பட்டது.

எனவே, அவருக்கு சாதாரண உடையில் துப்பாக்கி ஏந்திய நான்கு பொலிஸார் பாதுகாப்பு அளிப்பார்கள் என்றும், அவரது வீட்டைச் சுற்றி எந்நேரமும் வாகனம் மூலம் கண்காணிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் துணை கண்காணிப்பாளரான திரிவேதி தெரிவித்துள்ளார்.

மேலும், அவருடன் எப்போதும் ஒரு காவலர் உடன் இருப்பார் என்றும் கூறப்பட்டுள்ளது. (த)

## அதிகாரிகளை வியப்பில் ஆழ்த்திய நரேந்திர மோடி

புதுடில்லி, மே 31

பிரதமர் நரேந்திர மோடி டில்லியில் தனக்கு ஒதுக்கப்பட்ட பிரதமருக்கான அதிகாரப்பூர்வ இல்லத்தில் நேற்றுத் தனியாகக் குடியேறியுள்ளார்.

டில்லியில் சுமார் 12 ஏக்கர் பரப்பளவில் 5 பங்களாக்களைக் கொண்ட பிரதமருக்கான அதிகாரப்பூர்வ இல்லத்தில் நரேந்திர மோடி தனி நபராக குடியேறும் முதல் பிரதமர் ஆகிறார்.

இந்நிலையில், இதுவரை இங்கு குடியேறிய 14 பிரதமர்களும் தங்கள் குடும்ப உறுப்பினர்களுடன் தான் குடியேறினர் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், வீட்டுக்கு வெள்ளையடிக்கும் பணியைத் தவிர வேறு எந்த மாற்றத்தையும் செய்ய அறிவுறுத்தாமல், பிரதமர் இல்லத்தில் மோடி குடியேறியிருப்பது அதிகாரிகளை ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது. (த)

# 2 பதின்ம வயதுச் சிறுமிகள் வன்புணர்வின் பின் கொலை

### பொலிஸ் அதிகாரி உட்பட 3 பேர் கைது

புதுடில்லி, மே 31

இந்தியாவின் உத்தரப்பிரதேச மாநிலத்தில் இரண்டு பதின்ம வயதுச் சிறுமிகள் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு பின்னர் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில், ஒரு பொலிஸ் அதிகாரி உட்பட 3 நபர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மேலும் இரண்டு சந்தேக நபர்களைத் தேடி வருவதாகவும் அதில் ஒரு நபர் ஒரு பொலிஸ் அதிகாரி என்றும் உத்தரப் பிரதேச மாநில பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த இந்த இரண்டு சிறுமிகளும் கடந்த புதன்கிழமையன்று காலை ஒரு மாமரத்தில் தொங்கவிடப்பட்ட நிலையில் சடலங்களாக மீட்கப்பட்டனர்.

கண்டெடுக்கப்பட்ட இரு சடலங்களும் 14, 15 வயதுடைய இரு தலித் சமூகத்தைச் சேர்ந்த சிறுமிகளுடையவை எனப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.




அமைதிப் போராட்டத்தில் ஈடுபட்டோர்

செவ்வாய்க்கிழமையன்று மாலை அந்தச் சிறுமிகள் காணாமற் போனமை தொடர்பில் வழக்குப் பதிவு செய்ய மறுத்த 3 பொலிஸார் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

இந்தக் கொலை தொடர்பில் விசாரணை செய்ய பொலிஸார் முதலில் மறுத்துவிட்டதாக தெரிவித்த அந்தக் கிராமத்தினர், தொங்கவிடப்பட்ட சடலங்களுக்கு அருகே அவர்கள் அமைதிப் போராட்டம் நடத்திய பிறகே பொலிஸார் அந்த சம்பவத்தைவிசாரிக்கஒப்புக்கொண்டதாகவும் தெரிவித்துள்ளனர்.

இந்தியாவில் பாலியல் வன்முறைக்கு எதிரான சட்டங்களை இந்திய அரசு கடுமையாக்கினாலும், ஒரு சில பாலியல் வன்புணர்வு வழக்குகளில் மட்டுமே தண்டனைகள் வழங்கப்பட்டுள்ளதாகச் செய்தியாளர்கள் கூறுகின்றனர். (த)

## ராகுலை விமர்சித்தவர் கட்சியிலிருந்து நீக்கம்

**தேர்தல் பிரசாரத்தின்போது ராகுல், "ஜோக்கர் போல் நடந்து கொண்டார்" என்று முஸ்தபா சாடினார்.**

புதுடில்லி, மே 31

காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் ராகுல் காந்தியை ஜோக்கர் என்று விமர்சித்த கேரள முன்னாள் அமைச்சர் டி.எச்.முஸ்தபா அந்தக் கட்சியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

கொச்சியில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின்போது முன்னாள் அமைச்சர் டி.எச்.முஸ்தபா, ராகுல் காந்தியைக் கடுமையாக விமர்சித்திருந்தார்.

தேர்தல் பரப்புரையின் போது ராகுல் காந்தி தன்னைச் சுற்றியிருந்த ஒரு குழுவையே சார்ந்திருந்தார்.

கட்சியின் தோல்விக்காக அவர் பதவி விலக வேண்டும். அவர் பதவியில் தொடரக் கூடாது. தேர்தல் பரப்புரையின் போது ராகுல், ஜோக்கர் போல் நடந்து கொண்டார்" என்று முஸ்தபா சாடினார்.

இந்தக் கருத்துக்கு காங்கிரஸ் தலைவர்கள் சிலர் கண்டனம் தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில், மக்களவைத் தேர்தலில் காங்கிரஸின் செயற்பாடு குறித்து ஆராய கேரள மாநில காங்கிரஸ் குழுக் கூட்டம் திருவணந்தபுரத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில், ராகுலுக்கு எதிராகக் கடுமையான கருத்துக்களைக் கூறியதன் மூலம் முஸ்தபா பெரும் தவறிழைத்ததாகப் பல்வேறு தலைவர்களும் புகார் தெரிவித்தனர்.

இதையடுத்து, கட்சியின் அடிப்படை உறுப்பினர் உட்பட அனைத்துப் பொறுப்புகளில் இருந்தும் முஸ்தபா நீக்கப்பட்டதாக மாநிலத் தலைவர் வி.எம்.சுதீரன் தெரிவித்தார். (த)

## வாக்குறுதியை நிறைவேற்ற தவறிவிட்டார் புதிய பிரதமர்

### தமிழக மீனவர் அமைப்புகள் அதிருப்தி

சென்னை, மே 31

மீனவர்களுக்குத் தனி அமைச்சு அமைக்கப்படும் என்ற தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்ற பா.ஜ.க. அரசு தவறிவிட்டதாக மீனவர் அமைப்புகள் குற்றஞ்சாட்டியுள்ளன.

இராமேஸ்வரத்தில் 11 மீனவர் பிரதிநிதிகள் கலந்து கொண்ட ஆலோசனைக் கூட்டம் கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

இதில், பல ஆண்டுகளாக சிறையிலிருந்த, இராமேஸ்வரம் பகுதி மீனவர்கள் உட்பட தமிழக மீனவர்கள் 14 பேரை, இலங்கை நீதிமன்றம் விடுதலை செய்து உத்தரவு பிறப்பித்ததற்கு உதவி செய்த பா.ஜ.க. அரசுக்கு நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேலும், மீனவர் நலனில் பா.ஜ.க. அரசு நல்ல முடிவை மேற்கொள்ளும் என்றும் தமிழக மீனவர்களைக் காக்க வழி வகை செய்யும் என்றும் பெரிதாக எதிர்ப்பார்த்தோம். ஆனால் பா.ஜ.க. அரசு, மீனவர்களுக்கு தனி அமைச்சு அமைக்கப்படும் என்ற தனது தேர்தல் வாக் குறுதியை நிறைவேற்றாமல் தற்போது எங்களை ஏமாற்றிவிட்டது. தற்போது தனி அமைச்சுக்கான எந்த நடவடிக்கையையும் இந்த அரசு எடுக்காதது மிகுந்த வருத்தமளிப்பதாக உள்ளது எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சகல உறுப்புக்களையும் தானம் செய்தார் திரிஷா

சென்னை, மே 31

நடிகை திரிஷா தனது உடல் உறுப்புகள் அனைத்தையும் தானம் செய்து ஆச்சரியத்தில் ஆழ்த்தி இருக்கிறார்.




தமிழ், தெலுங்கு, இந்தி உள்ளிட்ட மொழிகளில் நடித்து வரும் திரிஷா, தற்போது புனித் ராஜ்குமார் ஜோடியாக கன்னடத்திலும் ஒரு படத்தில் நடித்து வருகிறார்.

திரிஷா பீற்றா அமைப்பின் விளம்பர தூதராக இருப்பது, பிறந்த நாளில் உதவுவது, மரக்கன்றுகள் நடுவது என பல்வேறு சமூக சேவையில் ஈடுபட்டு வருகிறார்.

அது மட்டுமன்றி நாய்களுக்கு அடிபட்டுவிட்டால் உடனே டுவிட்டர் தளத்தில் செய்தி வெளியிட்டு உதவுவது என மிருகங்களுக்கு தனது டுவிட்டர் தளம் மூலம் பல்வேறு நலத்திட்டங்கள் செய்து வருகிறார்.

தற்போது, தனது உடல் உறுப்புகள் அனைத்தையும் தானம் செய்திருக்கிறார் திரிஷா. இதயம், சிறுநீரகம், நுரையீரல், கணையம், கண்கள் உள்ளிட்ட அனைத்து உறுப்புகளையும் தானம் செய்திருக்கிறார்.

அதுமட்டுமன்றி அனைவரும் உடல் உறுப்பு தானம் செய்ய வேண்டும் என்று தனது டுவிட்டர் தளத்தில் கூறியிருக்கிறார். (த)

# உலக நாடுகளின் விவகாரங்களில் அமெரிக்கப் பங்கெடுப்பு தொடரும்

## துணை அதிபர் ஜோ பிடன் அறிவிப்பு

வொஷிங்டன், மே 31

மாற்றத்தை உருவாக்கும் பொருட்டு பிற நாடுகளின் விவகாரங்களில் அமெரிக்காவின் பங்கெடுப்பு தொடர்ந்து இருக்கும் என்று அமெரிக்கத் துணை அதிபர் ஜோ பிடன் கூறினார்.

அமெரிக்காவின் கொலராடோவில் உள்ள விமானப்படை அக்கடமியில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு பிடன் பேசியதாவது: -

ஆப்கானிஸ்தான் மற்றும் ஈராக் ஆகிய நாடுகளின் மீதான போர் முடிவுக்கு வந்துள்ளதையடுத்து, தீவிரவாதத்தைக் கட்டுப்படுத்துவதற்காகப் பிற நாடுகளின் விவகாரங்களில் தலையிட வேண்டிய அவசியம் எழலாம்.



துணை அதிபர் ஜோ பிடன்

21ஆம் நூற்றாண்டை சிறப்பானதாக உருவாக்குவதற்கு அமெரிக்க தனது போர்த் திறன் வியூகத்தைச் சீரமைப்பதும், இந்தப் பிராந்தியங்களில் பொருளாதாரம் மற்றும் ராஜீய ரீதியான உறவுகளை மேம்படுத்துவதும் அவசியம்.

பசுபிக் பிராந்தியங்களில் அமெரிக்காவின் அதிகாரம் தொடர்ந்து இருக்கும். இந்த அதிகாரத்தின் மூலமாகவே, இந்தப் பிராந்தியத்தின் அமைதி மற்றும் வளத்திற்கு கடந்த 70 ஆண்டுகளாக இன்றியமையாத பணியை ஆற்றி வருகிறது.

21ஆம் நூற்றாண்டுக்கு ஏற்ப நேட்டோ படைகள் தங்களை தகுதியுடைவர்களாக மாற்றிக் கொள்வது அவசியம். அதற்காக, பசுபிக் கூட்டணி நாடுகளான ஜப்பான், தென்கொரியா மற்றும் பிற நாடுகளுடனான உறவுகளைப் புதுப்பிக்க வேண்டியுள்ளது.

தற்போது போர்கள் முடிவுக்கு வந்த நிலையில், தீவிரவாதச் சவால்களை எதிர்கொள்வதற்காக எங்களது பாதுகாப்புப் படை வீரர்கள் மற்றும் உளவுத் துறையினரை வட ஆபிரிக்கா முதல் தென்கிழக்கு ஆசிய நாடுகள் வரை உலகின் பிற பகுதிகளுக்கு மீண்டும் அனுப்புவதற்கான தகுதி அமெரிக்காவுக்கு உள்ளது.

சர்வதேச விதிகளின்படி அணு ஆயுத ஒழிப்பை ஊக்கப்படுத்தி வருகிறோம்.

கடல் மற்றும் வான் வழி சுதந்திரம், இறையாண்மை மற்றும் பிராந்திய ஒற்றுமை உள்ளிட்டவற்றை நிலை நாட்டவும் அமெரிக்கா பாடுபட்டு வருகிறது.

பருவநிலை மாற்றத்தைக் கருத்தில் கொண்டு உலகளாவிய திட்டத்தை வகுப்பதில் முன்னேற்றம் கண்டு வருகிறோம்-என்றார். (த)

## பாக். இந்துக் கோயில்களை சேதப்படுத்திய ஐவர் கைது

இஸ்லாமாபாத், மே 31

பாகிஸ்தானின் சிந்து மாகாணத்தில் 3 இந்துக் கோயில்கள் தாக்கப்பட்டதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

மிர்பர்காஸ் அடுத்த கோட் குலாம் முகமது பகுதியில் உள்ள இந்துக் கோயில்களுக்குள் நேற்றுமுன்தினம் புகுந்த மர்ம நபர்கள், சிலைகளை அடித்து நொருக்கிச் சேதப்படுத்தினர்.

இதனால் ஆத்திரமடைந்த இந்துக்கள், குற்றவாளிகளைக் கைது செய்ய வலியுறுத்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இது பற்றி தகவல் அறிந்த பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணை நடத்தினர். மேலும், மோப்ப நாய் உதவியுடன் அருகில் உள்ள கிராமத்தில் வசிக்கும் 5 பேரைக் கைது செய்தனர்.

அவர்கள் அனைவரும் கோலி சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (த)

## மேயர்கள் இணைந்து போஸ் கொடுத்த புகைப்படத்தால் வந்த பரபரப்பு



சர்ச்சையில் சிக்கிய மேயர்கள்

மொன்றியல், மே 31

கனடாவை சேர்ந்த இரண்டு நகரத்தலைவர்களின் புகைப்படம் டுவிட்டர் தளத்தில் அம்பலமானது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கனடாவின் மிசிசுங்க மாகாணத்தில் நகரத்தலைவராய் பதவி வகிக்கும் ஹெசர் மெக்கிலான் என்ற 93 வயது பெண் மேயர், கடந்த 2012ஆம் ஆண்டு நடந்த மேயர் தேர்தலில் தொடர்ச்சியாக 12ஆவது முறையாக அப்பகுதி மக்களால் அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

உலகிலேயே இரண்டாவது பிரபலமான நகரத் தலைவர் என்றும் கனேடிய வரலாற்றில் மக்களால் தொடர்ந்து தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியல் தலைவர் எனவும் பெருமையைபெற்ற இவர் தற்போது சர்ச்சையில் சிக்கியுள்ளார்.

இவர் கால்காரி மாகாணத்தின் நகரத் தலைவரான நஹீட் நீஷூடன் இணைந்து எடுத்துக் கொண்ட புகைப்படம் டுவிட்டர் தளத்தில் வெளியாகியுள்ளது.

இதனால் மக்களிடையே இவரது செல்வாக்கும் புகழும் குறைந்துள்ளது மட்டுமல்லாமல் சமூகத்தில் நஹீட் நீஷூருக்கு இருந்த நற்பெயரையும் இந்தப் புகைப்படம் கெடுத்துள்ளதாகக் கூறப்படுகிறது. (த)

## ஆஸியில் 50 லட்சம் மக்கள் தொழில் இழக்கும் அபாயம்

கான்பரா, மே 31

எதிர்காலத்தில் ரோபோக்களின் ஆக்கிரமிப்பு காரணமாக ஆஸ்திரேலியர்களும் தொழில்வாய்ப்புக்களை இழக்க நேரிடக்கூடுமென இயந்திரக் கற்கைகள் தொடர்பான நிபுணரொருவர் எச்சரித்துள்ளார்.

இயந்திரமயமாக்கல் தொழில்நுட்பத்தை அளவுக்கு அதிகமான வேகத்துடன் நடைமுறைப்படுத்தும் பட்சத்தில் ஆஸ்திரேலியாவில் 50 லட்சத்துக்கு மேலானவர்கள் வேலை வாய்ப்புக்களை இழக்கக்கூடுமென ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக பேராசிரியர் மைக்கல் ஒஸ்போர்ண் தெரிவித்தார்.

அடுத்து வரும் இரண்டு தசாப்தங்களில் மனிதர்களின் தொழில்களுக்காக இயந்திரங்களைப் பயன்படுத்துவதன் மூலம் ஆஸ்திரேலியா போன்ற கைத்தொழில்மய நாடுகளில் பாதிக்கு மேலான தொழில்கள் இல்லாமற் போகக்கூடிய அபாயம் உள்ளதென பேராசிரியர் ஒஸ்போர்ண் குறிப்பிட்டார். ஏபிசி செய்தி ஸ்தாபனத்தின் 7.302 நிகழ்ச்சியில் அவர் கருத்து வெளியிட்டார்.

ரோபோக்களின் வருகையால் எதிர்காலம் கேள்விக்குறியாக மாறியிருக்கும் பலரது கதைகள் பற்றி நிகழ்ச்சியில் கூறப்பட்டது.

சிட்னியின் பொட்டனி துறைமுகத்தில் வேலை செய்யும் பென் பார்த்தோலோவை முதலாவது பலிக்கடா என்று கூற முடியும்.

இவர் தமது தொழிலை இழக்கும் தறுவாயில் இருக்கிறார். எனது எஜமானர்கள் இறங்குதுறையை இயந்திரமயமாக்கப் போகிறார்கள். அங்கு எனது பதவி தேவைப்படமாட்டாது என்றார் 34 வயதுடைய பொத்தோலோ. பொட்டனி இறங்குதுறையில் கொள்கலன்களை ஏற்றியிறக்கும் கருவியை இயக்குவது இவரது வேலை.

பொத்தோலோவின் எஜமானர் 16 வருடங்களுக்கு முன்னர் தமது தொழில் ஆளணியைக் குறைத்து வரலாற்று ரீதியான சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தார்.

அவர் இன்று பொட்டனி துறைமுகத்தில் சாரதிகள் இல்லாமற் கொள்கலன்களைக் கையாளும் விதத்தில் ரோபோ இயந்திரங்களைப் பொருத்தப் போகிறார். (த)

## எகிப்து அதிபர் தேர்தலில் அப்துல் பட்டா முன்னிலை



அப்துல் பட்டா

கெய்ரோ, மே 31

எகிப்தில் நடைபெற்ற அதிபருக்கான தேர்தலில் முன்னாள் இராணுவத் தலைமை தளபதி அப்துல் பட்டா அல்-சிசி 96.2 சதவீத வாக்குகளைப் பெற்று முன்னிலையில் உள்ளார்.

முன்னாள் அதிபரான முகம்து மோர்ஸியை பதவி நீக்கி, அவரது இஸ்லாம் சகோதரத்துவக் கட்சியையும் ஒடுக்கிவிட்டு, கடந்த ஆண்டு ஆட்சிக்கு வந்தவர் அப்துல் பட்டா அல்-சிசி.

இந்நிலையில், கடந்த திங்கட்கிழமை முதல் மூன்று நாள்கள் அந்த நாட்டில் அதிபருக்கான தேர்தல் நடைபெற்றது.

தேர்தலில் மொத்தம் பதிவான 2 கோடியே 10 லட்சம் வாக்குகளில் 96.2 சதவீத வாக்குகளை அப்துல் பட்டா பெற்று முன்னிலையில் உள்ளார்.

அவரை எதிர்த்துப் போட்டியிட்ட ஒரே வேட்பாளரான ஹம்தீன் சப்பாய் 3.8 சதவீத வாக்குகளைப் பெற்றுள்ளார்.

இதுவரை 352 வாக்குப் பெட்டிகளில் 312 பெட்டிகளில் இருந்த வாக்குகள் மட்டும் எண்ணப்பட்ட நிலையில், தொடர்ந்து வாக்குகள் எண்ணப்பட்டு வருகின்றன.

தற்போது நடந்து முடிந்த தேர்தலில் மொத்தம் 44.4 சதவீத வாக்குகள் பதிவாகி இருந்தன. இது 2012 இல் 57 சதவீதமாக இருந்தது. அப்போது, எகிப்தில் முதன் முறையாக அதிபருக்கான தேர்தல் ஜனநாயக முறையில் நடைபெற்றது. அந்த தேர்தலில் மோர்ஸி வெற்றி பெற்றிருந்தார். (த)

## தென்கொரியா விபத்தில் லெபனான் தூதுவர் சாவு

சியோல், மே 31

தென்கொரியத் தலைநகர் சியோலில் கடந்த வியாழக்கிழமை நிகழ்ந்த விபத்தில், அந்த நாட்டுக்கான லெபனான் தூதுவர் உயிரிழந்தார்.

லெபனான் தூதரான ஜாத் சயீத் எல்-ஹச்ன் தனது காரை ஒரு குகைப் பாதைக்குள் ஓட்டிச் செல்லும்போது, மற்றொரு காருடன் மோதி ஏற்பட்ட விபத்தில் அவர் உயிரிழந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஹசனின் காருடன் மோதிய மற்றொரு காரில் தென்கொரியர்கள் 2 பேர் இருந்துள்ளனர். விபத்தில் காயமடைந்த அவர்களும் சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

ஹசன் உயிரிழ்ந்த தகவலை லெபனான் தூதரகத்தைச் சேர்ந்த ஒரு நபர் உறுதிப்படுத்தியுள்ளார். (த)

## இயேசுநாதர் பேசிய மொழி...?



பாப்பரசரும் இஸ்ரேல் பிரதமரும்

மத்திய கிழக்குக்குப் பிரயாணம் மேற்கொண்டிருந்த பாப்பரசர் பிரான்சிஸ் மேற்குக்கரைப் பகுதியில் முன் ஏற்பாடில்லாமல் ஆங்காங்கே பிரார்த்தனை வழிபாடுகளை நடத்தியிருந்தமை சிறிது சர்ச்சைகளை ஏற்படுத்தவே செய்தது.

இருந்தாலும் பாப்பரசர் பிரான்சிஸ் மற்றும் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெத்தன்யாகுவுக்கும் இடையில் ஏற்பட்ட ஒரு வாக்குவாதம் நகைச்சுவையான முரண்பாடாகவும் வெளிப்பட்டது. அது இயேசுநாதர் உயிருடன் நடமாடிய காலத்தில் அவர் பேசியிருக்கக்கூடிய மொழி பற்றியதாகும். ஜெருசலேமில் இடம்பெற்ற ஒரு கூட்டத்தில் நெத்தன்யாகு பாப்பரசரிடம் கூறினார்.

"இயேசுநாதர் இங்கு இருந்தார் - இந்த மண்ணில் அவர் ஹீப்ரு மொழியில் பேசினார்" என்று யூத மதத்துக்கும் கிறிஸ்தவ மதத்துக்கும் இடையில் உள்ள நெருக்கத்தை எடுத்துக் காட்டுவது அவரது நோக்கமாக இருந்தது. அதற்குப் பாப்பரசர் பிரான்சிஸ் சிரித்துக்கொண்டே, அவர் அராமிக் மொழியில் பேசினார். இருந்தாலும் அவருக்கு ஹீப்ரு மொழியும் தெரிந்திருந்தது" என்று திருத்தினார்.

இயேசுநாதரின் வாழ்வில் நடந்ததாகக் கூறப்படும் சம்பவங்கள் உறுதி செய்யப்பட முடியாதவை என்றாலும் அவர் உலகில் வாழ்ந்துள்ளார் என்பதை வரலாற்று ஆசிரியர்களில் பெரும்பாலானவர்களும் ஏற்றுக்கொள்கின்றார்கள்.

ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்தின் முன்னாள் பேராசிரியரான டாக்டர் செபஸ்தி பியன் டிரொக் என்பவர் கூறுகையில்; "இரண்டு பேருமே சரியானதைத்தான் கூறியிருக்கிறார்கள்" என்றார்.

அறிஞர்களதும் வேத நூலாளர்களதும் மொழியாக ஹீப்ரு இருந்துள்ளது. அதே சமயம் இயேசுபிரான் அராமிக் மொழியையும் அன்றாட உரையாடல்களுக்குப் பயன்படுத்தியிருக்க முடியும் என்றும் அவர் கூறினார். (ப)

(லண்டன் டெய்லி மெயில்)

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்**: முதலீடு இல்லாத புதிய தொழில் தொடங்குவதற்கு உங்களுக்கு நண்பர்கள் உதவி செய்வார்கள். உங்களது அலுவலக கணக்கு வழக்குகளை மிகச்சரியாகக் கையாளுதல் நல்லது. மாணவர்களுக்குக் கல்வியில் அவதானம் தேவை.

**இடபம்**: உங்களது சேமிப்புகளில் கை வைக்க வேண்டி வரலாம். கவனம் தேவை. எனவே அதை முடிந்தவரை தவிர்க்கவும். விவசாயிகள் சிறப்புடன் இருப்பார்கள். கணவன் மனைவிக்கு இடையே இருந்து வந்த கருத்து வேறுபாடுகள் மறையும்.

**மிதுனம்**: வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு கூடுதல் சுமைகள் வந்து சேரும். வேலையில் எரிச்சல் மற்றும் சோம்பேறித்தனத்தை முற்றிலும் கைவிடுவது நல்லது. உங்களது உடல்நலனில் அக்கறை செலுத்துவது நல்லது.

**கடகம்**: சிலருக்கு குழந்தைகளால் அவமானம் ஏற்படலாம். மேற்படிப்பு சம்பந்தமாக வெளியூர் சென்று தங்கிப் பயிலும் வாய்ப்புக் கிட்டும். பெரியவர்களின் ஆசீர்வாதம் பரிபூரணமாகக் கிடைக்கும். அவர்களது ஆசீர்வாதங்களை உதாசீனப்படுத்த வேண்டாம்.

**சிங்கம்**: வெற்றி உங்களை வந்தடையும். உங்களது முன்னேற்றத்துக்கு நண்பர்கள் உதவியாக இருப்பார்கள். வெளியூர்ப் பயணங்கள் வந்து சேரும். ஒரே நேரத்தில் பலவிதமான வாய்ப்புகள் வந்து சேரும் போது தகுந்த ஆலோசனைகளை மேற்கொண்டு முடிவுகளை எடுப்பது நல்லது.

**கன்னி**: பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு செல்வாக்கில் சிறிது சரிவு ஏற்படலாம். அதேவேளையில் பதவியும், பொறுப்பும் வந்து சேரும். வீண் அலைச்சலும், வாக்குவாதமும் அவ்வப்போது வாட்டி வதைக்கும்.

**துலாம்**: உடன்பிறந்தவர்கள் வகையில் நிலவி வந்த சண்டை சச்சரவுகள் நீங்கும். பணப் பற்றாக்குறை படிப்படியாகக் குறையும். வீண் செலவுகளைத் தவிர்ப்பது நல்லது. சுபநிகழ்ச்சிகள் நடப்பதற்கான ஏற்பாடுகள் நடந்தேறும்.

**விருச்சிகம்**: பழைய வீட்டைப் புதுப்பிப்பதற்குச் சிறந்த நாளாகும், பொழுதுபோக்கான விழாக்களில் கலந்து கொள்வீர்கள். உங்களை விட்டுப் பிரிந்த நண்பர்கள் ஒன்று சேர்வார்கள்.

**தனுசு**: வெளிநாடு சென்று பயில வேண்டும் என்று நினைத்தவர்களுக்கு அதற்குண்டான காலம் கனிந்து வரும். கலைத்துறையைச் சார்ந்தவர்களுக்கு சிறப்பான முன்னேற்றம் உண்டு. வேலை நிமித்தமாக அடிக்கடி வெளியூருக்கும் வெளிநாட்டுக்கும் செல்ல வேண்டி வரும்.

**மகரம்**: உங்களது உடைமைகளைக் கவனமாகப் பார்த்துக் கொள்ளவும். பணம் மற்றும் புதிய நண்பர்கள் சேர்க்கை கிடைக்கும். செய்கின்ற தொழிலில் கவனம் வேண்டும். புதிய தொழில் தொடங்கலாம்.

**கும்பம்**: கூட்டுத்தொழிலில் இலாபம் கிடைக்கும். நம்பிக்கை மிக்கவர்களாகப் பழகுவார்கள். வரவுக்குத் தகுந்த செலவை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். வேலையாள்கள் சில பிரச்சினைகளை ஏற்படுத்தலாம்.

**மீனம்**: உறவினர்களாலும் தொல்லைகள் வரலாம். வழக்கறிஞர்கள், ஆசிரியர்கள், மருத்துவர்கள் போன்ற சேவைத்துறையில் இருப்பவர்கள் சீரான நிலையில் இருப்பார்கள். வேலை பார்த்துக் கொண்டே உபதொழில் செய்பவர்களுக்கு இலாபம் கிடைக்கும்.

## நாளை

**வைகாசி-18 ஞாயிற்றுக்கிழமை | 01.06.2014**

திதி: சதுர்த்தி பி.இ.05.31 வரை
நட்சத்திரம்: புநர்பூசம் பி.இ.01.40 வரை
சுபநேரம்: 08.52-10.22 வரை
இராகுகாலம்: 04.22-05.52 வரை

சதுர்த்தி விரதம்

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



### இலட்சியம்

தன்னை விட உயர்ந்த ஏதோ ஒன்று, தன்னைச் சூழ்ந்திருப்பதாக மனிதன் உணர்கிறான்; அதனுடைய பொருளை அறிய அவன் பல வகையில் முயற்சிக்கிறான். மனிதன் எப்போதுமே உயர்ந்த இலட்சியத்தையே நாடுவான். தொடக்கத்தில் இந்தத் தேட்டம் எல்லாம் மனிதனுக்கு வெளியிலே நிகழ்ந்தது. 'சுவர்க்கம்' வேறு பல உயர்ந்த உலகங்கள் இங்கெல்லாம் அவன் தேடினான். அவரவர்கள் உணர்ந்ததைப் பொறுத்து இந்தத் தேடுதல் இருந்தது. நாளடைவில் மனிதன் தன்னைப் பற்றி நன்கு ஆழ்ந்து ஆராயத் தொடங்கினான்; இந்த ஆராய்ச்சியின் பயனாக, 'உண்மை நான்' என்பது இயல்பாக நினைக்கும் 'நான்' அல்ல, புலன்களுக்குத் தென்படும் நான், உண்மை நான் அல்ல என்பதை அறிந்து கொண்டான். மனிதன் தனக்குள்ளேயே தேடத் தொடங்கினான்; இதன் பயனாக, தான் வெளியே தேடிய இலட்சியம் தனக்கு உள்ளேயே இருப்பதைக் கண்டான். தனக்கு வெளியே அவன் இத்தனை நாளாக எதை வழிபட்டு வந்தானோ, அதுவே அவனது உண்மையான உள் தன்மை என்பதை அறிந்தான். அத்வைதம், துவைதம் இரண்டுக்கும் உள்ள வேற்றுமை இதுதான்; இலட்சியத்தைத் தனக்கு வெளியே காண்பது துவைதம்; இலட்சியமான இறைவனைத் தனக்குள்ளே காண்பது அத்வைதம். 'ஏன்? எதனால்?' என்னும் அதே பழைய வினா இப்போது எழுகிறது; மனிதன் எல்லைக்கு உட்பட்டது எப்படி? எல்லையில்லாதது ஒன்று எல்லைக்கு உட்பட்டது எதனால்? களங்கமற்ற தூய்மையான ஒன்று, தூய்மையை இழந்தது எதனால்? இந்த வினாவுக்குப் பதில் சொல்வது 'இரண்டு' என்ற கொள்கையின் அடிப்படையில் இயலாது என்பதை முதலில் தெரிந்துகொள்ள வேண்டும்.

## சர்வதேச விண்வெளி மையத்தில் ஆய்வ கைகோர்க்கும் விண்வெளி வீரர்கள்



ரஷ்யாவில் சர்வதேச விண்வெளி மையத்தை நோக்கி ஏவுகணையில் மூவர் பறந்து சென்றுள்ளனர்.

கடந்த 22ஆம் திகதி ரஷ்யாவில் உள்ள கசகஸ்தானிலிருந்து சோயஸ் பூஸ்டர் என்ற ஏவுகணை சர்வதேச விண்வெளி மையத்தை நோக்கித் தனது பயணத்தை ஆரம்பித்துள்ளது.

இதில் பயணம் செய்யும் நாஸாவைச் சேர்ந்த ரீட் வைஸ்மென், ரஷ்யாவைச் சேர்ந்த மேக்ஸ் சுராயேவ் மற்றும் ஜேர்மனியைச் சேர்ந்த அலெக்சாண்டர் க்ரெஸ்ட் ஆகிய மூவரும் சர்வதேச விண்வெளி மையத்துக்குச் சென்று ஆய்வு நடத்தவுள்ளனர். சர்வதேச விண்வெளியை அடையவிருக்கும் இந்த ஏவுகணையில் உள்ள விண்வெளி வீரர்கள் கடந்த மார்ச் மாதம் பயணித்து ஆய்வில் ஈடுபட்டிருக்கும் இரு ரஷ்ய விண்வெளி வீரர்கள் மற்றும் ஒரு அமெரிக்க விண்வெளி வீரருடன் இணைந்து செயற்படப்போவதாகக் கூறப்பட்டுள்ளது.

இந்த நிலையில் உக்ரைன் விவகாரத்தில் ரஷ்யாவுக்கும், அமெரிக்காவுக்கும் இடையேயான உறவில் விரிசல் ஏற்பட்டாலும் இரு நாட்டு விண்வெளி ஆராய்ச்சி நிறுவனங்களும் இணைந்து செயல்படுவது குறிப்பிடத்தக்கது.

## சுடோக்கு
### எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 1 | | 7 | | 9 | 2 | 8 | |
| 3 | 2 | | | | 5 | | | |
| | 9 | | 8 | 6 | | | | |
| | | 7 | 9 | 2 | | | 6 | |
| | | 5 | | 4 | | 9 | | |
| | 3 | | | 5 | 8 | 1 | | |
| | | | | 8 | 3 | | 1 | |
| | | | 1 | | | | 9 | 6 |
| | 4 | 1 | 2 | | 6 | | 3 | 5 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 7 | 1 | 8 | 6 | 2 | 4 | 9 | 5 |
| 9 | 4 | 8 | 1 | 3 | 5 | 7 | 2 | 6 |
| 2 | 5 | 6 | 4 | 9 | 7 | 3 | 1 | 8 |
| 4 | 3 | 2 | 9 | 8 | 6 | 1 | 5 | 7 |
| 6 | 1 | 7 | 5 | 2 | 4 | 9 | 8 | 3 |
| 8 | 9 | 5 | 3 | 7 | 1 | 6 | 4 | 2 |
| 7 | 8 | 4 | 6 | 5 | 9 | 2 | 3 | 1 |
| 1 | 2 | 3 | 7 | 4 | 8 | 5 | 6 | 9 |
| 5 | 6 | 9 | 2 | 1 | 3 | 8 | 7 | 4 |

**விற்பனைக்கு**

ஒரு வயது நிரம்பிய அல்சேசன் ஆண்/பெண் நாயும், பொமேரியன் ஆண்/பெண் நாயும், டாசோன் ஆண்/பெண் நாயும் 60 நாள் பூர்த்தியான பொமேரியன் ஆண், பெண் குட்டியும், மணிதாரா, வண்ரம் , வெள்ளடியன்.

தொடர்பு: லி. மயூரன் (48601) (7.6.3)

CEYLON THEATRES

**இப்பொழுது திரையில்**

**MAJESTIC CINEMA - CARGILLS SQUARE**

(Opposite Jaffna Teaching Hospital)




Platinum 3D 9.30am, 12.00noon, 2.30pm, 5.00pm, 7.30pm

Silver 2D 10.15am, 2.15pm, 6.15pm




(EL44077)

Bronze 10.30am, 2.30pm, 6.30pm

விசாரணை ☎ 021-2227712

www.facebook.com/CeylonTheatres www.ceylontheatres.com

# இலங்கையில் மத நல்லிணக்கம் மரபு ரீதியாக பேணப்பட்டு வருகிறது

## பிரிட்டிஷ் தூதுவர் மகிழ்ச்சி



பெண்ணிய அமைப்புகளின் பிரதிநிதிகளை பிரிட்டிஷ் தூதுவர் சந்தித்தவேளை...

கொழும்பு, மே 31

இலங்கையில் மத நல்லிணக்கம் மரபு ரீதியாகப் பேணப்பட்டு வருகின்றது. இது இன்றைய நிலையில் மிகவும் முக்கியமான ஒன்று என்ற எனது நம்பிக்கை. அண்மையில் இலங்கையில் பல இடங்களுக்கும் சென்று வந்த பின்னர் வலுப்பெற்றுள்ளது.

இவ்வாறு தெரிவித்துள்ளார் இலங்கைக்கான பிரிட்டிஷ் தூதுவர் ஜோன் ரங்கின். பிரிட்டிஷ் தூதுவர் அண்மையில் குருநாகல், மன்னார், புத்தளம் ஆகிய பகுதிகளுக்கு பயணம் மேற் கொண்டிருந்தார். வடமேல், வட மத்தி மற்றும் வட மாகாணங்களுக்கு பயணம் சென்றிருந்த பிரிட்டிஷ் தூதுவர் ரங்கின் புனித' மகாபோதி, றுவான்வெலிசாய தூபி, மடு தேவாலயம், திருக்கேதீஸ்வரம்கோயில் மற்றும் புத்தளம் பெரிய பள்ளிவாசல் ஆகிய புனித தலங்களை தரிசிப்பதைத் தமது பிரதான நோக்கமாகக் கொண்டிருந்ததாகத் தெரிவித்துள்ளார்.

இந்தப் பயணத்தின்போது தாம் சந்தித்த அனைவருமே மதத் தீவிரவாதத்துக்கு எதிரான கருத்துக்களை வெளியிட்டதாக அவர் கூறினார். நான் பல்வேறு சமூகங்களைச் சார்ந்தவர்கள், அரசு சாரா நிறுவன பிரமுகர்கள் உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்கள் மற்றும் பெண்ணிய அமைப்புகளின் பிரதிநிதிகளையும் சந்தித்தேன். தங்கள் பிரச்சினைகள் குறித்து அவர்கள் வெளிப்படையாகப் பேசினார்கள். பல்வேறு விதமான விடயங்களை அவர்கள் தெரிவித் திருந்த போதிலும், நிலம் மற்றும் பொதுச் சேவை களில் தமது மொழியில் தொடர்பு கொள்ள முடி யாமல் இருப்பது மற்றும் குடும்ப வன்செயல் பற்றிய விடயங்களே அதிகமாகப் பேசப்பட்டது என்று கூறிய பிரிட்டிஷ் தூதுவர், இந்த விடயங் களில் மாற்றங்களைக் கொண்டு வருவதற்கான திட்டங்களுக்கு பிரிட்டன் தொடர்ந்து பங்களிப்பு செய்து வரும். இதில் நல்லிணக்கம், பொலிஸ் பயிற்சி, மொழி உரிமைகளை நிலை நாட்டல், ஆங்கில மொழிப் பயிற்சி மற்றும் பெண்களின் உரிமைகளும் அடங்கும் என்று கூறினார். (ப)

**ஆங்கில வகுப்புக்கள்**

உங்கள் குழந்தை ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற விரும்புகின்றீர்களா? இன்றே அழையுங்கள். 4+ முதல் தரம் 8 வரை. அனுமதிக் கட்டணம் முற்றிலும் இலவசம்.

T.P. : 077 393 6964

கேணியடி, கொக்குவில். (48607) (7.6.3)

**பெயர் மாற்றம்**

மந்துவில் வடக்கு கொடிகாமத்தைச் சேர்ந்த லிசுதா கந்தசாமி ஆகிய நான் இன்றி லிருந்து எனது பெயரை சுதா கந்தசாமி எனப் பெயர்மாற்றம் செய்வதோடு, இனிவரும் சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்ப மிடுவேன் என சகலருக்கும் அறியத்தரு கின்றேன்.

சுதா கந்தசாமி (48600) (7.6.3)

**அதிரடி மலிவு விற்பனை**

30.05.2014 தொடக்கம் 10.06.2014 வரை. சுமங்கலி தளபாட வாணிபம். எம்மிடம் வீட்டுத் தேவைக்கான அலுமாரி, அலுவலக பாவனைக்கான அலுமாரி மற்றும் படுக்கை அறைக்கான கட்டில் (டபிள், சிங்கிள் மெத்தைகள்) T.V ஸ்ராண்ட் அனைத்தும் மலிவான விலையில் விற்பனைக்குள்ளன.

தொடர்புகளுக்கு: (48609) (7.6.3)

இல. 302, நல்லூர் ஆலயப் பின் வீதி

உரிமையாளர் : சின்னத்துரை வரதராஜா

T.P. : 075 540 9553

**இன்று நாளை - நாளை மறுநாள்**

கழுத்து வலி, தோள் வலி, முள்ளந்தண்டு வலி, இடுப்பு வலி, நரம்பு வலி, முழங்கால், குதி, பாத வலி. Allergy, Asthma, தீராச்சளி, வாதம். Arthritis, குழந்தைப் பேறு வேண்டும் தம்பதிகளின் அனைத்துவித நோய்களுக்கும் நம்பிக்கையான சிகிச்சை.

வலிகளுக்குத் துரித நிவாரணம்,

வெளிநாட்ட வரும் சந்திக்கலாம்.

சித்த வைத்தியர் :

Dr.R.Sivagurunathan.

நல்லூரில் சந்திக்கலாம்

சந்திப்பு இலக்கம் :

077 730 1669 (சி/14408) (7.6.3)

**31ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு**

செல்வி

**விக்னேஸ்வரன் துஸ்யந்தி (குஞ்சு)**

(உரிமையாளர் மயூரா மருந்தகம், திருநெல்வேலி Distributor-Stassen Export)



கடந்த 01.05.2014 வியாழக்கிழமை அதிகாலை சிவபத மடைந்த எமது அன்புச் செல்வம் செல்வி விக்னேஸ் வரன் துஸ்யந்தி அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியை கள் இன்று (31.05.2014) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற இருப்பதனால் அதில் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ் விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின் றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக தயவுசெய்து ஏற்றுக்கொண்டு வருகை தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**குடும்பத்தினர்.**

47/18, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.

(48604)(10.6.3)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் சிரேஷ்ட கணித ஆசிரியர்
தி.ஜெகதீஸ்வரன்
அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி இராசமணி தியாகராசா



அவர்கள் 29.05.2014 அன்று இறைவனடி சேர்ந்துள்ளார். அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(48598) (7.6.3)

ஆசிரியர் நலன்புரி கழகம் யா/இணுவில் மத்திய கல்லூரி

## முன்பள்ளி விளையாட்டு விழாக்கள்

யாழ்ப்பாணம், மே 31

திருநெல்வேலி சிறுவர் பூங்கா முன்பள்ளியும், குழந்தைகள் காப்பகமும் நடத்தும் விளையாட்டு விநோத வேடிக்கை நிகழ்வு இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் திருநெல்வேலி சிறுவர் பூங்கா முன்பள்ளியில் திருமதி க.தனபாலன் தலைமையில் நடைபெறும்.

முதன்மை விருந்தினராக கரைச்சிப் பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன் கலந்து கொள்வார். திருமதி மலர்விழி நாகேஸ்வரன் பரிசில்களை வழங்குவார். (க)

பொலிகண்டி மக்கள் படிப்பகத்தின் முன்பள்ளி விளையாட்டுப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு படிப்பகத் தலைவர் சி.குலவீரசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக பருத்தித்துறை பிரதேச செயலக கணக்காளர் செ.கிருபாகரன் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினராக கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் எஸ்.திலகநாதன், பருத்தித்துறை பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் செல்வி செல்வசுகுணா, சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி பரமேஸ்வரி யோகராசா ஆகியோர் கலந்து கொள்வர். (வ-173)

◆◆◆

வல்வெட்டித்துறை கணபதி பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நெடியகாட்டு திருச்சிற்றம்பலம் பிள்ளையார் கோயில் வீதியில் இடம்பெறவுள்ளது.

கணபதி படிப்பகத் தலைவர் ச.ஜெயகணேஸ் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வல்வெட்டித்துறை வைத்தியசாலையின் மாவட்ட வைத்திய அதிகாரியான மருத்துவர் திருமதி கலைச்செல்வி திலீபன் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினராக கணபதி பதிப்பகத்தின் முன்னாள் தலைவர் இ. தேவகுரு கலந்து கொள்வார். (க)

◆◆◆

## கணித பாட திறன் விருத்தி முகாம்

தென்மராட்சி, மே 31

தென்மராட்சி கல்வி வலய ஆரம்பப் பிரிவினர் வலயப் பாடசாலைகளில் தரம் நான்கு வகுப்புகளில் கற்கும் மாணவர்களுக்கான கணித பாட திறன் விருத்தி முகாமை இன்று சனிக்கிழமை ஆறு நிலையங்களில் நடத்தவுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் அறிவித்துள்ளார்.

ஆரம்பப்பிரிவில் மாணவர்களுக்கு கணித பாடம் தொடர்பான போதிய அறிவை வளர்க்கும் நோக்குடன் வலய ஆரம்பக் கல்விப் பிரிவு விசேட செயற்றிட்டத்தின் ஊடாக நடத்தப்படவுள்ள திறன் விருத்தி முகாமில் மொத்தமாக ஆயிரம் மாணவர்கள் ஆறு நிலையங்களில் கலந்து கொள்ளவுள்ளனர்.

பின்வரும் பாடசாலைகளில் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதால் அந்தந்தக் குடும்பப்பாடசாலைகளை அருகில் உள்ள நிலையங்களில் இணையுமாறும் அறிவித்துள்ளார்.

நிலையங்களின் விவரம் வருமாறு:-

மட்டுவில் சந்திரபுரஸ்கந்தவரோதய ம.வி., கைதடி முத்துக்குமாரசுவாமி ம.வி., மீசாலை வீரசிங்கம் ஆரம்பப் பாடசாலை, கொடிகாமம் அ.த.க. பாடசாலை, சாவகச்சேரி மகளிர் கல்லூரி, வரணி மத்திய கல்லூரி என்பனவாகும். (வ-9)

## முதலாம் ஆண்டு நினைவுதினம்



பிறப்பு
12.05.1932

இறப்பு
11.06.2013

திதி:
திருதியை (31..05.2014)

### அமரர் கதிர்காமு இளையதம்பி

சிவந்த மேனியுடன், சிரித்த முகமும்
அமைதியான பேச்சும், அளவற்ற சொத்தெமக்கு
பரந்த குடும்பமதைப் பக்குவமாக வளர்த்து
பழிச்சொல் கேளாது பணிமுடித்த ஆதவன்.
தேனீக்களாய் கூடி வாழவும், காகம் போல் பகிர்ந்துண்ணவும்
எறும்பு போல் தலைவன் வழி செல்லவும் கற்றுத்தந்த தெய்வமே!
வானுலகில் வாழும் போதும் எம் வாழ்வுகளை நெறிப்படுத்தி
பண்பான குடும்பமதில் பாகுபாடு வந்திடாமல்
பாதுகாக்க வேண்டுமென்று பரிதவித்து நிற்கின்றோம்.
ஆண்டொன்று ஓடியது அனுதினமும் வேண்டுகின்றோம்!
ஆத்மாவும் சாந்தி கொள்ள ஆண்டவனே வழிசெய்யும்!

202/1, விசுவமடு. (41279)(12.3.6) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி செல்வமணி அன்னம்மா கபிரியேற்பிள்ளை
(ஏழாலை கிழக்கு, ஏழாலை)



ஏழாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமா கவும் தற்போது கனடாவில் வாழ்ந்துவந்தவருமான திருமதி செல்வமணி அன்னம்மா கபிரியேற்பிள்ளை 24.05.2014 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம்-இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கபிரியேற்பிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான யாக்கோப்பு-பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கனகரட்ணம், காலஞ்சென்ற நாகரத்தினம், புவனேஸ்வரி (கனடா), காலஞ்சென்ற சுப்பிரமணியம்(அருமை), நேசமணி (குமரபுரம்-வவுனியா) ஆகியோரின் நேசமிகு சகோதரியும், காலஞ்சென்ற குலமணிதேவி, செல்வமணி, காலஞ்சென்ற செல்வராசா, காலஞ்சென்ற கமலாதேவி, காலஞ்சென்ற சபாரட்ணம் ஆகியோரின் மைத்துனியும், யேசுகாவலன் (கனடா), சாந்தமணி (கனடா), ஞானமணி (யாழ்ப்பாணம்), மனோவேதகாவலன் (யாழ்ப்பாணம்), ஞானகாவலன் (தயா-கனடா), ஜெயமணி (கனடா), காலஞ்சென்ற ஜோதிகாவலன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், கலாவதி, காலஞ்சென்ற அருட்பிரகாசம் (பொன்ராசா), தேவதாசன் (பாபு), சுஜீவா, தனிநாயகம் (யோசேப்) ஆகியோரின் அன்பு மாமியாரும், கிறிசாந்,றஜாந், அரசிகா, ரிவேகா, அருள்ரூபன்-அலெக்சியா, மதனரூபன் (லதன்)-டிலானி, காமலீற்றா (குயின்)- ஜக்சன்,கனிஸ்ரா-சஞ்சீவ், ஜெஸ்லின், ஜோய்ஸ்லின்- ரொனிபிக்சன், ஜெனிஸ், கௌசிக்கா, சௌமிக்கா,விவிஷன், நிருஷன், நிலக்ஷன், ஜெதனிஸ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், தரனிஸ், திவேதிகா, ஜஸ்வின்,லக்கி, லக்ஷனா,அபிநாத்,சாருநாத், அபிநிசா,அன்றியா, ஏட்றியன், அக்ஸயா, அக்கேஸ், அக்ஸிகா ஆகியோரின் நேசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (31.05.2014) சனிக்கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

1A,சோமசுந்தர அவனியு, சுண்டுக்குளி.

தொ.பே: தயா - 416 833 8691 (கனடா)
ஜெயா - 905 619 5168 (கனடா)
(46577)(5.6.3) மதன் - 0041 78 760 88 12 (சுவிஸ்)

தகவல் :
ரீ.தேவதாசன் (பாபு)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

ஐயம்பிள்ளை அம்பலவாணர் | மங்கையர்க்கரசி அம்பலவாணர்





தோற்றம்: 23.05.1929 | தோற்றம்: 17.10.1929
மறைவு: 28.01.2012 | மறைவு: 23.05.2012

மறைந்த எமது தாய் தந்தையரின் இரண்டாம் ஆண்டு நினைவு நிகழ்வுகள் இன்று (31.05.2014) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால், இந்த நிகழ்வுக்கு தாங்களும் வருகை தந்து இவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

273, சில்வா வீதி,
வட்டக்கச்சி.

குடும்பத்தினர்.

(41280)(10.6.3)

## மரண அறிவித்தல்கள்

### சிற்றம்பலம் நல்லையா
(ஓய்வுபெற்ற கணக்காளர், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்)



மாதகல் மேற்கைப் பிறப்பிடமாகவும், பம்பலப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட சிற்றம்பலம் நல்லையா 29.05.2014 காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிற்றம்பலம் - மீனாட்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சண்முகம் கந்தையாவின் பெறாமகனும், காலஞ்சென்றவர்களான இராசரத்தினம் - பொன்னம்மா தம்பதியரின் மருமகனும், ராஜலக்சுமியின் பாசமிகு கணவரும், சர்வோதயன், ஞானோதினி (UK), மனோதீரன் (UK) ஆகியோரின் அன்புத் தந்தையும், அய்ஷா, டிவாகரன், ஜனனி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ரிதிகா, ஜெதூஷன், பிரஜ்னா, றறன், லவன்யா, மைரன் ஆகியோரின் அன்புப் பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பொரளை ஜயரட்ண மலர்ச்சாலையில் 01.06.2014 மு.ப.9 மணி தொடக்கம் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, மாலை 4 மணியளவில் தகனக்கிரியைக்காக பொரளை இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

4/2 "K"பம்பலப்பிட்டி தொடர்மாடி,
கொழும்பு-4. 011 259 7948

(சி13936)
(12.3.6)

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி இராசம்மா முருகேசு



வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் 3 ஆம் கட்டை கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசம்மா முருகேசு 29.05.2014 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசுவின் அன்பு மனைவியும், இராசேந்திரம் (கனடா), மனோன்மணி (உடுவில்), சுப்பிரமணியம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிறிஸ்கந்தராஜா (ஜேர்மனி), சரோஜா, சிறிஸ்கந்தவேல்(மாநகரசபை நல்லூர்), கிரிஜா, விஜியா(லண்டன்), தனஜா, சண்(லண்டன்), இரத்தினவடிவேல் (குட்டித்தம்பி மின் இணைப்பாளர்) ஆகியோரின் அன்புத் தாயும், கௌரி(ஜேர்மனி), குணசேகரம்(ஜேர்மனி), மருதமுத்து, கிருஷ்ணகுமார், சசிகரன் (லண்டன்), வதனி, தாரணி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும், செல்வியா, கோவிந்தன், திலக்ஷன், சுதர்சினி, மதுசாளினி, யோசுவா, அபினா, அனு, கௌசிகன், கபிஷா, விதியோன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.06.2014) ஞாயிற்றுக்கிழமை மு.ப.9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வீரபத்திர கோயிலடி,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம். (48594)(4.6.3)

தகவல்:
குடும்பத்தினர்.
077 899 5426

# மீள்நல்லிணக்கத்தை நோக்கிய முயற்சிகள் இலங்கையில் இன்னமும் பின்னடைவிலேயே

## அமெரிக்கா தெரிவிப்பு

கொழும்பு, மே 31

வடக்கு மாகாண சபைத் தேர்தல் கடந்த வருடம் செப்ரெம்பரில் நடந்து முடிந்த போதிலும் மீள் நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக் கூறும் விடயங்களில் முன்னேற்றம் எதுவுமில்லை என்று குறிப்பிட்டுள்ள அமெரிக்க அரசு கடந்த ஆண்டுகளை விட நிலைமைகள் இலங்கையில் மேலும் மோசமடைந்து வருவதாகத் தெரிவித்துள்ளது.

அமெரிக்க காங்கிரஸுக்கு சமர்ப்பித்துள்ள தனது பிந்திய அறிக்கையிலேயே அமெரிக்கா இவ்வாறு தெரிவித்துள்ளது.

அபிவிருத்தி மற்றும் அரசியல் செயற்பாடுகளை இலங்கை அரசு தொடர்ந்தும் மத்தியில் குவித்து வருவதன் மூலம் முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள், இந்துக்கள் உட்பட மத மற்றும் இனச் சிறுபான்மையினரைத் தொடர்ந்தும் புறமொதுக்கி வருகிறது.

சமத்துவமான அரசியல் உரிமைகள் மற்றும் குடியியல் சார் உரிமைகள் வழங்கப்படும் என்ற உறுதிமொழி நிறைவேற்றப்படுவது தொடர்பில் தொடர்ந்தும் அது அச்சத்தையும் உருவாக்கி வருகின்றது. இலங்கையின் 26 ஆண்டுகால சிவில் போர் முடிவுக்கு வந்துவிட்டது. ஆனால் கடந்த வருடத்தில் இருந்ததை விட தற்போதைய சூழ்நிலைகள் மிக மோசமாக இருக்கின்றன.

வடக்கு மாகாண சபைத் தேர்தல் கடந்த செப்ரெம்பரில் நடந்து முடிந்த போதிலும் மீள் நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக் கூறும் விடயங்களில் முன்னேற்றம்எதுவுமில்லை. பெரும்பான்மைச் சிங்களவர் மற்றும் சிறுபான்மைத் தமிழர் தரப்புக்களின் நிலைப்பாடு மேன் மேலும் இறுக்கமடைந்து வருகின்றது. மீள்நல்லிணக்கத்தை நோக்கிய முயற்சிகள் பின்னடைந்து வருகின்றன என்றும் அந்த அறிக்கையில் அமெரிக்கா குறிப்பிட்டிருக்கின்றது. (வ-5)

## புத்தாண்டு விழா

யாழ்ப்பாணம் கொட்டடி கிராம அபிவிருத்திச் சங்கமும் சனசமூக நிலையமும் இணைந்து நடத்தும் புத்தாண்டு விழா இன்று சனிக்கிழமை மாலை 6.30 மணியளவில் சீனிவாசகம் வீதியில் அமைந்துள்ள சனசமூக நிலையக் கட்டட முன்றிலில் இடம்பெறவுள்ளது. கலாநிதி நா.தனேந்திரன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக பேராசிரியர் க.தேவராஜா கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக திருமதி நவமணி அலோசியஸ் ஜெயராஜன், வீரவாகு கணேசராசா, சண்முகம் லோகசிங்கம், நடராசா சத்தியரூபன், திருமதி றசிகலா விஜயரத்தினம் ஆகியோர் கலந்து கொள்வார்கள். (க)

## வண்ணான்கேணி இரக்கத்தின் மாதா தேவாலயத்தில் வழிபாடுகள் ஆரம்பம்

பளை, வண்ணான்கேணி புனித இரக்கத்தின் மாதா தேவாலயத்தில் இன்று தொடக்கம் மீண்டும் வழிபாடுகள் இடம்பெறவுள்ளன. 1993 ஆம் ஆண்டு இடம்பெற்ற குண்டு வெடிப்பால் சேதமடைந்து காணப்பட்ட தேவாலய கட்டடம் அந்தப் பகுதி இந்து மக்களின் பங்களிப்புடனும் பங்கு மக்களின் ஒத்துழைப்புடனும் 21 வருடங்களின் பின்னர் புனரமைக்கப்பட்டு இன்று திறந்து வைக்கப்படவுள்ளது. பருத்தித்துறை மறைக் கோட்ட முதல் வர் அருட்தந்தை ஜோன் மௌலீஸ் அடிகள் இன்று காலை 6.30 மணிக்கு முதல் நாள் வழிபாட்டை நடத்தி தேவாலய கட்டடத்தைத் திறந்து வைக்கவுள்ளதாக பளை பங்குத் தந்தை அருட்பணி ஆ.ஜஸ்ரின் தெரிவித்தார். (வ-9)

## பேரணி

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் மருத்துவ விஞ்ஞானப்பிரிவு(பிரிவு-சி)யாழ். பல்கலைக்கழக சமுதாய மற்றும் குடும்ப மருத்துவத்துறையுடன் இணைந்து "புகையிலை ஒழிப்பு" என்ற தொனிப்பொருளில் பேரணி ஒன்றை இன்று நடத்தவுள்ளது. இந்தப் பேரணி சர்வதேச புகையிலை ஒழிப்பு தினத்தில் சகலரதும் கவனத்தை ஈர்க்கும் நோக்குடன் யாழ். நல்லூர் ஆலயமுன்றிலில் காலை 8 மணிக்கு ஆரம்பித்து வீரசிங்கம் மண்டபத்தில் முற்பகல் 11 மணியளவில் நிறைவு பெறும். (க)

## அந்தியேட்டியும் ஆத்ம சாந்தி அஞ்சலியும்

தோற்றம்
23 - 12 - 1941



உதிர்வு
15 - 05 - 2014

### திருமதி நாகராணி துரைச்சாமி

யாழ்ப்பாணம், பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும்,நெதர்லாந்து (Roermond) ஐ வதிவிடமாகவும் கொண்ட எமது தாயார் திருமதி நாகராணி துரைச்சாமி அவர்களின் மரணச் செய்தி கேட்டு நேரில் வந்து ஆறுதல் கூறி மரணச் சடங்கில் கலந்து கொண்டோருக்கும்,உள்ளூர்,வெளியூர்களில் இருந்து தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டோருக்கும் மற்றும் பல வழிகளில் உதவியோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக்கிரியை இன்று (31.05.2014) சனிக்கிழமை நெதர்லாந்தில் நடைபெறும்.

**பிள்ளைகள்,மருமக்கள்,பேரப்பிள்ளை.**

(40044)(7.6.3)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
13.10.1948

மறைவு
11.06.2013

### திருமதி ஸ்ரீ ரஞ்ஜினி செல்வராஜா

**(இளைப்பாறிய இலங்கை வங்கி உத்தியோகத்தர்)**

**திதி: 31.05.2014**

அம்மா எங்கள் உயிர் அம்மா
ஒருமுறை அழைத்தாலும் ஓடோடி வருவீர்கள் வேலையில் இருந்து
எத்தனை முறை அழைத்தும் ஏன் வரவில்லை இன்னும்
நிரந்தரமற்ற மனித வாழ்க்கையில் எது வேண்டுமானாலும்
நிகழலாம் என்பதை புரிந்து கொண்டோம் நாம் அன்று
ஆனால் நம் மேல் நீங்கள் கொண்ட அளவு கடந்த பாசத்தை
அளவிடவில்லை ஓர் அளவு கோல்
எங்களில் ஒருவராய் எப்போதும் எங்களுடனேயே
வாழ்ந்திருப்பாய் எங்கள் அன்புத் தாயே.........

**கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் மற்றும் சகோதரர்கள்.**

(சி.14400) (45.6.3)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில்
10 ★ 10 ★ 1935

விண்ணில்
01 ★ 05 ★ 2014



### திருமதி பரமேஸ்வரி சபாரத்தினம்

அன்பின் பிறப்பிடமான அன்னையே!
பாசத்துடன் எம்மை ஈன்றெடுத்து துயரங்கள் அறியாது எம்மை வளர்த்தெடுத்து எமக்கென உரித்தான இல்லற வாழ்க்கையையும் தேர்ந்தெடுத்து எம்மை நல்வழிப்படுத்தி இன்முகத்துடன் இப்பூமியில் வாழ்ந்த எம்தாயே! என்றும் உம் நினைவுடனே பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், பெறா மக்கள் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள்வாழ்ந்தபடி உள்ளோம். உங்கள் ஆத்மாசாந்தியடைய பிரார்த்தனை செய்தபடி உள்ளோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!!!

செல்வம் மில் வீதி,
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.

(சி.14090)(4.6.3)

உங்கள் பிரிவால் துயருறும்
**சபாரத்தினம் குடும்பத்தினர்.**

## 29 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அமரர்

### சாம்பசிவம் கனகம்மா



தோற்றம்
22.02.1926

மறைவு
04.05.2014

கடந்த 04.05.2014 சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி அவர்களின் வீட்டுக்கிருத்தியக்கிரியைகள் நாளை (01.06.2014) ஞாயிற்றுக்கிழமை மு.ப.11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவிருப்பதால் தாங்களும் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**குடும்பத்தினர்.**
முதலிகோயில் லேன்,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

(45609)(4.6.3)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



### திருமதி மனோன்மணி தங்கராசா

மலர்வு 29.09.1955 — உதிர்வு 01.05.2014

கடந்த 01.05.2014 அன்று எம்மை விட்டுப் பிரிந்த எமது குடும்பத் தலைவியின் மறைவுச் செய்தியறிந்து உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் தொலைபேசி மூலம் ஆறுதல்கள் தெரிவித்த அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன், இன்று (31.05.2014) சனிக்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

**இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.**

(43653)(10)

**மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி.** **குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



### மயில்வாகனம் நாகலிங்கம்

(முன்னாள் மஸ்கெலியா எஸ்டேட் தலைமை லிகிதர்)

சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும், வெள்ளவத்தை பெரேரா ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் நாகலிங்கம் (முன்னாள் மஸ்கெலியா எஸ்டேட் தலைமை லிகிதர்) 28.05.2014 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவபாக்கியத்தின் (நவரட்ணம் ஸ்ரோர்ஸ் மாவடி, வட்டுக்கோட்டை) அன்புக் கணவரும், இராஜகுமார் (இளைப்பாறிய உதவி முகாமையாளர், மக்கள் வங்கி ), சிவகுமார் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், இராஜகுமாரி, சிவயோகேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும், ரஜீவன் (தேசிய சேமிப்பு வங்கி, கொட்டாஞ்சேனை), திருமதி அனுஷா குமணன் (சிங்கப்பூர்), சிவரூபன் (கனடா), சிந்துயா (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும், அபிநயன், ஆர்த்திகா, ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது சித்தன்கேணி இல்லத்தில் நாளை (01.06.2014) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் வழுக்கையாறு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**'நவபாக்கியபவனம்', சித்தன்கேணி.**

(C/14093) (10)

**தகவல்:**
**நா. இராஜகுமார்**
**நா. சிவகுமார்**
**(மகன்மார்)**

## கூறுவிலை கோரல்
## பனை அபிவிருத்திச் சபை

பனை அபிவிருத்திச் சபைக்கு மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களில் கீழ்வரும் கட்டடங்களை அமைப்பதற்காக கூறுவிலை கோரப்படுகின்றது.

| விவரம் | அண்ணளவான கணிப்பீட்டுப் பெறுமதி (வற்வரி உள்ளடங்கலாக) |
|---|---|
| 01. மன்னார் மதவாச்சி சந்தியில் மடுச்சந்திக்கு அண்மையாக அமையவுள்ள பனம் பொருள் உற்பத்தி விற்பனை நிலையத்திற்கான (கற்பகம்) 35'0''x30'0'' விஸ்தீரணம் உடைய காட்சியறைக் கட்டடம். | 2.90Mn |
| 02. மன்னார் சாந்திபுர பகுதியில் அமையவுள்ள பிராந்திய காரியாலயத்திற்கான 35'0''x25'0'' விஸ்தீரணம் உடைய கட்டடம். | 3.20Mn |
| 03. முல்லைத்தீவு மாவட்டம் செல்வபுரம் கிராமத்தில் அமையவுள்ள 38'1''x24'3'' விஸ்தீரணம் உடைய பனம் பொருள் உற்பத்தி நிலையம். | 3.00Mn |

மேற்படி கட்டடங்களுக்கான கூறுவிலைப் பத்திரங்களை தேசிய வீடமைப்புச் செயலகம், முதலாம் மாடி, கண்டி வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள பனை அபிவிருத்திச் சபையின் தலைமைக் காரியாலயத் திலோ அல்லது இல. 14, குமரன் தியேட்டர் வீதியில் அமைந்துள்ள மன்னார் மாவட்டக் காரியாலயத்திலோ அல்லது A9, வீதி மாங்குளத்தில் அமைந்துள்ள முல்லைத்தீவு மாவட்டக் காரியாலயத்திலோ மீளளிக்கப் படாத தொகையாக ரூபா 1000.00 செலுத்திப் பெற்றுப் பூர்த்திசெய்து 16.06.2014ஆம் திகதிக்கு முன்பாக பனை அபிவிருத்திச் சபையின் தலைமைக் காரியாலயத்திற்கு பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன். 19.06.2014 முற்பகல் 10.00 மணிக்கு கேள்விப் பத்திரம் திறந்து பரிசீலிக்கப்படும்.

குறிப்பு : ஒப்பந்தகாரர் ICTAD பதிவு C8 அல்லது அதிலும் கூடியது.

தலைவர்,
பனை அபிவிருத்திச் சபை,
தேசிய வீடமைப்பு செயலகம்,
முதலாம் மாடி, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

(சி/14092) (7.8.3)

## பிரத்தியேக வகுப்புக்கள்

குழுவாகவும் தனியாகவும் கற்பிக்கப்படும்..
1) A/L - தமிழ், பொருளியல்
2) GAQ, B.A-I, B.A - II - தமிழ், இந்து நாகரிகம், அரச அறிவியல்
யாழ். மண்ணின் பிரபல ஆசிரியர்
தொடர்புக்கு: 076 675 7481

## கிரிக்கெட் போட்டி

ஆஸ்திரேலியாவில் இருந்து வருகை தரும் 40 வயதுக்கு மேற்பட்ட துடுப்பாட்ட அணி யினருக்கும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 40 வயதுக்கும் மேற்பட்ட பழைய மாணவர் களுக்கும் இடையில் நடைபெறும் துடுப்பாட்ட போட்டி நாளை காலை 8 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



### அமரர் காசிநாதர் வீரகத்தி

மண்ணக வாழ்வில்: 29.12.1947

விண்ணக வாழ்வில் 01.05.2014

இடைக்குறிச்சி-வரணியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட எமது குடும்பத்தின் குல விளக்கு காசிநாதர் வீர கத்தி அவர்கள் 01.05.2014 வியாழக்கிழமையன்று சிவபதமடைந்த வேளையில் நேரிலும், தொலைபேசி மூலமும், மின் னஞ்சல் மூலமும் எமது துயரில் பங்குகொண்டு அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி பிரசுரித்தோருக்கும், தேவையான உதவிகள் அளித்தோருக்கும், இறுதிக்கிரியைகளை நடத்திய ஆச்சாரியாருக்கும், அந்தியகால சேவை வழங்கியவர்களுக்கும், துயரில் பங்கு கொண்ட ஏனைய அனைவருக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவிக்கின்றோம்.

அத்துடன் இன்று (31.05.2014) சனிக்கிழமை முற்பகல் அவரது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள் ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**இடைக்குறிச்சி, வரணி.** (48282) (10) **குடும்பத்தினர்.**

## ஓய்விலும் உயர்ந்து வாழ்க!



### திரு க. அரசரத்தினம்

(கோட்டக் கல்வி அதிகாரி நெடுந்தீவு)

நெடுந்தீவு மண்ணின் மைந்தனும் எமது மன்றத்தின் தொடக்க கால உறுப்பினரும், நெடுந்தீவு கோட்டக் கல்வி அதிகாரியுமான திரு. க. அரசரத்தினம் அவர்களின் கல்விச் சேவையைப் பாராட்டுகின்றோம்.
31.05.2014 இன்று காலம் புகழும் அகவை அறுபதில் ஓய்வு பெறும் அவரை நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.
என்றும் நினைவிருக்கும் சேவையின் சிறப்புக்கள் நிலைத்திருக்க வாழ்க!

**நெடுந்தீவு பாடசாலைகளின் பழைய மாணவர் மன்றம் கனடா - நெடுந்தீவு.**

(C/14095)(10)

## கட்டார்

கட்டார் நாட்டில் உலகதரம் வாய்ந்த பல்கலைக் கழகங்களில் Office boy 30 பேர் தேவை. ஆங்கில அறிவு ஓரளவு அவசியம். 1000 QR +OT, தங்குமிடம், மருத்துவம் இலவசம். கைவசம் விசா உள்ளதால் ஒரே வாரத்தில் பயணம்.

தொடர்பு: 077 3957291

(43330) (10)

## கட்டார்

கனரக வாகனச் சாரதிகள் 30 பேர் - 1800 QR + Trip Allownce
JCB ஒப்ரேட்டர்
புள்டோசர் ஒப்ரேட்டர்
பெக்கோ ஒப்ரேட்டர்
மெக்கானிக்
ஒப்ரேட்டர்
1500 - 2000 QR சம்பளம்
ஒரே வாரத்தில் பயணம், தங்குமிடம், மருத்துவம் இலவசம்

தொடர்பு: 077 3957291

(43331) (10)

## விற்பனைக்கு

Demo பட்டா PR-xxx- வாகன இலக்கம் Full Body, Double Door,

**Contact No:**
**077 178 9751**
**077 757 7019**

(43330) (10)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




எமது வன்னியசிங்கம் சனசமூக நிலையத்துக்கும் மற்றும் பிரதேசத்துக்கும் உதவிகள் பல புரிந்து சமூகப் பணியாற்றிவரும்

கருமத்திருதி
### லயன் Dr. வை. தியாகராஜா MJF

அவர்கள் லயன்ஸ் கழக 2 ஆவது உப ஆளுநராக பெரும்பான்மை வாக்குகளால் வெற்றியீட்டியமையிட்டு பெருமகிழ்ச்சி அடைவதுடன் சர்வதேச லயன்ஸ் கழக நூற்றாண்டு காலப் பகுதியில் 306 B1 மாவட்ட ஆளுநராக பதவிவகிக்க உள்ளமையையிட்டு எமது வன்னியசிங்கம் சனசமூகநிலையம் சார்பாக பேருவகையுடன் வாழ்த்துகின்றோம்.
மேன் மேலும் பதவிகள் பட்டங்கள் பெற்றுச் சேவைகள் பல புரிந்து சிறப்புடன் வாழ்ந்திட எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வன்னியசிங்கம் சனசமூகநிலையத்தினர்,
அரசடி வீதி, இருபாலை.

(48815)(4.3.6)

## வீடு வாடகைக்குத் தேவை

வவுனியா தொடக்கம் ஓமந்தை வரையிலான பிரதேசத்தில் A9 வீதிக்கு அண்மித்ததாக 12 பேர் தங்கக் கூடிய வீடு, இரண்டு மாத காலத்திற்கு வாடகைக்குத் தேவை.

தொடர்பு: 077 203 3344

## வீடு வாடகைக்குத் தேவை

பளை புகையிரத நிலையத்துக்கு அண்மையில் 12 பேர் தங்கக் கூடிய வீடு, இரண்டு மாத காலத் துக்கு வாடகைக்குத் தேவை.

தொடர்பு: 077 203 3344

# கடந்த வாரத்தில் மட்டும் ரூ.16 லட்சம் பெறுமதியான பொருள்கள் திருட்டு

யாழ்ப்பாணம், மே 31

யாழ்.குடாநாட்டில் கடந்த வாரம் இடம்பெற்ற கொள்ளை மற்றும் திருட்டுச் சம்பவங்களில் சுமார் 16 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் அபகரிக்கப்பட்டுள்ளன என்று தெரிவித்துள்ளார் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் டி.தில கரட்ண.

யாழ்.பொலிஸ் நிலையத்தில் நேற்று நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

"கொக்குவில் கிழக்கில் கடந்த 23 ஆம் திகதி வீடு உடைத்து 8 லட்சத்து 55 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் களவாடப்பட்டுள்ளன. அரியாலையில் கடந்த 25 ஆம் திகதி வீடு புகுந்து 3 லட்சத்து 20 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. உரும்பிராயில் வீடு உடைத்து 24 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன. கொக்குவில் மேற்கில் வீடு உடைத்து 5 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

திருநெல்வேலியில் 87 ஆயிரம் ரூபா பெறுமதியான சங்கிலி கொள்ளையிடப்பட்டுள்ளது. அது தொடர்பில் சந்தேகத்தில் 3 பேர் கைது செய்யப்பட்டு எதிர்வரும் 5 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். உரும்பிராயில் ஒரு லட்சத்து 28 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன. சண்டிலிப்பாயில் கடை உடைத்து சுமார் 12 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன. சண்டிலிப்பாயில் வேறொரு இடத்தில் வீடு உடைத்து ஒரு லட்சம் ரூபா பெறுமதியான சங்கிலி திருடப்பட்டுள்ளது.

சிறுப்பிட்டி கிழக்கில் பகல் வேளை வீடு உடைத்து 2 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன. ஆவரங்கால் மேற்கில் இரவுநேரம் கோயில் உடைத்து 24 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன. அவ்வாறே சிறுப்பிட்டியில் வீடு உடைத்து 24 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன. இந்த இரு சம்பவம் தொடர்பிலும் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்"-என்றுதெரிவித்துள்ளார்.(ற-4)

# சவூதியில் இலங்கை பணிப்பெண் உயிரிழப்பு

சவூதி அரேபியாவில் சமையல் எரிவாயு சிலிண்டர் வெடித்து கோமா நிலையில் கிங் சவுத் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டிருந்த இலங்கை பணிப் பெண் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.

ரியாத் பகுதியில் கடந்த 15 ஆம் திகதி இடம்பெற்ற சமையல் எரிவாயு சிலிண்டர் வெடிப்புச் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட 38 வயதுடைய பாதிமா சபாயா என்ற இலங்கை பணிப் பெண்ணே உயிரிழ்ந்தவராவார். சபாயா கடந்த 15 மாதங்களாக சவூதியில் தொழில் புரிந்து வந்துள்ளார்.

**“ ரியாத் பகுதியில் சமையல் எரிவாயு சிலிண்டர் வெடித்ததில் பாதிமா சபாயா என்ற இலங்கை பணிப் பெண்ணே உயிரிழந்தவராவார்.**

பாதிமா சபாயாவின் ஜனாசாவை ரியாத்தில் அடக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

பாதிமா சபாயாவின் ஜனாசா நல்லடக்கத்தில் பங்குகொள்ள அவரது சகோதரர் ஜெத்தாவில் இருந்து தூதரக உதவியுடன் செல்லவுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. (வ)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### தமிழ்

நிலவும் உள்ளக முரண்பாடுகளைத் தீர்ப்பதாக இருந்தது. கல்முனை நகரசபையின் ஆளும்கட்சியான முஸ்லிம் காங்கிரஸால், அபிவிருத்தி நடவடிக்கையின்போது தமிழ் மக்கள் ஓரம்கட்டப்படுகின்றனர் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது. ஆயினும் நேற்றைய கூட்டத்தின்போது, அவ்வாறான செயற்பாடுகள் எதிர்காலத்தில் நடைபெறமாட்டாது என்று உறுதிவழங்கப்பட்டது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவிக்கும் அதேவேளை, அவ்வாறு ஓரங்கட்டும் நடவடிக்கை எவையும் நடைபெறவில்லை என்பது குறித்துத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு விரிவாக எடுத்துரைக்கப்பட்டது என்று முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

அத்துடன் காரைதீவுச் சந்தியிலுள்ள சாய்ந்தமருது ஜும்மா பள்ளி வாசலுக்கான காணி குறித்த பிணக்கு நேற்றைய கலந்துரையாடலின்போது தீர்க்கப்பட்டுள்ளது என்று இரு தரப்பினரும் தெரிவித்துள்ளனர்.

கல்முனை தமிழ் உப பிரதேச செயலகத்தை தரமுயர்த்துவதற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தடையாக இருக்கின்றது என்று மக்களால் முன்வைக்கப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலும் நேற்றைய கலந்துரையாடலில் ஆராயப்பட்டுள்ளது. இதன் போது முஸ்லிம் காங்கிரஸ் அவ்வாறு தாம் எந்தத் தடையையும் ஏற்படுத்தவில்லை என்று விளக்கமளித்துள்ளது. இது தொடர்பில் கொள்கையளவிலான இணக்கம் மாத்திரமே எட்டப்பட்டுள்ளது.

இந்த விடயத்தில் இறுதி முடிவு எடுப்பது தொடர்பில் எதிர்வரும் நாடாளுமன்றக் கூட்டத்தொடரின் போது இருதரப்பினரும் மீளவும் சந்தித்துக் கலந்துரையாடுவது என்று தீர்மானிக்கப்பட்டது.

அதேவேளை, தனித்து கிழக்கு மாகாண தமிழ் - முஸ்லிம் உறவு என்பதுடன் மாத்திரம் வரையறைப்படுத்தப்படாது, தேசிய ரீதியிலான தமிழ்-முஸ்லிம் மக்களின் உறவு குறித்து எதிர்காலத்தில் கலந்துரையாடல் ஒன்றை நடத்துவது என்றும் இதன்போது முடிவெடுக்கப்பட்டுள்ளது. (ற-5-10-30)

### பெண்

றோசி சேனநாயக்க, அனோமா கமகே, விஜயகலா மகேஸ்வரன், சந்திரானி பண்டார ஆகிய எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் இந்தப் பயணத்தை மேற் கொண்டுள்ளனர்.

இவர்களை அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலர் நிஷா பிஸ்வால் சந்தித்து, பெண்களுக்கு எதிரான வன்முறைகள் மற்றும் அமைதி மற்றும் நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவதில் பெண்களின் பங்கு குறித்து பேச்சு நடத்தியுள்ளார்.

இந்தத் தகவலை நிஷா பிஸ்வால் தமது டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ளார்.

### காணாமற்

மூவரடங்கிய நிபுணர்கள் குழு எதிர்வரும் வெள்ளியன்று மட்டக்களப்பு மாவட்டத்துக்கு பயணம் மேற்கொள்ளவுள்ளது. இந்தப் பயணத்தை முடித்துக் கொண்டு கொழும்பு திரும்பிய கையோடு மேற்படி குழு விசேட கலந்துரையாடலொன்றையும் நடத்தவுள்ளது. சட்டமா அதிபர் திணைக்களத்தின் அதிகாரிகளும் இதில் பங்கேற்கவுள்ளனர் என்று தகவல் கிடைத்துள்ளது.

அத்துடன், காணாமற்போனவர்களின் உறவினர்கள் இராணுவம் மற்றும் சில குழுக்களுக்கு எதிராக முன் வைத்த முறைப்பாடுகள் தொடர்பில் சம்பந்தப்பட்டவர்களை நேரில் அழைத்து விசாரிப்பது குறித்து இதன்போது இறுதி முடிவெடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இவ்வாறு இடைக்கால விசாரணை அறிக்கை ஜூன் இறுதியில் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டாலும் இறுதி அறிக்கை அதாவது, பரிந்துரை அடங்கிய அறிக்கை எப்போது வெளியாகும் எனத் தெரியவில்லை. ஆணைக்குழுவின் விசாரணைக் காலஎல்லை மாற்றியமைக்கப்பட்டுள்ளதால் அதன் பதவிக் காலமும் இன்னும் சில வருடங்களுக்கு நீடிக்கப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. எனினும், இது குறித்து இன்னும் உத்தியோகபூர்வ தகவல்கள் வெளியாகவில்லை. (ற-சி)

### தீர்வுத்

நல்லிணக்கத்தை ஏற்படுத்துதல் மற்றும் அரசியல் தீர்வுத் திட்டத்தை முன்வைத்தல் என்பவற்றுக்கு பிரிட்டன் தொடர்ந் தும் ஆதரவளிக்கும். சுபீட்சமான இலங்கையைக் கட்டியெழுப்புவதே எமது பிரதான நோக்கம்.

கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் இலங்கையின் வடபகுதியில் தேர்தல் நடத்தப்பட்டு மாகாண சபை நிறுவப்பட்டமை வரவேற்கப்பட வேண்டியதே.

வடபகுதியில் பெருமளவு உட்கட்டுமான வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஆயினும் அங்குள்ள மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு இலங்கை அரசு காத்திரமான நடவடிக்கை எதனையும் எடுக்கவில்லை என்பது புரிகின்றது"- என்று தெரிவித்துள்ளார்.

டானியல் பெயின்ரர் கடந்த புதன்கிழமை மன்னார் மாவட்டத்துக்குப் பயணம் மேற்கொண்டிருந்தார். அங்கு மொழி உரிமைகள் தொடர்பான கலந்துரையாடலில் பங்கெடுத்திருந்ததுடன், பொது மக்களிடமும் கலந்துரையாடினார். அதன்போது தமிழ் மொழி அரச கருமங்களில் புறக்கணிக்கப்படுவது தொடர்பிலும், தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் அவரிடம் பொது மக்கள் பிரதிநிதிகள் தெளிவாக எடுத்துரைத்திருந்தனர். (ற)

### அச்சுறுத்தல்

உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எம்.திலகரட்ண.

வட பகுதியில் புலிகளுக்கு ஆதரவான துண்டுபிரசுரங்களை ஒட்டினர் என்று தெரிவித்து, கைதுகள் இடம்பெறுகின்றன. அவற்றை ஒட்டியவர்கள் என்று கூறி யாராவது உடன் கைது செய்யப்படுகின்றனர். யாழ்.இந்துக் கல்லூரியை அண்மித்த பகுதியிலும் புலிகளுக்கு ஆதரவான துண்டுப்பிரசுரங்கள் ஒட்டப்பட்டன என்று தெரிவித்து ஒருவர் கைது செய்யப்பட்டார்.

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்திலும் இருதடவைகள் - வெவ்வேறு நாள்களில் உயிரச்சுறுத்தல் விடுத்து துண்டுப் பிரசுரங்கள் ஒட்டப்பட்டன. அவற்றை ஒட்டியவர்கள் என்று சந்தேகத்தின் பேரில் யாராவது இதுவரை கைதானார்களா? என்று செய்தியாளர் சந்திப்பின்போது கேள்வி எழுப்பட்டது.

அதற்குப் பதிலளித்த உதவிப் பொலிஸ் அத்தியட்சகர், இந்த விடயம் தொடர்பிலும், ஏன் இதுவரை கைது செய்யப்படவில்லை என்பது தொடர்பிலும் அடுத்தவாரம் பதிலளிப்பதாகத் தெரிவித்தார். (ற-4)

### இந்திய

ஓய்வுபெற்றவர். தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் பதவி என்பது அமைச்சரவை அந்தஸ்துள்ள பதவிக்கு ஒத்தது என்பதும், இந்திய நாட்டின் பாதுகாப்புத் தொடர்பான முக்கிய முடிவுகளை எடுக்கும் அதிகாரம் இந்தப் பதவியில் உள்ளவருக்கு உண்டு என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்தப் பதவியில் இதுவரை இருந்து வந்த சிவ்சங்கர் மேனன், காங்கிரஸ் அரசு பொதுத் தேர்தலில் தோற்றமையை அடுத்து பதவியிலிருந்து விலகினார். டோவலின் நியமனம் பற்றிய உத்தியோகபூர்வ அறிவிப்பு நேற்று வெளியானது. எனினும் தமது பணிகளை அவர் கடந்த வாரமே ஆரம்பித்துவிட்டார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

உத்தரகண்ட் மாநிலத்தின் கர்வாலில் பிறந்த இவர், 1968 இல் கேரளாவில் ஐ.பி. எஸ். அதிகாரியாக பணியில் சேர்ந்தார். 1999இல் இந்தியன் எயர்லைன்ஸ் விமானத்தை தீவிரவாதிகள் கடத்தி ஆப்கனின் கந்தகாரில் இறக்கிய சமயம் பணயக் கைதிகளை விடுவிப்பதற்காகத் தீவிரவாதிகளுடன் இந்திய அரசின் சார்பில் சிரேஷ்ட பேச்சுத் தொடர்பாளராக இவரே செயற்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவர் தற்போது விவேகானந்தா சர்வதேச நிறுவனத்தின் இயக்குநராகவும் இருந்து வருகிறார். (ற)

### செய்தியாளர்

பொருத்தம் என்ற எண்ணக்கருதிட்ட அளவில் இருக்க, தற்காலிக அலுவலகங்கள் யாழ்ப்பாணத்தில் இயங்குகின்றன. அவற்றில் அதிகமானவை வாடகை வீடுகள் மற்றும் கட்டங்களிலேயே இயங்குகின்றன. வடக்கு மாகாண முதலமைச்சர் அலுவலகம், அவரது உத்தியோகபூர்வ இல்லம் என்பனவும் இதுவரை நிரந்தரமாக அமைக்கப்பெறவில்லை. முதலமைச்சராக சி.வி.விக்னேஸ்வரன் தெரிவு செய்யப்பட்ட பின்னர் அவரது விருப்பத்துக் கேற்பவே அலுவலகத்துக்கான கட்டடமும் உத்தியோகபூர்வ இல்லத்துக்கான வீடும் வாடகைக்கு அமர்த்தப்பட்டன என்று சபை நிர்வாகிகள் கூறுகின்றன.

இதனடிப்படையில் முதலமைச்சரின் உத்தியோகபூர்வ இல்லத்துக்கு மாதாந்தம் 50 ஆயிரம் ரூபா வாடகையும், அலுவலகத்துக்கு மாதாந்தம் 3 லட்சம் ரூபாய் வாடகையும் வடக்கு மாகாண சபையினால் வழங்கப்படுகின்றனர்.

இலங்கையில் வேறு எந்தவொரு முதலமைச்சரின் அலுவலகத்துக்கும் 3 லட்சம் ரூபா வாடகை வழங்கப்படுவதில்லை என்று மாகாண சபைகள் அமைச்சு கூறுகின்றது. வடக்கு மாகாண ஆளுநர் ஊடாக ஜனாதிபதிக்கு விசேட கோரிக்கை விடுக்கப்பட்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அனுமதித்ததன் அடிப் படையில் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் அலுவலகம் 3 லட்சம் ரூபா வாடகைக்கு அமர்த்தப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இவ்வளவு பெரும் தொகை வாடகை கொடுக்கப்படுகின்ற போதும், முதலமைச்சரின் உத்தியோகபூர்வ சந்திப்புக்கள் தொடர்பாகச் செய்தி சேகரிக்கச் செல்லும் செய்தியாளர்களை அலுவலகத்தின் உள்ளே அழைத்து இருத்திப் பேசுவதற்குப் போதிய இடவசதி அங்கில்லை என்று சில நாள்களுக்கு முன்னர் பத்திரிகை ஆசிரியர்களுக்கு அனுப்பியிருந்த கடிதத்தில் முதலமைச்சர் கவலை தெரிவித்திருந்தார்.

செய்தியாளர்களுக்கான வசதிகளைச் செய்து கொடுக்க முடியாமையால் அவர்களைச் செய்தி சேகரிக்கத் தனது அலுவலகத்துக்கோ இல்லத்துக்கோ இனிமேல் அனுப்பி வைக்க வேண்டாம் என்றும் பத்திரிகை ஆசிரியர்களிடம் முதலமைச்சர் விநயமாகக் கேட்டுக் கொண்டிருந்தார். (உ-5)

### அச்சுவேலி

நீதிவான் திருமதி ஜோய்மகிழ் மகாதேவா முன்னிலையில் இந்தவழக்கு நேற்று விசாரணைக்கு வந்தபோதே விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

கடந்த 4 ஆம் திகதி சனிக்கிழமை நள்ளிரவு இடம்பெற்ற இந்தக் கொலைச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்தவர்களான - ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நிற்குணநாதன் அருள்நாயகி (வயது -50), நிற்குணநாதன் சுபாங்கன் (வயது-20), யசோதரன் மதுசா (வயது 27) ஆகியோர் வாளால் வெட்டப்பட்டுக் கொல்லப்பட்டனர்.

அந்தச் சம்பவத்தில் வாள்வெட்டுக்கு இலக்கான தங்கவேல் யசோதரன் (வயது- 30), தனஞ்செயன் தர்மிகா (வயது - 25) ஆகிய இருவருமே படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்புட்டனர். அவர்களில் யசோதரன் சிசிக்சைகளின் பின்னர் வைத்தியசாலையிலிருந்து வீடு திரும்பியுள்ள நிலையில், தர்மிகா தொடர்ந்தும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இதுதொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள தனஞ்செயன் தனது மனைவியின் சகோதரியையும் திருமணம் செய்யும் நோக்கில் செயற்பட்டு வந்துள்ளார் என்றும், அதன் தொடர்ச்சியாகவே இந்தக் கொலைகள் நடைபெற்றுள்ளன என்றும் விசாரணையில் தெரியவந்துள்ளது என்று பொலிஸார் கூறுகின்றனர். இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருகின்றது என்றும் அவர்கள் மேலும் தெரிவித்தனர். (ற-4)

### பன்முகப்படுத்த

ரூபாவும், உறுப்பினர்களுக்கு 2.5 மில்லியன் ரூபாவும் பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதியாக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

வரவு - செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர், தமக்கு ஒதுக்கப்பட்ட நிதி போதாதென்று தெரிவித்த உறுப்பினர்கள், நிதியை அதிகரித்து வழங்குமாறு கோரிக்கை விடுத்திருந்தனர். யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் கடந்த மாதம் இடம்பெற்ற முதலமைச்சர், உறுப்பினர்கள் இடையிலான கலந்துரையாடலில், அதிகரித்த நிதி ஒதுக்கீடு வழங்குவதற்கு இணக்கப்பாடு எட்டப்பட்டிருந்தது.

கைதடியில் அமைக்கப்பட்டு வரும் வடக்கு மாகாண பேரவைச் செயலகத்தின் கட்டட நிர்மாணத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்தே, உறுப்பினர்களுக்கான மேலதிக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. புதிய ஒதுக்கீட்டின் பிரகாரம் உறுப்பினர்களுக்கு 4 மில்லியன் ரூபாவும், அமைச்சர்களுக்கு 5 மில்லியன் ரூபாவும், முதலமைச்சருக்கு 6 மில்லியன் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

ஆயினும் அதற்கான அனுமதியை வடக்கு மாகாண அமைச்சரவை கடந்த வாரமே வழங்கியுள்ளது. அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதை அடுத்து, புதிய நிதி ஒதுக்கீட்டுக்கு அமைய உறுப்பினர்களுக்கு பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதி வழங்கப்படவுள்ளது. (ற-5)

### நாடு

ரஷ்யாவின் உள்துறை அமைச்சகம் மற்றும் இலங்கையின் சட்டமும் ஒழுங்கும் அமைச்சும் இணைந்து குற்றங்களுக்கு எதிரான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவுள்ளன.

இரு நாடுகளுக்கும் இடையிலான தகவல்களைப் பகிர்ந்து கொண்டு தீவிரவாதம், லஞ்ச ஒழிப்பு, போதைப்பொருள் கடத்தல், மனிதக் கடத்தல் மற்றும் கறுப்பு பணம் ஒழிப்பு ஆகியவற்றைத் தடுக்கும் நடவடிக்கைகளுக்கு இந்த ஒப்பந்தம் வழிவகுக்கும்.

இலங்கை அமைச்சரவை இந்தப் புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு ஒப்புதலை வழங்கியுள்ளது. (ற)

# சுழிபுரம் விக்ரோறியா அணி வென்றது மைலோ கிண்ணம்

யாழ்ப்பாணம், மே 31

யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான 16 வயதுப்பிரிவு பெண்களுக்கான மைலோ கிண்ண வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அணி வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை ஸ்ரான்லிக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற இறுதியாட்டத்தில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அணியை எதிர்த்து தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி மோதிக் கொண்டது.

இதில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அணி 20:19 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது.

மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணியை எதிர்த்து யாழ்.இந்து மகளிர் கல்லூரி அணி மோதிக் கொண்டது.

இதில் யாழ்.இந்துக்கல்லூரி அணி 19:17 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்று மூன்றாமிடத்தைத் தனதாக்கிக் கொண்டது. (த-23)



விறுவிறுப்பான ஆட்டத்தின் போது

## இன்றைய ஆட்டங்கள்



யாழ்ப்பாணம், மே 31

யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் அரியாலை சனசமூக நிலையத்தின் 65 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உதயசூரியன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

மாலை 5 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் அண்ணா ஸ்ரார் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து புத்தூர் வளர்மதி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

★ ★ ★

யாழ்ப்பாணம், மே 31

வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் அராலி ஏ.ஏல் விளையாட்டுக்கழகம்,அராலி ஏ.ஏல் இளைஞர் கழகம் ஆகியவை நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் அராலி ஏ.ஏல். விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இன்று சனிக்கிழமை இடம்பெறும் மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழக 'பி' அணியை எதிர்த்து துணைவி சென்.நியூ ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

## வெற்றி பெற்ற அணிகள்

யாழ்ப்பாணம், மே 31

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் அல்வாய் மேற்கு கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் 9 பேர் பங்குகொள்ளும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இதில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றிபெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு:-

யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் இமையாணன் இளைஞர் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

விண்மீன் விளையாட்டுக் கழக அணிக்கும் கரவைச்சுடர் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் விண்மீன் விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

# 18 வயது பெண்கள் பிரிவில் சம்பியனானது அராலி சரஸ்வதி

யாழ்ப்பாணம், மே 31

யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான 18 வயதுப்பிரிவுப் பெண்களுக்கான மைலோ கிண்ண வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணி வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை ஸ்ரான்லிக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் அராலி சரஸ்வதி மகாவித்தியாலய அணியை எதிர்த்து தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி மோதிக் கொண்டது.

இதில் அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணி 28:21 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது.

மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் கொக்குவில் இந்துக்கல்லூரி அணியை எதிர்த்து யாழ்.இந்து மகளிர் கல்லூரி அணி மோதிக் கொண்டது.

இதில் யாழ். இந்து மகளிர் கல்லூரி அணி 21:20 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்று மூன்றாமிடத்தைத் தனதாக்கிக் கொண்டது. (த-23)



ஆட்டத்தின் ஒரு காட்சி

## றோயல், றோக்ஸ் அணிகள் ஆட்டங்களில் வென்றன

யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் அரியாலை சனசமூக நிலையத்தின் 65 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணிக்கும், விக்னேஸ்வரா விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணி 5:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

யாழ். ஐக்கிய விளையாட்டுக் கழக அணிக்கும், குருநகர் சென்.றோக்ஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் யாழ். ஐக்கிய விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

# 15 வயது ஆண்கள் கபடியில் பருத்தித்துறை கலட்டி வெற்றி

யாழ்ப்பாணம் மே 31

வட மாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான 15 வயதுப்பிரிவு ஆண்களுக்கான கபடிப் போட்டியின் இறுதியாட்டத்தில் பருத்தித்துறை கலட்டி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை அணி வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது. கடந்த புதன்கிழமை முல்லைத்தீவு மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் பருத்தித்துறை கலட்டி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை அணியை எதிர்த்து சில்லாலை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை அணி மோதிக்கொண்டது.

இதில் பருத்தித்துறை, கலட்டி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை அணி 25:20 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது. (த-23)




சம்பியனான 15 வயது அணியினர்

## மாவட்ட எல்லே இன்று

யாழ்ப்பாணம், மே 31

யாழ்.மாவட்ட இளைஞர் கழக சம்மேளனங்களுக்கு இடையிலான மாவட்ட மட்ட விளையாட்டுப் போட்டியின் ஓர் அங்கமான ஆண், பெண் இருபாலாருக்குமான எல்லே போட்டி இன்று சனிக்கிழமை யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம் பெறவுள்ளது. இதேவேளை ஆண், பெண் இருபாலாருக்குமான வலைப்பந்தாட்ட போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது. (த-23)

# ஐ.பி.எல். பாணியில் மகளிர் கிரிக்கெட்



மகளிர் கிரிக்கெட்டில் சிறந்து விளங்கும் வீராங்கனைகள் அடுத்த ஒன்பது மாதங்களில் ஐ.பி.எல். பாணியிலான தொடரில் விளையாடவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தொடர் குறித்து சர்வதேச கிரிக்கெட் சபைத் தலைவர் டேவ் ரிச்சார்ட்சனை டுபாயில் சந்தித்து கலந்துரையாடியதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதற்கு அனுமதியளிக்கப்பட்ட நிலையில் இந்தச் சுற்றுப் போட்டியானது உலகின் தலை சிறந்த வீராங்கனைகள் தங்கள் திறமையை வெளிப்படுத்தும் போட்டியாக இருக்கும்.

மேலும் இதற்காக ஆறு உரிமையாளர்களின் அணிகள் களம் இறக்கப்படவுள்ளதாகவும், இந்தப் போட்டிகள் சிங்கப்பூரில் 12 தினங்களுக்கு நடைபெறும் எனவும் சர்வதேச மகளிர் கிரிக்கெட் லீக் தலைவர் ஷோன் மார்ட்டின் கூறியுள்ளார்.

இந்தச் சுற்றுப் போட்டிக்கு உரிய ஆதரவையும் ஒத்துழைப்பையும் பெறும் பொருட்டு ஆஸ்திரேலியாவின் முன்னாள் உலகக் கிண்ண வீராங்கனை லீசா ஸ்தோலேக்கருடன் ஷோன் மார்ட்டின் இணைந்து செயற்படுகின்றார். (த)



சகீர்கான்

# சகீர்கானின் நீக்கம் அணிக்கு பின்னடைவு

இங்கிலாந்துக்கெதிரான டெஸ்ட் தொடரில் வேகப்பந்து வீச்சாளர் சகீர்கான் சேர்க்கப்படாதமை இந்திய அணிக்கு பின்னடைவு என்று கூறப்படுகிறது.

இந்திய அணியின் சிறந்த பந்து வீச்சாளரான சகீர்கான் தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் அசத்தலாக பந்து வீசியது மட்டுமல்லாமல் இலக்குகளைக் கைப்பற்றி அச்சுறுத்தலாகவும் திகழ்ந்தார். மேலும் நியூசிலாந்து அணிக்கெதி ரான போட்டியிலும் அபாரமாக பந்து வீசி எதிரணியை மிரட்டினார்.

2011ஆம் ஆண்டு இங்கிலாந்துக்கு இந்திய அணி சென்றபோது முதல் டெஸ்ட் போட்டி தொடங்கிய போதே அவர் காயம் காரணமாக வெளியேற அவருக்கு மாற்று வீரர் இல்லாமல் இந்திய அணி அந்த டெஸ்ட் தொடரில் 0-4 என்ற கணக்கில் படுதோல்வியைத் தழுவியது.

இந்நிலையில் தற்போது அரைகுறையாக அவர் குணமடைந்த நிலையில் இங்கிலாந்துத் தொடருக்கு அழைத்துச் சென்றால் 2011ஆம் ஆண்டு நடந்தது போல் நடந்து விடும் என்ற அச்சம் அணித் தேர்வுக்குழுவுக்கு ஏற்பட்டிருக்கலாம். அந்தக் காரணத்தினால் அவரை தெரிவு செய்யாமல் விட்டிருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. என்னவாக இருந்தாலும் ராஜஸ்தான் அணியின் அயராத வேகப்பந்து வீச்சாளர் பங்கஜ் சிங்கிற்கு டெஸ்ட் அணியில் வாய்ப்பு கிடைத் துள்ளது.

தொடர்ந்து உள்நாட்டு கிரிக்கெட் தொடர்களில், குறிப்பாக ரஞ்சி போட்டிகளில் அதிக இலக்குகளை வீழ்த்தி வரும் பந்துவீச்சாளராக அவர் திகழ்கிறார். (த)

# உலகக் கிண்ண உதைபந்தாட்ட சம்பியனுக்கு 35 மில்லியன் அமெரிக்க டொலர் பணப்பரிசு



பிரேஸில் நாட்டில் ஜூன் மாதம் 12ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள 20ஆவது உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளில் 358 மில்லியன் அமெரிக்க டொலர் பணப்பரிசு, போட்டிகளில் பங்குபற் றும் 32 அணிகளுக்கு பகிர்ந்த ளிக்கப்படவுள்ளது.

உலகக் கிண்ணப் போட்டிகளில் சம்பியனாகும் அணிக்கு கண்கவர் உலகக் கிண்ணத்துடன் சம்பியன் அணி வீரர்களுக்கு தங்கப் பதக்கங்கள் சூட்டப்படும். இதனைவிட 35 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பணப்பரிசாக வழங்கப்படும்.

இரண்டாம் இடத்தைப் பெறும் அணிக்கு வெள்ளிப்பதக்கங்களுடன் 35 மில்லியன் அமெரிக்க டொலர்களும், மூன்றாம் இடத்தைப் பெறும் அணிக்கு வெண்கலப் பதக்கங்களுடன் 25 மில்லியன் அமெரிக்க டொலர்களும் வழங்கப்படும். நான்காம் இடத்தைக் கைப்பற்றும் அணிக்கு 20 மில் லியன் டொலர்களும் கால் இறுதிகளில் தோல்வியுறும் அணிகளுக்கு தலா 14 மில்லியன் டொலர்களும் வழங்கப்படும். இரண்டாம் சுற்றுக்கு முன் னேறும் அணிகளுக்கு 9 மில்லியன் டொலர்கள் காத்திருக்கின்ற. முதலாம் சுற்றுடன் வெளியேறும் அணிகள் கூட வெறுங்கையுடன் செல்லமாட்டாது.

அந்த அணிகளுக்கும் தலா 8 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கிடைக்கவுள்ளது.

இதனைவிட உலகக் கிண்ணப் போட்டிகளில் விளையாடுவதற்கு தகுதிபெற்றுள்ள அணிகளின் பயிற்சிகள் மற்றும் ஆயத்தப் பணிகளுக்கு தலா 1.5 மில்லியன் டொலர்கள் அந்தந்த நாடுகளின் உதைபந்தாட்டச் சங்கங்களுக்கு வழங்கப்படும். (த)


# உமேஷ் யாதவின் தீவிரமான ரசிகன்

அணியின் சக வேகப்பந்து வீச்சாளர் உமேஷ் யாதவின் தீவிரமான ரசிகன் நான் என கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளர் தென்னாபிரிக்காவைச் சேர்ந்த மோர்னி மோர்கல் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில், ஐ.பி.எல். முதற்கட்ட போட்டிகள் முக்கிய அரபு எமிரேட்டில் முடிந்த பிறகு, இந்திய மண்ணில் நாங்கள் எழுச்சி பெறுவோம் என்பது தெரியும். தொடர்ச்சியாக 8 ஆட்டங் களில் வெற்றி பெற்றதுடன் இறுதிப்போட்டிக்கும் முன் னேறியதன் மூலம் எங்கள் கனவு நனவாகியுள்ளது.

கொல்கத்தா ஈடன்கார்டன் மைதானத்தில் ரசிகர்கள் அதிகளவில் திரண்டதுடன், உற்சாகமான ஆதரவும் அளித்தனர். இது போன்ற அனுபவத்தை எனது வாழ்க்கையில் இதற்கு முன்பு நான் சந்தித்ததில்லை -என்றார்.

# பங்களாதேஷில் அசத்தினால் இங்கிலாந்தில் வெல்லலாம்



இங்கிலாந்துத் தொடருக்கு தயாராவதற்கு பங்களாதேஷ் பயணம் உதவும் என்று ரெய்னா கூறியுள்ளார்.

ஐ.பி.எல். கிரிக்கெட்டில் புதன் இரவு மும்பையில் நடந்த வெளியேற்றுதல் சுற்றில் சென்னை அணி 7 இலக்குகள் வித்தியாசத்தில் மும்பை இந்தியன்சை வீழ்த்தியது. இதில், சுரேஷ் ரெய்னாவுக்கு ஆட்டநாய கன் விருது வழங்கப்பட்டது. பின்னர் நிருபர்களுக்கு பேட்டி அளித்த அவரிடம் பங்களா தேஷ் ஒரு நாள் தொடருக்கு அணித் தலைவராக நியமிக்கப்பட்டிருப்பது குறித்து கேட்கப்பட்டது.

அதற்கு அவர் பதில் அளித்தபோது:-

கடினமான இங்கிலாந்துக்கு எதிரான ஒரு நாள் தொடருக்கு தயாராவதற்கு எனக்கு கிடைத்துள்ள நல்ல வாய்ப்பு இதுவாகும். இங்கு (பங்களாதேஷ்) அசத்தினால், இங்கி லாந்து ஒரு நாள் தொடரில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த முடியும் என்று நம்புகிறேன். அதே நேரத்தில் பங்களாதேஷ் அணியை வீழ்த்துவது எளிதான விடயமல்ல. சொந்த மண்ணில் அவர்கள் சிறப்பாக ஆடக் கூடியவர்கள். அங்கு நடந்த ஆசிய கிண்ணம் மற்றும் 20/20 உலகக் கிண்ணப் போட்டிகளில் நாம் தோல்வி அடைந்தோம். எனவே இந்த தொடர் எங்களுக்குச் சவாலாக இருக்கும் என்று கூறியுள்ளார்.

மேலும், அணியின் தலைவர் பதவிக்கு பெரிய அளவில் முக்கியத்துவம் இல்லை என்று நினைக்கிறேன். ஆனால் நல்ல வீரர்கள் அணிக்கு கிடைத்து விட் டால், வெற்றிகளைக் குவிக்க முடியும். இப்போது எனது கவனம் எல்லாம் எஞ்சிய இரு ஐ.பி.எல். ஆட்டங்கள் மீதே உள்ளது. அதன் பிறகு பங்களாதேஷ் தொடருக்கு திட்டங்களை வகுக்க 12 நாள்கள் உள்ளன. எதிரணிக்கு எதிராக எப்படி, திட்டங்களை தீட்டுவது என்பது குறித்து சென்னை அணித் தலைவர் டோனி, பயிற்சியாளர் பிளமிங் ஆகியோருடன் ஆலோசனை நடத்துவேன் என்று கூறியுள்ளார். (த)

31 MAY 2014

# டோனியின் கனவு கலைந்தது; இறுதிக்குள் நுழைந்தது பஞ்சாப்




கிங்ஸ் லெவன் அணி உரிமையாளர் சிந்தா வெற்றிக்களிப்பில் பெய்லியை கட்டித் தழுவுகின்றார்.



ஷேவாக்கின் அதிரடிச் சதத்தின் மூலம் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி நிர்ணயித்த 227 ஓட்டங்களை பெற முடியாது இறுதிவரை போராடித் தோற்றது சென்னை. இதனால் இறுதிக்குள் நுழைந்தது பஞ்சாப்.

நேற்று மும்பையில் நடைபெற்ற இரண்டாவது வெளியேற்றும் சுற்றில் சென்னை அணியும் பஞ்சாப் அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சென்னை அணித் தலைவர் டோனி முதலில் களத் தடுப்பை தேர்வு செய்து பஞ்சாப் அணியிடம் வாங்கிக் கட்டினர். முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய பஞ்சாப் அணியின் ஷேவாக் அதிரடிகாட்ட அதனுடன் இணைந்த வோராவும் சென்னையின் பந்து வீச்சை அடித்து நொருக்கினார்.

இதனால் அணியின் ஓட்டம் கிடுகிடுவென உயர்ந்தது.

இதனால் 10.4 பந்துப் பரிமாற்றங்களில் 110 ஓட்டங்களை இணைப்பாட்ட மாகப் பெற்ற போது வோரா 34 ஓட்டங்களுடன் வெளியேற உள்நுழைந்த மக்ஸ் வெல் வழமை போன்று ஏமாற்றி 13 ஓட்டங்களுடன் பபிலியன் திரும்பினார்.

தொடர்ந்து அதிரடி காட்டிய ஷேவாக் 46 பந்துகளில் சதம் கடந்து அசத்தினார். தொடர்ந்தும் அதிரடி காட்டிய அவர் 18.1 பந்துப்பரிமாற்றங்களில் அணி 211 ஓட்டங்களை பெற்றிருந்த போது 58 பந்துகளில் 12 நான்கு ஓட்டங்கள், 8 ஆறு ஓட்டங்கள் அடங்கலாக 122 ஓட்டங்களைப்பெற்று ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து வந்த மில்லரும் அதிரடி காட்ட 20 பந்துப் பரிமாற்றங்களில் 226 ஓட்டங்களைக் குவித்தது பஞ்சாப் அணி. மில்லர் 19 பந்துகளில் 38 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். சென்னையின் பந்து வீச்சில் அஷிஸ் நெஹ்ரா இரு இலக்குகளையும் ஈஸ்வர் பாண்டி, மோகித் சர்மா மற்றும் ரவிச்சந்திரன் அஷ்வின் ஆகியோர் தலா ஒரு இலக்கையும் கைப்பறினர்.

இதனை அடுத்து 227 ஓட்டங்கள் என்ற இமாலய வெற்றி இலக்குடன் களமிறங்கிய சென்னை அணிக்கு முதலாவது பந்துப் பரிமாற்றத்தில் ஜோன்சன் அதிர்ச்சி வைத்தியம் கொடுத்தார்.

ஜோன்சன் வீசிய முதலாவது பந்துப் பரிமாற்றத்தின் 2ஆவது பந்தில் டியூ பிளஸ் ஸஸ் ஓட்டம் எதுவும் பெறாது வாத்து நடையை கட்டினார். தொடர்ந்து களம் புகுந்த சுரேஷ் ரெய்னா ருத்திர தாண்டவம் ஆடினார். அவரை நோக்கி வீசப்பட்ட பந்துகளை எல்லைக்கோட்டுக்கு அப்பால் அனுப்பி எதிரணி பந்துவீச்சாளர்களை திகில் அடையச் செய்தார். இவர் 15 பந்துகளில் 50 ஓட்டங்களைக் கடந்தார். இவரது அதிரடியின் மூலம் 5 பந்துப் பரிமாற்றங்களில் அணி 67 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது சிமித் 7 ஓட்டங்களுடன் நடையைக் கட்டினார். சுரேஷ் ரெய்னா களத்தில் நிற்கும் வரை வெற்றி சென்னையின் பக்கமே சாய்ந்திருந்தது. அதிரடியில் கலக்கிய ரெய்னா 25 பந்துகளில் 12 நான்கு ஓட்டங்கள் 6 ஆறு ஓட்டங்கள் அடங்கலாக 87 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது துரதிஷ்டவசமாக 'ரன்அவுட் 'முறையில் ஆட்டமிழந்து வெளியேறினார்.

தொடர்ந்து ஜடேஜாவும் மக்கலமும் இணைந்து அணியின் ஓட் எண்ணிக்கையை உயர்த்தியவேளை 12ஆவது பந்துப் பரிமாற்றத்தில் அணி 140 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது அடுத்தடுத்து இருவரும் ஆட்டமிழந்து வெளியேற உள்நுழைந்த ஹசியும் ஒரு ஓட்டத்துடன் ஆட்டமிழந்து வெளியேறினார். இருந்த போதும் அணியின் வெற்றிக்காக டோனி இறுதிவரை போராடிய போதும் வெற்றிக் கனியை அவரால் தட்டிப் பறிக்க முடியவில்லை. இவரது கடுமையான போராட்டத்டத்தின் பயனாக 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 202 ஓட்டங்களை சென்னை அணியால் பெற முடிந்தது. இதனால் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி 24 ஓட்டங்களால் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது. டோனி இறுதி வரை ஆட்ட மிழக்காது 31 பந்துகளில் 3நான்கு ஓட்டங்கள் 3 ஆறு ஓட்டங்கள் அடங்கலாக 42 ஓட்டங்களைப் பெற்றார். பஞ்சாப்பின் பந்து வீச்சில் பர்வீன்டர் ஆவாணா 2 இலக்குகளையும் மிக்ஷல் ஜோன்சன், சண்டீப் சர்மா, அஸ்கர் பட்டேல் ஆகியோர் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர். போட்டியின் ஆட் நாயகனாக நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர் தனது பழைய பாணியிலான அதிரடியின் மூலம் சதம் பெற்ற ஷேவாக் தெரிவு செய்யப்பட்டார். இதேவேளை நாளை நடைபெறும் இறுதியாட்டத்தில் பஞ்சாப் அணி கொல்கத்தா அணியை எதிர்கொள்கின்றது.

(400)


**WALK IN INTERVIEW**

BCHS

**Post (1) Office admin (Female)**

**Qualifications:** GCE 'A' Level
Knowledge in MS Office/Internet/Email
Knowledge in Accounts
Good Command of English

**Post (2) Office boy**

Age Limit: 25-35

**Date & Time For Interviews: 03 June 2014 From 10.00 AM to 4.00PM**

**Venue: British College of Higher Studies, No.50-2/1 Sirambiyadi Lane, Jaffna.**

Telephone: 021 222 4550 / 0714299935 E-mail: info@bchs.lk

(C-14097)

அனுமதிக்கப்பட்ட அரசாங்க கட்டணம்

**இதோ ஓர் அரிய சந்தர்ப்பம்!**

மிகக் குறைந்த செலவில் சவுதி இராச்சியத்தில் ஜித்தா, தாகிர், மக்கா, றியாத், தமாம் ஆகிய நகரங்களின் நகர சபையில் சாரதிகள், சுத்திகரிப்பாளர்கள் உடனடியாகத் தேவை.
(Valadiya Driver, Cleaner)

**சம்பளம்** : 1000 (உணவு உட்பட) + OT
**ஒப்பந்த காலம்** : 3 வருடங்கள்
**வேலை நேரம்** : 8 மணித்தியாலங்கள்

மருத்துவ வசதி, தங்குமிட வசதி, போக்குவரத்து அனைத்தும் சவுதி இராச்சியத்தின் சட்டத்துக்கு அமைய வழங்கப்படும்.

கைவசம் Visa உள்ளதால் உடனடியாக பயணம்

**தொடர்புகளுக்கு: அரபியன் கல்ப் என்டபிரைசஸ்**
S/L B.F.E, No. 969
No 72/26, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை
கொழும்பு-10
Lanka Voice - 0779527575 (யாழ்ப்பாணம்)
Lanka Voice - 0770584658 (வவுனியா)
**விண்ணப்ப முடிவுத் திகதி: 02.06.2014**

(C/14094)



**கணினி மலிவு விற்பனை**

HP COMPUTER (FULL SET)
19,750/
ONE YEAR WARRANTY
இலவசம்: NK PHONE (1280)

ST.ANTONY'S
187,K.K.S ROAD
JAFFNA TOWN.
021-222-4865
0750698608



**- ALLIANCE FRANÇAISE DE JAFFNA -**
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி af Alliance Française de Jaffna

கற்பதற்கு **FRENCH EMBASSY** இன் கீழ் இயங்கும் உலகின் முதல்தர சர்வதேச நிறுவனம் **AF** மட்டுமே. 1884 **PARIS** இல் நிறுவப்பட்டது. யாழில் 1976 முதல். 136+ நாடுகளில் 1040+ கிளைகள். உயர் தகுதியுடைய ஆசிரியர்கள். அங்கீகரிக்கப்பட்ட **CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS.** பிரெஞ்சு மொழிபெயர்ப்புகள். AUDIO-VISUAL AIDS, பிரமாண்டமான நூலகம்

பிரான்ஸ் செல்வோர் விரையுங்கள்... உடன் அழையுங்கள்...
**021 222 8093** 61, கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

கச்சேரி ➡ எக்காளத்தொனி கிறிஸ்தவ ஆலயம் ➡ Alliance Française.
ஆரியகுளம் ➡ றக்கா றோட் (J/John Bosco's School, British Council) ➡ AF



**இலவசமாக ஆங்கிலம் கற்க அரிய வாய்ப்பு**

CAMBRIDGE ENGLISH

Pre-starters முன்பள்ளி, தரம் 1, 2 | Young Learners தரம் 03, 04, 05
Teens | தரம் 06-11 O/L தயார்ப்படுத்தல் | General User ஏனையோர்
சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ். அடிப்படையில் இருந்து கற்கலாம்.
பிரிவொன்றில் 07 மாணவர்கள் மட்டுமே. மல்ரி மீடியா வசதியுள்ள வகுப்பறை.
பாட அலகு ஒன்று இலவசமாகக் கற்கலாம்.

ALISON DIGILITE

51/3, (பொற்பதிப் பிள்ளையார் கோவிலருகில்) பொற்பதி வீதி, கொக்குவில். 0779866409



**மிக குறைந்த விமான கட்டணங்கள்**

| | | |
|---|---|---|
| கொழும்பு - மதுரை | -16500 | RTN |
| கொழும்பு - சென்னை | -21900 | RTN |
| கொழும்பு - திருச்சி | -22400 | RTN |
| கொழும்பு - டோகா | -26000 | O/W |
| கொழும்பு - பெங்களூர் | - 27600 | RTN |
| கொழும்பு - மலேசியா | -30000 | RTN |
| கொழும்பு - சிங்கபூர் | -30200 | RTN |
| கொழும்பு - பிரான்ஸ் | -45500 | O/W |
| கொழும்பு - லண்டன் | -44800 | O/W |
| கொழும்பு - சுவிஸ் | -83500 | RTN |
| கொழும்பு - கனடா | -103700 | o/w |

வீட்டில் இருந்தவாறே பெற்றுக்கொள்ளலாம்

யாழ் நகரில் நம்பிக்கையான பாதுகாப்பான 24 மணித்தியால சேவை வழங்குனர்
**Nation Popular Travels & Tours**
#128, Brown Road, Jaffna
128 பிறவுண் வீதி யாழ்ப்பாணம்
0114375357, 0773083820
**0214 920 920**
நீங்கள் பறந்து செல்ல நாங்கள் சிறகுகளாகின்றோம்


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 31.05.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.